பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று

வருட சந்தா முன் பணம் ...	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1–12
வெளிநாட்டிற்கு ,, ...	ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வருஷ மார்கழி 18-உ (2—1—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 36

உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமானவிலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,

ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்

அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,

A. முருகேச முதலி.

No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.

ஊத்துக்குளி S. I Ry.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-வரு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதராஸ் தென்னிந்தியா

மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர்-மதராஸ்.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத் தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,

மூத்துசாமி செட்டியார்,

கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,

கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,

பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,

(திருப்பூர் மார்க்கம்.)

வில்வாதி இலேகியம்.

பித்த வாயுவுக்கும் அஜீரணத்துக்கும்.

ஆகாரம் ஜீரணமாகாமல் ஏற்படும் வயிற்றுப் பிசம், வயிற்றுவலி, ஏப்பம், மார்நோய், பக்க நோய், முதலியவைகளை மூன்று பொழுதில் நீக்கக் கூடியது. பத்தியமில்லை.

40 வேளை சாப்பிடக்கூடிய இலேகியம் ரூ, 1—8—0.

கீழ்காய்நெல்லித் தைலம்.

இத் தைலத்தை வாரம் இருமுறை தலை முழுகுவதனால் மேக, பித்த, உஷ்ணங்களால் ஏற்படும் கண்ணெரிச்சல், கை கால் எரிச்சல், மயக்கம், தலைவலி, மயிர் உதிர்தல் முதலியவைகள் நீங்கும். மூளைக் குளிர்ச்சியும் கொழுமையையும் உண்டாக்கும். நாள்தோறும் சிகையில் தடவி சீவிக்கொள்ளலாம்.

கீழ்காய் நெல்லித் தைலம்

8 பலம் டின் 1-க்கு ரூ. 1—4—0

ஷை டின் 3-க்கு ரூ. 3—4—0

வி. பி. தபாற் செலவு வேறு

எம். சி. நடேச வைத்தியர்,
சுதேச ஔஷதசாலை,
கு. மேல வீதி, கும்பகோணம்.

"ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருபுகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானந்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0

1 அணா ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனும்.

[மாச சஞ்சிகை] ஆனந்த விகடன், ஆபீஸ்.
சௌகார் பேட் போஸ்டு, ஜி. டி. மதருஸ்.

இனும்! இனும்!!
டேபில் டயம்பீஸ் இனும்!!!



(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனும் டைம்பீஸுடன் ஷை ரிஸ்டு வாட்சு விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15-A பீட், அண்ணா பிள்ளைத் தெரு,
மதராஸ்.

[illegible]

இது சென்ற மஹா யுத்தத்தின்போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா விநோதப் பாதிரி ரஸ்புட்டீனின் மெய்யான சரித்திரம். இதனால் ஆஷாடபூதிகளின் வேஷத்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்.
படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மேஸ்மேரிஸா
படங்களுடன் விலை ரூ. 1 8 0

தபால் பெட்டி நெ. 248,
சென்னை.

ஜீர்ணாமிர்தம்.

தங்கம் சேர்ந்த ருஜிகர ராஜ ஔஷதம்.

அஜீர்ணத்தையும், மலச்சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுபடும். பித்தம், இருமல், வயிற்றுப் பிசம், குத்தல், மூலம், பீனிசம், மார்பெரிச்சல், வாசம், புளியேப்பம், ஜ்வரகாசங்கள் முதலியவற்றை உடனே குணபடுத்தி விடும். நல்ல ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.

பிரஜானுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

நாடுமதித்த நவகுண மிளகு.

1. பித்த மயக்கங்கள் காணாதோடும். 2. ஈரக்குலைவலி, மார்வலி, நீங்கிவிடும். 3. அமட்டல், வாந்தி, விக்கல் க்ஷணத்தில் நிற்கும். 4. உஷ்ணத்தால் ஏற்பட்ட போக்கு, அஜீர்ணம் தீர்ந்துவிடும். 5. வைசூரி, ஜுரம், ஜன்னி, பிரஸவ அறை, இக்காலங்களில் ஏற்படும தாகம், வறட்சி உடனே நிற்கும். 6. ரயில், கப்பல், வண்டி முதலிய பயணத்தில் ஏற்படும் 1, 3 லக்கத்திலுள்ள துர்க்குணங்களுக்கு சஞ்சீவியாக பயன்படும். 7 சுருட்டு, சிகரெட் முதலியன அதிகம் உபயோகப்படுத்துவதால நேரும கெடுதல்களைபோக்கடிக்கும். 8 லாகிரிவஸ்துக்களால் ஏற்படும் மயக்கங்களை உடனே தணிக்கும். 9. பிரசங்கிகள், வக்கீல்கள், மாணவர்கள் இவர்களுக்கு ஏற்படும் நாவறட்சியை நீக்கவும், சாதாரண தாகத்தை தணிக்கவும், பின்னும் மூளைக்கு அதிக வேலை தந்து, ஆவியை போக்கி ஆன்ம சக்தி குறைந்து அதனால் உண்டாகும் தீமைகளுக்கு வைரியாகும்.

குறிப்பு:—இது சாதாரண முழு மிளகை அப்படியே சொரூபம் மாறாமல் பக்குவம் செய்தது. ஒருநாளில் எத்தனை தடவையேனும், தடவைக்கு எத்தனை மிளகேனும் வியாதி இருப்பினும், இல்லையேனும் பயமின்றி உபயோகிக்கலாம்:

அரை அவுன்ஸ் பாட்டல் 1க்கு 0—8—0
" " டஜன் 5—0—0

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும் வி. பி-ல் 3 பாட்டல்களுக்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது.

ஹக்கீம் ம. அ ஷம்ஷுதீன் சாஹிப்,
யூனானி தமிழ் சித்தவைத்தியம்,
மாயவரம், (தஞ்சாவூர் ஜில்லா S.I.R.)

எதுவேண்டும்?

மணவாழ்க்கையின் மர்மங்கள்	ரூ. 2—4
கர்ப்ப சாஸ்திரம்	1—8
மனோவசிய சாஸ்திரம்	1—8
ரதி சாஸ்திரம்	1—4
ஸ்திரீ புருஷ ரகசியம்	1—0
சதிபதிகளின் மர்மம்	1—0
சரீர மர்ம சாஸ்திரம்	1—0
ரதிமதன சிங்கார ரஹஸ்யம்	1—0
மதனரதி ரஹஸ்யம்	1—0

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாதவெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாண மாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.

64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1 .

மாணிக்க விலாஸம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி, மதராஸ்

நம்பிக்கையான வியாபாரஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள்
கதர் துணிகள் மருந்துகள்
கடிகாரம் ஷரட் சாமான்
முதலிய இதர எல்லா
சாமான்களும்
கிடைக்கும்.
முன்பணத்துடன் ஆர்டர்
அனுப்பவும்.

விலாசம்:—

என். தண்டபாணி கம்பெனி.

தபால் பெட்டி 292.
6–99 பவழக்காரத்தெருவு,
சென்னை.

பார்ப்பனரல்லாதார் 10-வது மாகாண மகாநாடு.

வரவேற்புக் கழகத்தலைவர், உத்தமபாளையம், திருவாளர்

எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.

25—12—26ல் செய்த சொற்பொழிவு.

சகோதர உறுப்பினர்களே! சீமாட்டிகளே! கனவான்களே!

வரவேற்புக் கழகத்தின் சார்பாக இந்த பண்டைக்காலச் சரித்திரப் பெருமையுள்ள நகரத்திற்குப் பார்ப்பனரல்லாதார் 10வது மாகாண மகாநாடு கூடும் சமயத்தில் நான் உங்களை வரவேற்பதில் பெரு மகிழ்ச்சி யடைகிறேன். தென்னிந்திய மக்களுடைய தேசிய வாழ்க்கையில் மாபெருங் காரியங்கள் நடந்துள்ள இவ்வைகையாற்றின் கரையில் இங்கு நாம் கூடியிருப்பது ஒரு சாதாரணமான பொருத்தமாத்திரமல்ல. இந்த மகாநாடானது ஒரு நல்ல முக்கிய கால ஆரம்பக் குறி என்று நாம் நம்பக்கூடாதா?

போதுமான கால அளவு இல்லாததினால் இங்கு வந்திருக்கிறவர்களுடைய பெருமைக்குத் தக்கவாறு நாங்கள் விரும்பியபடி தகுந்த உபசாரம் செய்துகொடுக்க முடியாமலிருந்துவிட்டது. நாங்கள் செய்ததில் குறைபாடுகளிருப்பின் நீங்கள் மன்னிப்பதோடு எங்களால் கூடியதைச் செய்ததையும் நீங்கள் பெரிய மனதோடு ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

நாட்டின் தொண்டுக்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவு செய்த தேசத்தொண்டர்களாகிய திருவாளர்கள் டாக்டர் டி. எம். நாயர் பெருமான், சர். பி. தியாகராயச் செட்டியார் அவர்கள் ஆகிய இருவர்களால் இப்பெரிய பார்ப்பனரல்லாதார் இயக்கமானது பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டது.

இந்த இயக்கமானது தேசீய இயக்கமாகவும் ஜனநாயக இயக்கமாகவும் இருக்கிறது. பற்பல ஜாதியார்களையும் வகுப்பார்களையும் தங்கள் தங்கள் நீண்டகால அறியாமையிலும் தூக்கத்திலுமிருந்து எழுப்பி, அரசியல் முறைகளையும் ஒழுக்க வழிகளையும் ஞாபகப்படுத்தி, அதனால் ஜனசமூக வாழ்க்கையில் அவரவர்களுக்கு உரிமையாயுள்ள நிலைகளைப்பெற்று தேசீய முன்னேற்றத்திற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் உதவி புரியச்செய்வதற்காகவும் இந்த இயக்கமானது தொடங்கப்பெற்றது. இது எவ்விதமான குறுகிய அரசியற் கொள்கையையாவது அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பாருடைய பகையையாவது ஆதி காரணமாகக்கொண்டதல்ல. தென்னிந்தியாவிலுள்ள எல்லா வகுப்பாருடைய கல்வி, சமூக வாழ்க்கை, சிக்கனம், கைத்தொழில், விவசாயம், அரசியல் முறை முதலியவற்றின் வளர்ச்சிகளின் முன்னேற்றத்திற்காகத் தொடங்கியுள்ளது.

நமது இயக்கத்தின் அரசியற் கொள்கையானது சமாதானமானதும், உரிமையுள்ளதும், சட்ட வரம்புக்குட்பட்டதுமான வழிகளிலே பிரிட்டிஷ் அரசிற் சேர்ந்த ஒரு பாகமாகச் சுயராஜ்யத்தை எவ்வளவு சீக்கிரத்தில் பெறமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் பெறுவதேயாகும். இவைகளினாலே நாம் செய்யப்புகும் காரியங்கள் எல்லாத் துறைகளையும் சார்ந்து இருப்பதாகக் காணலாம். இத்துடன் அரசியல் முயற்சிகள்மட்டுமல்லாமல் மக்களுடைய எல்லாவித முயற்சிகளும் சேர்ந்திருக்கின்றன. கடைசியாக அனைவருக்கும் சமத்துவம் வேண்டுமென்பதே நமது இயக்கத்தின் அடிப்படையான கருத்து என்று நான் சொல்லுவேன். நிற்க, இவ்வகையான பெரிய இயக்கங்கள் எப்பொழுதும் தன்னலங்கருதிய ஏதாவது சில இயக்கத்தோடு முரண்படுவது சரித்திர அனுபவம் என்று நான் சொல்லுவேன். இவ்வியக்கத்தின் தொடக்கத்தில் மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தமானது நடவடிக்கைக்கு வந்தது. அந்த விரிவான தேர்தல் முறையை நாம் பின்பற்றிச் சீர்திருத்த சட்டசபைக்கு நாம் பெரும் தொகையினராக அனுப்பப்பெற்றோம்.

மற்ற மாகாணங்கள் சீர்திருத்தத்தை கையாள மறுத்து முட்டுக்கட்டையைத் தங்களுடைய கொள்கைத் திட்டமாகக்கொண்டிருக்கையில் நாம் சென்னையில் சட்ட வரம்புக்குட்பட்ட வழிகளினாலேதான் மேம்பாட்டையடையலாமென்று நம்பி, அரசியல் முறையை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம்.

இந்த மாகாணத்து மக்களுடைய நன்மைக்காகச் சட்டப் புத்தகத்தில் நம்மால் இணைக்கப்பட்ட பற்பல சட்டங்களே நமது கொள்கைத் திட்டத்தின் அறிவுக்குப் போதிய சான்றாகும். சுயராஜ்யக் கட்சியின் ஒரு பகுதியார் நமது கொள்கைத் திட்டத்தின் அனுபவப் பெருமைகளைக் கண்டு தமது கொள்கையைச் சீர்திருத்தத்தின் சார்பாக மாற்றிக்கொண்டிருக்கிறது நமக்கு திருப்தியை விளைவிக்கிறது.

பார்ப்பனரல்லாதாருக்குத் தக்க சமயம் வாய்த்தால் எத்தகைப் பொறுப்பானநிலையிலும் ஏற்றபடி நடந்துகொள்ளத்திறமையுண்டு என்பது பிறருக்கு இந்தச் சீர்திருத்தத்தை நாம் நடத்திக் காட்டியதால் செவ்வனவே விளக்கியிருக்கிறோம். இரட்டையாட்சியின் குறுகிய வரம்புக்குள்ளாக இந்த இயக்கத்தின் சில நோக்கங்களை நாம் அடையப் பெற்றோம்.

தேர்தல் காலத்தில் பார்ப்பனர் செலுத்திய பாணம் நமது கொள்கைகளையும், நோக்கங்களையும் முழுதும் 'மாறுபாடாக வாக்காளர்களிடத்தில் சொன்னதேயாகும். அவர்கள் நாம் உத்தியோகங்களை விரும்பியதாகவும், வகுப்பு இயக்கத்தைப் பார்ப்பனரைப் பகைக்குங் கொள்கைத் திட்டமாக நாம் கொண்டதாகவும், நம்முடைய நன்மையின்பொருட்டு சில வகைகளில் அரசாங்கத்தாரோடு நாம் ஒத்துழைத்ததற்காக நாம் அரசாங்கத்தார் போக்குப்போல நடந்து அவர்களை யாதரிப்பவர்களென்று சொல்லியும் நம்மை எப்பொழுதும் இகழ்ந்துரைக்கின்றார்கள். இவ்வாறாக சட்டசபைத் தேர்தல் காலத்தில் தங்கள் முழு பலத்தையும் நம்மை இகழ்வதில் செலுத்தி வாக்காளர்களிடம் சொன்னார்கள்.

இந்துமத தர்ம பரிபாலன சீர்திருத்தச் சட்ட விஷயமாக போட்டி ஏற்பட்டது. மேற்படி போட்டி ஒத்துக்கொள்ளப்படவில்லை. இருந்த போதிலும் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மடாதிபதிகளும் எதிரிகளும் முறையின்றிக்கூடிக் கொண்டு வேலை செய்தார்கள். ஆரம்ப முதல் கடைசி வரையில் இந்தத் தேர்தலில் நம்மையும் நம் கொள்கைத் திட்டங்களையும்பற்றி பலவகையிலும் புரட்டாக எடுத்துச்சொல்லிப் போட்டி போட்டார்கள். அதன் பயனாகச் சட்டசபையில் நமது கட்சியாரின் தொகை குறைந்தது. நமது எதிரிகள் இதனால் மகிழ்ந்து தேச மக்களின் உள்ளம் இந்த இயக்கத்திற்கு விரோதமாக இருப்பதாகவும் வகுப்பியக்கம் அழிந்ததென்றும் சொன்னார்கள்.

வகுப்பியக்கம் அழிந்ததா என்பதைப்பற்றி ஆராயுமுன்பதாக நம்மை இழிவுபடுத்தும்பொருட்டு நமக்குத்துரோகமாக வெளிப்படுத்திய சில தப்பு எண்ணங்களை நீக்கவேண்டுமென்று நினைக்கிறேன். நம்முடைய இயக்கமானது ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு எதிரிடையானதென்று சொல்லப்படுகிறது.

நம்மீது கொண்டுவரப்பட்ட இந்த ஆதாரமற்ற குற்றத்தை மறுதலிக்கவேண்டும். நமது இயக்கமானது நெடுங்காலமாகத் தத்தம் சமத்துவ உரிமைகளை இழந்துபோன அநேக வகுப்பார்களின் முன்னேற்றத்திற்காகவே இருக்கிறது என்று சொல்லுவோம். நாம் முன்னமே சொன்னபடி இத்தகைய இயக்கங்கள் எல்லாம் தன்னலங் கருதுவாரொடு முரண்படவேண்டியது வரும். இவ்வாறே பல நாடுகளிலும் பல காலங்களிலும் இவ்வித முரண்பாடுகள் ஏற்பட்டு இருக்கின்றன. ஐரோப்பாவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பொதுமக்களுக்கும் குருக்களுக்கும் சண்டை ஏற்பட்டது. 18வது நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் குடிகளுக்கும் அதிகார வர்க்கத்தாருக்கும் ஏற்பட்டது. ருஷ்யாவில் குடிகளுக்கும் தன்னல ஆட்சிக்கும் ஏற்பட்டது. தற்காலத்தில் ஐரோப்பாவில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நமது மாகாணத்தில் நமது இயக்கத்திற்கும் பிராமணீயத்திற்கும் ஏற்பட்டு இருக்கிறது.

பிராமணீயமானது மற்றொரு வகுப்பைத் தன் புறத்தித் தன் வகுப்பை முன்னுக்கிக்கொள்ளநிற்கும் வரையில் இந்தப் போராட்டம் ஒழியாது. நாம் எல்லா வகுப்பாருக்கும் சமத்துவ உரிமை வேண்டுமென்று ஆரம்பமுதல் பறை சாற்றிக் கொண்டிருக்கிறோமென்று மறுமுறையும் நான் சொல்லுவேன். இதையடைவதற்கு நாம் பாடுபடவேண்டியது கொஞ்சமல்ல. எந்தச்சாதியாராவது வகுப்பினராவது தாங்கள் வெகுகாலமாக அனுபவித்து வந்தஉரிமைகளை இழக்க மிகப் பாடுபடாமலிணங்கமாட்டார்கள்.

இனி வகுப்பியக்கம் ஒழிந்ததாவென்று கவனிப்போம். நம் எதிரிகள் அது அழிந்து புதைக்கப்பட்டதென்று சொல்லுகிறார்கள்.

இவர்கள் இப்படிச் சொல்வது தாங்கள் ஏமாற்றமடையவும் பிறரை ஏமாற்றவுமே. ஆனால் உண்மை அப்படியல்ல. நம் தேசத்தில் வகுப்பு இயக்கம் எப்பொழுதும் இருந்ததைவிட இப்பொழுதுதான் அதிகமாயிருக்கிறது. கடந்த தேர்தலில் ஐக்கிய மாகாணங்களில் வகுப்புப் பிரிவினைமிகுந்திருப்பதாக சர். டேஜ் பகதூர் சாப்ரு அவர்களே மிக்க வருத்தப்பட்டுச் சொன்னார்கள். அன்றியும் முதலாவதாக வகுப்புப் பிரிவினையும் இரண்டாவதாக இயக்கப் பிரிவினையும் மூன்றாவதாக நாட்டின் முன்னேற்றமும் கருதப்பட்டதாக அவர் கூறினார். ஆனால் நமது மாகாணத்தில் கட்சிகளின் கொள்கைத்திட்டங்கள் எப்படியிருப்பினும் வகுப்பு இயக்கத்திட்டமே எல்லாவற்றிலும் முதன்மை பெற்றிருந்தது. இப்பொழுது சட்டசபைக்குப் போயிருக்கிற அநேக பார்ப்பனரல்லாத உறுப்பினர்கள் இதற்கு பத்தாண்டுகளுக்கு முன்னர் தேர்தலில் நின்றிருந்தால் வெற்றி பெற்றிருக்க முடியாதென்று உறுதியாகச் சொல்லுவேன். சட்டசபைத் தேர்தலுக்கு காங்கிரசின் சார்பாக உறுப்பினர்களை நியமிக்கும் கழகமானது வகுப்பு இயக்கத்தையே காரணமாகக்கொண்டு வெற்றிபெற்றதாக வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ளாவிட்டாலும், அக்காரணத்தாலேயே வெற்றி பெற்றார்களென்பது உண்மை. முன்னிருந்த மந்திரிகளின்பேரில் சாற்றப்பட்ட குறை

யானது வகுப்பு இயக்கந்தான்! ஆகையால் அந்த மந்திரிகளை மாற்ற அவர்கள் பலவகைகளிலும் பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள்.

அப்படிச் செய்தும் புதிய மந்திரி கூட்டத்தார் கூட பழைய மந்திரி கூட்டத்தாரைப்போலவே வகுப்பு இயக்கத்தைக் கொண்டவர்களாயிருப்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. நண்பர்களே! நாம் பிராமணர்களுக்கு விரோதிகளில்லை. ஆனால் பிராமணர்கள் மட்டும் ஆதிக்கம் அடைவதை ஒத்துக்கொள்ள முடியாது. நாட்டின் முன்னேற்ற வழிகளுக்குப் பல இடையூறுகள் முன்னமே இருக்கின்றன. நம் நாடு ஈடேறுவதற்கு எல்லா வகுப்பாருடைய ஒற்றுமைகளோடு பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் ஒத்துழைப்பும் சேரவேண்டியது அவசியமே. இவ்விரண்டு வகுப்பாரும் இயற்கையாகவும் உடனேயும் ஒன்று சேரவேண்டும். நம்முடைய பிராமண சகோதரர்கள் தங்கள் பிறப்புரிமையினால் மட்டும் மேன்மையுண்டாகிறதென்ற தப்பெண்ணத்தை யொழித்தாலொழிய நமக்குள் ஒற்றுமை ஏற்பட வழியில்லை.

சீமாட்டிகளே! கனவான்களே! கடந்த தேர்தலில், நமது இயக்கம் பெரிய வெற்றிபெறாவிட்டாலும் நமது கொள்கைத் திட்டமானது சற்றும் அசையாமலும் அழியாமலுமிருக்கிறது. இந்தக் குறைவு நமது இயக்கத்தால் நமது நாட்டில் போதுமான கட்டுப்பாடான வழியில் கிளர்ச்சி செய்யாததாலும் வாக்காளர்களை முற்றும் கவனியாது விட்டதாலும் உண்டானது.

ஆகையால் இந்த மகாநாட்டின் முதல்வேலை நம்நாடு முழுவதும் நமது இயக்கத்தைத் திருத்தி அமைத்துக் கிளைச் சங்கங்களையும் நிலைநாட்டி பத்திரிகைகளினாலும் பிரசங்கங்களினாலும் வாக்காளர்களுக்கு உண்மையை அறிவுறுத்த வேண்டியதேயாகும். அடுத்த தேர்தல் காலத்திலாவது மற்ற எல்லா இயக்கத்தாரும் நம்மை ஒன்று சேர்ந்து எதிர்த்தபோதிலுங்கூட அவர்களைவிட அதிகத் தொகையினராக நம்மவர்கள் சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெறுமாறு நம்மை அமைத்துப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் சுய ஆளுகைக்கு மாற்றிய (Transferred departments) இலாக்காக்களில் நம்முடைய நோக்கங்களைப் பரிபூரணமாக நிறைவேற்றுவதுடன் சுய ஆளுகைக்கு மாற்றப்படாத இலாக்காக்களுடனும் போராடலாம்.

கனவான்களே! சென்ற பத்து ஆண்டுகளாக நாம் அரசியல் முறையிலேயே அதிக காலத்தைக் கழித்ததால், அதனிலும் அதிக முக்கியமான மற்ற முயற்சிகள் கவனிக்கப்படவில்லை. இனி நம் வேலை சமூக வாழ்க்கையிலும் சிக்கனத் துறையிலுமிருக்கிறது. தீண்டாமை, மதுவிலக்கு சிறிய தொழில் வளர்ச்சிகள் முதலிய திட்டங்கள் நமது முழு கவனத்தையும் கவரவேண்டும்.

தீண்டாமை.

நமது இந்து சமூகத்திலுள்ள எல்லாத் தீங்குகளிலும் மிகக்கொடியது தீண்டாமையேயாகும். அதை நீக்கினாலொழிய, நம்சமூகத்தில் பற்பல வகுப்பாருக்குள்ளும் சகோதர உணர்ச்சி உண்டாவதற்கு யாதொரு வழியுமில்லை. ஆகையால் நாமிந்த வழியில் பெருமுயற்சி செய்ய வேண்டும். பற்பல வகுப்புப் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களிலும் விளையாட்டுக் கட்டங்களிலும் ஒன்றாய்ச் சேர்த்துச் சிறுவயதிலேயே சகோதர உணர்ச்சியை உண்டுபண்ணுவது, தீண்டாமையை ஒழிக்கும் வழிகளில் ஒன்றாகும். தீண்டாதவர்கள் என்று சொல்லப்படுவாருடைய மக்களை ஏற்றுக்கொள்ளாத பள்ளிக்கூடங்களுக்கும் கலாசாலைகளுக்கும் அரசாங்கத்தார் உதவிப் பணங் கொடுத்து அங்கீகாரம் செய்யாமல் மறுத்த இவ்வழியில் உதவிசெய்யவேண்டும்.

சத்திரங்களையும் கோயில்களையும் மற்றப் பொது நிலையங்களையும் நடத்துகிற அதிகாரிகள் வகுப்புப் பிரிவினையைக்கருதி எவரையும் சேர்க்க மறுக்கக்கூடாது.

மது விலக்கு.

உலகமுழுதும் தொழிலாளர்கள் பெரும்பான்மையும்கள் முதலிய மயக்கக் குடிவகைகளை உட்கொள்ளும் கெட்ட பழக்கத்தில் ஈடுபட்டவர்களாயிருக்கிறார்கள் என்பது உலகமறிந்தவுண்மை. நம்நாட்டிலும் அது இருக்கிறது. தொழிலாளர்கள் வருவாயிற் பெரும் பகுதியை இவ்வகையில் விரயமாக்கிச் சுகத்தையுங் கெடுத்துத் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் நல்வாழ்க்கையடையாமற் போகிறார்கள். தேச சமூகத்தின் ஒழுக்கத்தையும், சுகத்தையும், பொருளையும் அழித்துக் கொண்டிருக்கிற இக்கேடுகளை யொழிக்கும் வகை வழிகளைக் கண்டுபிடிப்பது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

நமது நாட்டுக் காளையர்கள் நாடெங்கும் சென்று குடியின் கேட்டைப்பற்றி மக்களுக்கு எடுத்துச்சொல்லிப் பொதுநலத் தொண்டுபுரியும் சமயம் இதுவேயாகும். இந்தக்கேடு ஒழியும் பொருட்டு அரசாங்கத்தார் மதுவிலக்கால் தங்களுக்கு ஏற்படும் வருவாய்க் குறைவைப் பொருட்படுத்தாது நம்முடன் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

சிறு கைத்தொழில்கள்.

இந்தியா பெரும்பான்மையும் வேளாண்மை நாடாகவிருக்கிறது. பயிர் விளைவானது பெரிதும் காலமழையைப் பொறுத்திருக்கிறது. பயிர்த்தொழிலாளர்களுக்குப் போதுமான ஒழிவு நேரமிருக்கிறது. பருவமழையில்லாதபோதும் அவர்களுக்கு யாதொரு வேலையுமில்லை. இவர்கள் கொட்டை நூற்றல் போன்ற சிறிய கைத்தொழில்களையாவது கைக்கொண்டால் சிறு ஊதியமாவது கிடைக்கும். சிறுமிகளுக்கும் சிறுவர்களுக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கொட்டை நூற்றலை கட்டாயப்பாடமாக வைக்க வேண்டும். சிறு கைத்தொழிலாற் செய்யக்கூடிய கதர்போன்ற மற்ற எல்லாச் சாமான்களையும் வாங்கி ஆதரிக்கவேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

நீர்ப்பாசனம்.

நம்நாடு பயிர்த்தொழில் நாடாகையால் நமது செழிப்பு பரந்த நீர்ப்பாசன முறையைப் பொறுத்திருக்கிறது. இன்னும் அதிகமான நீர்ப்பாசனத்திட்டங்களைத் தொடங்கியும் வீணாக போகும் தண்ணீரைத் தேக்கும் பொருட்டு ஏரிகளைக் கட்டிக்கொடுத்தும் உதவி புரியுமாறு அரசாங்கத்தாரை வேண்டிக்கொள்ளுகிறோம். துங்கபத்திரை, கிருஷ்ணா நீர்ப்பாசனங்கள் இலட்சக்கணக்கான எக்கர்களுக்குப்பாயும். கள்ளர் நாட்டு நிலங்களை நஞ்சையாக்க மேற்கு மலைத்தொடர்ச்சியிலுள்ள கல்லாறு, பம்பையாறுகளின், தண்ணீரைத் தேக்கித் திருப்புவது போன்ற சிறிய திட்டங்களுமிருக்கின்றன. இவ்வாறு செய்தால் அந்தக் குடிகள் செழிப்பதுமன்னியில் இந்த ஜில்லாவில் கிரிமினல் ஜாதியார் சட்டத்தை நடத்துவதும் அவசியமாயிருக்காது.

கோயில் புகுதல்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் பரவியிருக்கிற மற்றொரு பெருந்தீங்கு ஒன்றுண்டு. அதாவது நாடார் சகோதரர்கள் கோயிலுக்குள் விடப்படாததால் வருந்துகிறதேயாகும். அவர்கள் கோயிலுக்குள் புகுவதற்கு உதவியாகப் பொது மக்களுக்கு நல்லெண்ணம் உண்டாகும்படிக் கிளர்ச்சி செய்து இந்த நெடுங்காலக்குறைவை நீக்க நாம் வெகுபாடுபடவேண்டும்.

சீமாட்டிகளே! கனவான்களே! நாம் யாவரும் மதிப்பு வாய்ந்த அவைத்தலைவர் சொற்பொழிவைக் கேட்க ஆவலோடிருப்பதால் உங்களை இன்னும் காத்திருக்கச் செய்யமாட்டேன். நான் இதை முடிப்பதற்குமுன், நமது எதிரிகள் நமது இயக்கத்தின் குரல்வளையை நெரிக்கத் தங்களால் கூடிய வழிகளெல்லாம் முயன்றுகொண்டிருக்கும் இந்த நெருக்கடியான நிலைமையில் நாம் இங்கு கூடியிருக்கிறோம் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

ஆகையால் பார்ப்பனரல்லாதார் அனைவரும் ஒரே மனதாய் ஒற்றுமைப்படவேண்டும். நம்மைக்கெடுக்க நம் எதிரிகள் செய்யும் முயற்சிகளை அழிக்கவேண்டும். நமது பார்ப்பனச் சகோதரர்கள் தங்களுக்குள் அரசியல் முறையில் எவ்வளவு மாறுபாடுகளிருந்தபோதிலும் அவற்றைக் கவனியாது தங்கள் வகுப்பின் முன்னேற்றத்திற்காக எவ்வளவு ஒற்றுமையுடன் வேலை செய்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோமல்லவா? அரசியல் முறையின் கொள்கைத் திட்டத்திலுள்ள மாறுபாடுகளை பொருட்படுத்தாது நம்முடைய வகுப்பார் முன்னேற்றம் அடையச்செய்ய, நாம் யாவரும் வித்தியாசமின்றி ஒற்றுமைப்பட்டு உழைக்க வேண்டியது ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாருடைய முக்கிய கடமையாகும். ஏனென்றால் பார்ப்பனரல்லாதார் இயக்கம் அரசியல் வளர்ச்சிக்கு மாத்திரமல்லாமல் சமூக வாழ்க்கை, கல்வி சிக்கன முறை முதலியவைகளுக்காகவும் பாடுபடுகிறது.

வரவேற்புக் கழகத்தின் சார்பாக, பல்வேறு அரசியல் கொள்கைத் திட்டங்களையுடையவர்களாயிருந்தாலும், பார்ப்பனரல்லாதார் அனைவரையும் இம்மகாநாட்டிற்கு நான் அழைத்திருக்கிறேன். அவர்கள் ஆழ்ந்த கருத்துக்கொண்டு நமக்கும் நம் இயக்கத்திற்கும் உதவி புரிவார்களாக.

நாங்கள் அவசரமாக அழைத்ததற்கு இணங்கித் தங்கள் சௌகரியங்கள் அனைத்தையும் பொருட்படுத்தாது இங்கு எழுந்தருளியிருக்கின்ற சீமாட்டிகளுக்கும் கனவான்களுக்கும் இந்த வரவேற்புக் கழகத்தின் சார்பாக வந்தனோபசாரங் கூறுவதுடன் நாங்கள் தங்களுக்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகளில் குறைபாடுகள் இருந்தால், பொறுத்தருளும்படி மறுமுறையும் வேண்டுகின்றேன்.

வடஆற்காடு ஜில்லா 8வது கூட்டுறவு மகாநாடு.

வடஆற்காடு ஜில்லா கூட்டுறவு எட்டாவது பெருங்கழகம் நாளது 1927-௵ ஜனவரி ௴ 2௳ காலை 9மணிக்குத் துவக்கி இரண்டு நாட்களுக்கு அரக்கோணத்தில் நடைபெறும். அதையொட்டி விவசாய கைத்தொழில் கண்காட்சிகளும் நடைபெறும். பெருமை பெற்ற நமது வளர்ச்சித்துறை அமைச்சர் திருவாளர் ஆ. ரங்கநாத முதலியார் அவர்கள், பெருங்கழகத்தை திறந்து வைக்கவும் கோவைமாநகர் திருவாளர் ராவ்பகதூர் கா. ச. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் M. L. C, பெருங்கழகத்திற்கு தலைமை வகிக்கவும் பேரன்புடன் இசைந்துள்ளார்கள்.

(Sd.) S. R. முனிசாமி ரெட்டியார்,
உபசாரணைச் சபைத் தலைவர்.

மதுரையில் பார்ப்பனரல்லாதார் மஹாநாடு.

என்றும் கண்டிராத காட்சி

5000 பிரதிநிதிகள்

மாற்றமுடியாத உற்சாகம்,

தலைவர்களை வரவேற்க ரயில்வே மேடையில் 10,000 பேர்

மஹாநாட்டுக் கொட்டகையிலும் வெளிப்பந்தலிலும் ஜனங்கள் நிற்கவுமிடமில்லை.

பிரதிநிதிகள் வருகை.

டிசம்பர் மாதம் 25, 26 தேதி மஹாநாடு நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 24 தேதியே ஏராளமான பிரதிநிதிகள் வந்து குவிந்துவிட்டார்கள்; ஒவ்வொரு வண்டியிலும் மோட்டார் பஸ்களிலும் பிரதிநிதிகள் வந்திறங்கிய வண்ணமாகவே இருந்தார்கள்.

தனி ஸ்பெஷல்.

25 தேதி பகல் 10 மணிக்கு சென்னையிலிருந்தும் தலைவர்களுடையவும் பிரதிநிதிகளுடையவும் தனி ஸ்பெஷல் வண்டி வந்து சேருமென்று அறிவிக்கப்பட்டிருந்ததால் 9½-மணிக்கே ரயில்மேடை முழுதும் 10,000 பேர்களுக்கு மேலாகவே ஜனங்கள் வந்து நிரம்பிவிட்டார்கள். ரயில்வே மேடையில் ஜன நடமாட்டத்திற்கே இடமில்லாமல் கட்டி நிறுத்தியதுபோல் நின்றுகொண்டே இருக்கவேண்டியதாகிவிட்டது. எதிர்பார்க்கப்பட்ட ஸ்பெஷலானது வழிநெடுக ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வரவேற்பும், ஆரவாரமும் சிற்றுண்டிகளும் வழங்கக் காத்திருந்த ஜனங்களைத் திருப்தி செய்யவேண்டியிருந்தபடியால் ஸ்பெஷல் மதுரை வந்து சேர, பகல் 1 மணிக்குமேலாகிவிட்டது. ஆகவே, 9½ மணிமுதல் 1 மணி வரையிலும் 3½ மணி நேரமாக வெய்யிலையும் பசியையும் கவனியாமல் தனி வண்டியின் வரவை நோக்கித் தலையைத் திருப்பியவண்ணமாகக் காத்துக்கொண்டேயிருந்தார்கள். ரயில்வே லயினில் ஷண்டிங்குக்காக நடமாடும் இஞ்சின்களின் புகைகளைக் கண்டபோதெல்லாம் ஆரவாரமும் கூச்சலும் செய்தவண்ணமாகவேயிருந்தார்கள். கடைசியாக ஸ்பெஷல் வண்டியின் புகையைக் கண்டவுடன் மேடையிலிருந்த ஜனங்கள் அவ்வளவுபேரும் கால்களை நிலத்தில் பரவாமல் மேலெழும்பிய வண்ணமாய் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு ஜே! என்கிற சப்தத்தோடு வரவேற்றார்கள். ஸ்பெஷல் வண்டியானது இஞ்சினும் ஒவ்வொரு அறைகளும் பூமாலைகளாலும் செடிகளாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு, இடையிடையே அறைகளின் வெளிப்பக்கங்களில் பார்ப்பனரல்லாதார் 10வது மாகாண மகாநாடு என்றும், பார்ப்பனரல்லாத் தலைவர்களின் பிரயாண ஸ்பெஷல் என்றும், பார்ப்பனரல்லாத இளைஞர்களின் கூட்டம் என்றும் தலைவர்களுக்கு ஜே! என்றும் பெரிய, பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்ட விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்தன. வண்டியிலிருந்தவர்கள் கீழே இறங்குவதற்கு மார்க்கமில்லாமலும் வண்டிகளின் கதவைத் திறப்பதற்கு மார்க்கமில்லாமலும் ஜனங்கள் நெருங்கியிருந்தபடியால் தொண்டர்களும் போலீஸ் அதிகாரிகளும் பெருத்த கஷ்டத்தின்பேரில் தலைவர்களைக் கீழே இறக்கவேண்டியதாயிற்று. தலைவர்களுக்கு வரவேற்புக் கழகத்தாரும் நகர மஹாஜனங்களும் போட்ட ரோஜா, மல்லிகை, செவந்தி முதலிய மாலைகள் அளவிடக்கூடியதல்ல.

ஊர்வலம்.

அதிகாரி வரிசையாக எல்லோரையும் மோட்டாரிலேற்றி 1½ மணிக்கு ஊர்வலம் புறப்பட்ட காட்சியானது ஒவ்வொருவருக்கும் பஞ்சாப படுகோலைக்குப்பின் கூடிய அமிர்தசரஸ் காங்கிரஸை ஞாபகமூட்டிற்று. ஊர்வலத்தின் இருமருங்கிலும் தொண்டர்கள் கைகோத்து 1 பர்லாங்கு தூரத்துக்கு மேலாகவே நிற்கவும் தலைவர்கள் வரிசையாக மோட்டார்கார்களிலும்கூட வந்த பிரதிநிதிகளில் பலர் மோட்டார் பஸ்களிலும் மற்றப் பிரதிநிதிகளும் ஊர் மகாஜனங்களும் சூழ்ந்து நிற்கவும் பாண்டுவாத்தியம் கோஷிக்கவும் இருமருங்கிலும் 2 பென்ஷன் சுபேதார்கள் தொண்டர்படைத் தலைவராக 2 வெள்ளைக்குதிரைகளிலும் சவாரிசெய்து ஜனங்களை ஒதுக்கி வழிகாட்டிக்கொண்டும் அதற்கு முன்னால் யானைகள் செல்லவும், குஞ்சங்கட்டிய பட்டுக்கொடை பிறை, வெள்ளித்தடிகள் தோரணங்கள் முதலியவை விளங்க வீதிகள்தோறும் வளைவுகளும் தோரணங்களும் துலங்க மேலக்கோபுர வீதிவழியாகச் சென்று மீனாட்சி கோவிலைச் சுற்றியுள்ள நான்கு சித்திரை வீதிகளிலும் ஜே! சப்தம் வானளாவும்படி உற்சாக ஆரவாரத்தோடு சுமார் 3 மணிக்கு உபசாரணைத் தலைவர் ஸ்ரீமான் எம். டி. சுப்பிரமணிய முதலியாரவர்கள் இல்லத்திற்குப் போய்ச் சேர்ந்தது. பொதுஜனங்களும் மற்றும் பிரதிகளும் வேறுபல தெருக்களுக்கும் ஊர்வலம் போகவேண்டுமென்றும் எவ்வளவோ தூரம் வாதாடியும் தலைவர்கள் வெய்யிலையும் இவ்வளவு ஜனங்கள் பசியோடிருப்பதையும் உத்தேசித்து மறுத்து அவசரப்படுத்தியிருக்காவிட்டால் ஊர்வலமானது மாலை ஏழு மணிக்குத்தான் முடிவுபெற்றிருக்குமென்றே சொல்லலாம். ஊர்வலம் முடிந்தவுடன் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் ஜாகைக்குச் சென்று உபசாரணைக் கமிட்டியாரால் ஒவ்வொரு ஜாகைகளிலும் ஏற்கனவே பரிமாறி வைக்கப்பட்டிருந்த இலைகளிலுட்கார்ந்து அவசர அவசரமாய்ச் சாப்பிட்டுவிட்டு அரை மணிக்குள் மஹாநாட்டுக் கொட்டகையில் வந்து நிறைந்தார்கள். தலைவர்கள் ஸ்ரீமான் முதலியார் வீட்டில் சந்தனம் புஷ்பம் தாம்பூலாதிகளால் உபசரிக்கப்பட்டு அவர்கட்கென ஏற்படுத்தி அலங்கரிக்கப்பட்டிருந்த விடுதிகட்குச் சென்று சாப்பிட்டுவிட்டு சுமார் 4-மணிக்கு மஹாநாட்டுக்கு வந்தார்கள்.

கொட்டகை.

மகாநாட்டுக் கொட்டகையான பெரிய நாடகக் கொட்டகை என்பது நீதி வாக்கியங்களாலும் நிர்மாணத்திட்ட வாக்கியங்களாலும் செடி, கொடி தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு கொட்டகைக்கு முன்னால் பெரிய பந்தல்களும் இருமருங்கிலும் பெரிய பெரிய அறைகளாகவும் தடுக்கப்பட்டு அவைகளில் கதர் காட்சியும், பருத்தி கொட்டை எடுத்தல், பஞ்சு பட்டை போடுதல், நூல் நூற்றல் முதலிய காரியங்களைத் தனித் தனியாகச் செய்து காட்டுவதும், சித்திரக் கைத்தொழிற் சாமான் காட்சி முதலியவை ஒரு புறத்திலும், விவசாயப் பொருட் காட்சியும் பத்திரிகை நாயக்கர் புகைப்படம் புத்தகம் முதலிய விற்பனைகளும் கதர் சுயமரியாதை பார்ப்பனீயக் கொடுமை முதலியவை சம்பந்தமான விளம்பர வினியோகங்களும் ஒரு புறத்திலுமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சரியாக 4-மணிக்கு எல்லா இந்திய சர்க்கா சங்கத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட

கதர் காட்சி.

கதர் காட்சியை உபசாரணைத் தலைவர் ஸ்ரீமான் எம். டி. சுப்பிரமணிய முதலியாரவர்களைத் திறந்து வைக்கும்படியாக ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் கதரின் வரலாற்றைச் சொல்லிக் கேட்டுக்கொண்டதும் ஸ்ரீமான் முதலியாரவர்கள், கதரின் அவசியத்தைப் பற்றியும், கதர்தான் சுயராஜ்யமளிக்க வல்லதென்றும், கதர்தான் தேசத்தின் வறுமைப் பிணியை நீக்க வல்லதென்றும், தான் இனி மேல் கதரைத் தவிர மற்றெதையும் உடுத்துவதில்லையென்றும் கதரே நமது சுயமரியாதையைக் காப்பாற்றத்தக்கதென்றும், தான் இனிமேல் கதர்ப் பிரசாரம் செய்வதிலேயே தனது காலத்தைக் கழிப்பதாகவும் சொல்லிக் கதர்க்காட்சியைத் திறந்து வைத்துவிட்டுத் தலைவர்களை அழைத்துக் கொண்டு கொட்டகைக்குள் சென்றார்.

கூட்டம்.

ஏற்கனவே கொட்டகை நிறைந்துபோய் விட்டபடியால் தலைவர்களை மாத்திரம் கொட்டகைக்குள் அழைத்துச் செல்வதே பெரிய கஷ்டமாய்ப் போய்விட்டது. ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் கொட்டகைக்கு வெளியிலேயே நின்றுவிட நேர்ந்தது.

தரையில் உட்கார்ந்தது.

தலைவர்களும் பிரதிநிதிகளிற் பலரும் காற்சட்டையுடன் வந்திருந்த போதிலும் நாற்காலி வகையறாக்கள் போடுவதற்கிடமில்லாததால் மேடையின்பேரில் விரித்த

விரிப்பின்பேரிலேயே உட்காரவேண்டியதாயிற்று. இந்த மூதல் காட்சியைப் பார்த்ததுமே பிரதிநிதிகளுக் கேற்பட்ட சந்தோஷத்திற்கும் ஆரவாரத்திற்கும் அளவில்லை. மகாநாட்டு நடவடிக்கைகள் பிறிதோரிடத்தில் பிரசுரிக்கப்படும்.

பிரதிநிதிகள் யார்?

மஹாநாட்டில் கூடியிருந்த பிரதிநிதிகளில் 100-க்கு 75 பேர்கள் மகாத்மா காங்கிரசினிடத்தில் அநுதாபம் வைத்திருந்தவர்களும் காங்கிரசின் பேரால் பார்ப்பனர் சூழ்ச்சியில் சிக்குண்டிருந்து விழித்துக்கொண்டவர்களும் ஒத்துழையாமையின்போது தேசத்துக்காக ஒருமுறை, இருமுறை, மும்முறை, நான்குமுறை 1 மாதம், 6 மாதம், 1 வருஷம், 2 வருஷம், 5 வருஷம், 10 வருஷம் தண்டனை அடைந்து சிறை சென்றவர்களும், ஒத்துழையாமையில் ஈடுபட்டு தங்கள் தொழில்களையும் வருவாய்களையும் சுகபோகங்களையும் இழந்து கஷ்ட நஷ்டப்பட்ட தேசபக்தர்களாகவே காணப்பட்டார்கள். நமது மாகாணத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. அல்லாமலும் ஒவ்வொரு ஜில்லா தாலூகா முதலிய பட்டணங்களிலிருந்து அந்தந்த மகாஜனங்களின் பிரதிநிதித்துவம் பெற்ற ஜில்லா போர்டு முனிசிபாலிட்டி, தாலூகா போர்டு யூனியன் பஞ்சாயத்து. தேவஸ்தான கமிட்டி முதலிய அங்கத்தினர்களும், அதைகளின் தலைவர்களும் வந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. ஏறக்குறைய பகுதிப்பேர்களுக்கு மேலாகவே கதருடையுடன் காணப்பட்டார்களென்பது கொஞ்சமும் மிகையாகாது. கொழும்பிலிருந்தும், மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்க பிரதிநிதிகளும், காவி வஸ்திரமணிந்த பல சந்நியாசிகளும் மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. பல தன வைசிய பிரமுகர்களும் விஜயம் செய்திருந்ததோடு மகாநாட்டு நடவடிக்கையில் தாராளமாயுங் கலந்து கொண்டார்கள். நாடார் சகோதரர்களில் நூற்றுக்கணக்கான பிரதிநிதிகளும், மகமதிய சமூகப் பிரதிநிதிகளும், இந்திய கிறிஸ்துவப் பிரதிநிதிகளும் ஆதித்திராவிடர் முதலிய ஒடுக்கப்பட்ட வகுப்புப் பிரதிநிதிகளும் வந்து இடையிடையே இருந்தது மிகவும் குறிப்பிடத்தக்கது. மருத்துவக்குலப் பிரதிநிதிகள் மாத்திரம் சுமார் 60, 70 பேர்கள் வரையில் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோஸப் அவர்களும் அவர் போன்ற ஒத்துழையாதார்களும் மகாநாட்டுக்கு வந்திருந்ததோடு விஷயாலோசனை சபையிலேயும் கலந்து தாராளமாய் அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொண்டதும் மிகுதியும் குறிப்பிடத்தக்கது. பல திரப்பட்ட அரசாங்க அதிகாரிகளும் விஜயம் செய்திருந்தார்கள்.

கதர் விற்பனை.

மதுரைப் பட்டணத்திலும் மற்றும் பல இடங்களிலும் மஹாநாட்டை உத்தேசித்து கதர் ஏராளமாக விற்றிருந்தபோதிலும் மகாநாட்டுப் பந்தலில் காட்சிக்கு வந்த கதர்களிலும் சுமார் 750 ரூபாய் வரை விற்பனையானதும் குறிப்பிடத்தக்கது. நாகப்பட்டணத்திலிருந்தும் மற்றும் பலவிடங்களிலிருந்தும் சுமார் 200 தொழிலாளர் பிரதிநிதிகள் வந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. பெண்கள் பிரதிநிதிகள் போதுமான அளவு வந்திருக்கவில்லையானாலும் அடியோடு வரவில்லையென்று சொல்லுவதற்கில்லாமல் சிலர் வந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. பார்ப்பனர்களிலும் பலர் விசிட்டர்களாக வந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. மகாநாட்டுக் கொட்டகையும் பிரதிநிதிகள் வருகையும் ஆரம்பம் முதல் மகாநாடு முடியும் வரை அதாவது இரண்டு நாட்களும் நிமிஷத்துக்கு நிமிஷம் பெருகிக்கொண்டேயிருந்ததல்லாமல் கொஞ்சமும் குறைவுபடவேயில்லை.

பிரதிநிதிகளின் ஊக்கமும் உணர்ச்சியும்.

மகாநாட்டில் தீர்மானங்களை பிரேரேபிக்கவும் ஆமோதிக்கவும், ஸ்ரீமான் நாயக்கரும் அக்கிராசனரும் பிரதிநிதிகளை அழைக்க பெயர்களை உச்சரிக்கும்போதெல்லாம் பெருத்த கரகோஷமும், ஜே! சப்தமும் கொட்டகையின் சுவர்களை தகர்த்துவிடும்போலிருந்ததென்றால் அவர்கள் பிரசன்னமாகும் காலத்தில் எப்படியிருந்திருக்குமென்பதையும் பிரதிநிதிகள் மகாநாட்டின் நடவடிக்கைகளிலும் தலைவர்களிடத்திலும் எத்தகைய உணர்ச்சியோடும் ஊக்கத்தோடும் கலந்திருந்தார்கள் என்பதையும் வாசகர்கள் ஊகித்துணர வேண்டுகிறோம். ஒவ்வொரு தீர்மானமும் நிறைவேறும்போதும் குறிப்பாக நிர்மாணத்திட்டத் தீர்மானம் நிறைவேறும்போதும் மகாத்மா காந்தியடிகளின் பெயர் உச்சரிக்கப்படும்போதும் செய்த ஆரவாரமானது மகாஜனங்களுக்கு மகாத்மாவினிடத்திலும், நிர்மாணத்திட்டத்திலும் உள்ள நம்பிக்கையையும் அபிமானத்தையும் பளிங்குபோல்விளக்கிக்காட்டிற்று. ஸ்ரீமான் நாயக்கரின் உருவப்படத்தை பணகால் ராஜா திறந்துவைக்கும்போது ஏற்பட்ட ஆரவாரமும உற்சாகமுமே மற்றெல்லாவற்றையும்விட நீண்டநேரமிருந்ததும் மக்களை மெய்ம்மறக்கச் செய்ததும் என்று சொல்லலாம். சுருக்கமாகக் கூறுமிடத்து 1922 வருஷத்திற்குப் பிறகு காங்கிரஸ் கான்பரன்சு முதலிய எந்த அரசியல் மகாநாடுகளிலும் இம்மாதிரி ஊக்கம் காணப்படவில்லையென்றே சொல்லலாம்.

கவனிப்பு.

எல்லாவற்றையும்விட குறிப்பிடத்தகுந்தது என்னவென்றால் திருத்தப் பிரேரேபணைகளில்லாமலும் வாதப்பிரதிவாத அபிப்பிராய பேதங்களில்லாமலும் ஏகமனதாய் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டமைதான்.

விஷயாலோசனை சபை.

விஷயாலோசனை சபையானது ஜில்லாவுக்கு 10 பேர்களாகவும், சென்னைக்கு 20 பேர்களாகவும், மதுரைக்கு 20 பேர்களாகவும் அக்கிராசனரால் நியமிக்கப்பட்டவர் 20 பேருமாக நிர்ணயித்து அந்தப்படியே ஒவ்வொரு ஜில்லாப் பிரதிநிதிகளாலும் தெரிந்தெடுக்கப்பட்டு 25-உ இரவு 10மணி சுமாருக்கு உபசாரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் முதலியாரவர்கள் வீட்டில் நடு இராத்திரி 2 மணி வரையில் நடந்தது. விஷயாலோசனைக் கமிட்டியில் நடந்த முக்கிய விஷயங்களெல்லாம் பார்ப்பனரைச் சேர்த்துக்கொள்ளலாமா என்பதும், காங்கிரசில் எல்லோரும் சேரவேண்டியது அவசியம்தானா என்பதும், முக்கியமாய் விவரிக்கப்பட்ட விஷயங்களாகும். இவ்விரண்டு விஷயங்களுக்கும் பிரேரேபித்தவர்களைத் தவிர வேறு யாரும் அநுகூலமாயில்லாததால் அவைகள் விட்டுவிடப்பட்டன. இப்பிரேரேபணைகளின்மேல் நடந்த வாதங்கள் அங்குள்ள மக்களுக்கு ஒரு புதிய உணர்ச்சியைக் கொடுத்ததென்றே சொல்லலாம்.

முனிசிபாலிட்டி உதவி.

மஹாநாட்டுச் சௌகரியத்திற்காக மதுரை நகர பரிபாலன சபையாரும் சிறப்பாக அதன் தலைவர் ஆர். எஸ். நாயுடுகாரவர்களும் சுகாதார விஷயத்திலும், பிரதிநிதிகளுக்கு இடவசதி செய்து கொடுக்கும் விஷயத்திலும் தனது சிப்பந்திகளையும் உத்தியோகஸ்தர்களையும் உதவி உபகரித்தது பாராட்டத்தக்கதோடு பார்ப்பனரல்லாதார் இந்த ஸ்தானத்தில் இருந்ததின் பயன் மனப்பூர்வமாய் வெளிப்படுத்தப்பட்டது. இரவு பகல் எல்லாக் கால்களிலும் குழாயில் ஜலம் விட்டுக் கொண்டும், தெருக்களிலும் ஜாகைகளிலும் சதா தண்ணீர் விட்டுக் கொண்டும் கக்கூசு, குப்பை முதலியவற்றை அடிக்கடி சுத்தம் செய்து கொண்டும் இருந்ததானது மஹா ஜனங்களுக்கு வெகு திருப்தியைக் கொடுத்தது.

போலீஸ்

மகாநாடு சம்பந்தப்பட்டவரையில் ரயில்வே மேடைகளிலும் ஊர்வலத்திலும் கொட்டகை வெளிவீதிகளிலும் வண்டிப்போக்குவரத்திற்குப் போதுமான அளவு சௌகரியமும் செய்து, பந்தோபஸ்தும் செய்து கொடுக்கும் விஷயத்தில் போலீசார் எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

விடுதிகளும் சாப்பாட்டு வசதிகளும் வாகன வசதிகளும்.

பிரதிநிதிகள் தங்குவதற்காக மங்கம்மாள் சத்திரம், அமெரிக்கன் காலேஜ், யூனியன் ஹைஸ்கூல் சேதுபதி ஹைஸ்கூல்களும் முனிசிபால்டியார் கீழுள்ள எல்லா ஆரம்பப் பள்ளிக்கூடங்களும் சிலபங்களாக்களும் ஆக 50க்கு மேற்பட்ட ஜாகைகள் பிரதிநிதிகள் தங்குவதற்கு வசதியாய் ஒதுக்கி வைக்கப்பட்டன.

ஸ்ரீமான் முதலியாரவர்களின் மேற்பார்வையின் கீழ் நான்கைந்திடங்களில் சமையலேற்பாடுகளும் ஸ்நான வசதிகளும் செய்து ஆங்காங்கிருந்து ஒவ்வொரு ஜாகைக்கும் சாப்பாடுகள் எடுத்துச் செல்ல வசதிகளும் செய்யப்பட்டதோடு பிரதிநிதிகளை சாப்பிடுமிடத்திற்கழைத்து வரவும் சாப்பிட்ட பிறகு ஜாகைக்கு கொண்டுபோய் விடவும் ஜாகையிலிருந்து மகாநாட்டு பந்தலுக்கு போக்குவரவிற்காகவும் 10-க்கு மேற்பட்ட பஸ்களும் 20க்கு மேற்பட்டகார்களும் சதா பறந்த வண்ணமாயிருந்தன. பட்டி வீரன் பட்டி ஸ்ரீமான் சௌந்திர பாண்டிய நாடாரவர்களின் வாழைத் தோட்டங்களிலிருந்து

சிறு மலை வாழைப்பழம் வண்டி வண்டியாய்க் கொண்டு வரப்பட்டு பிரதிநிதிகளின் சாப்பாட்டிற்கும் சிற்றுண்டிக்கும் தாராளமாய் விநியோகிக்கப்பட்டன. இந்த சாப்பாடானது பிரதிநிதிகள் பிரதிநிதிகளல்லாதவர் என்ற வித்தியாசமில்லாமல் இலவசமாய் கொடுக்கப்பட்டது. இதுவரையில் எந்த மகாநாட்டிலும் காங்கிரசிலும் இவ்வளவு தாராளமாய் செளகரியமும் சாப்பாடு விடுதி வசதிகளும் செய்து வைத்த உபசரணைச் சபையில்லையென்றே சொல்லலாம்.

பாத்திர விநியோகம்.

எந்த ஜில்லாவிலிருந்து வந்த பிரதிநிதிகள் வந்து உபசரணைத் தலைவர் ஸ்ரீமான் எம். டி. சுப்பிரமணிய முதலியாரவர்களை விலாசம் தெரிந்து (சொம்பு டம்ளர் விளக்கு முதலியவை) கேட்டால் உடனே தன் கையொப்பம் வைத்துக் கொடுத்து புதிது வாங்கிக் கொள்ளச் சொன்னார்களன்றி அவர் விஷயமாவது தாமதிக்க வைத்ததுகிடையாது.

ஸ்ரீமான் முதலியாரின் குடும்பமும் சிநேகிதர்களும்.

இம் மகாநாடு விஷயத்தில் உபசரணைத் தலைவர் ஸ்ரீமான் எம். டி. சுப்பிரமணிய முதலியாரவர்களும் அவர் குமாரர் வாலிபர் ஷண்முகவேலும், முதலியார் சகோதரர் ஸ்ரீமான் சோமசுந்தர முதலியாரவர்களும் அவர் குமாரர் ஸ்ரீமான் அப்பாத்துரை முதலியாரவர்களும், முதலியாரின் தம்பி குமாரர் ஸ்ரீமான் பி. டி. ராஜனவர்களும் மற்றும் இம்மூன்று குடும்பத்தையும் சேர்ந்த மாப்பிள்ளைகள் மைத்துனர்கள் சம்பந்திகள் முதலியோர்களும் இவர்களின் குடும்ப சிநேகிதர்களாகிய ஸ்ரீமான் முத்துக்குமார முதலியாரவர்களும் பட்டிவீரம்பட்டி ஸ்ரீமான் செளந்திர பாண்டிய நாடாரவர்களும் இவர்களது சிப்பந்திகளும் மற்றும் ஸ்ரீமான்கள் திருமகன் மாறன் பிள்ளை (மகாநாட்டுக்காரியதரிசி.) கூடலிங்கம் பிள்ளை (விளம்பரக் கமிட்டி காரியதரிசி.) கொண்டைய நாயுடு என்ஜினீயர் சின்னு நாயுடு. உடுமலை கி. வைத்தியநாதையும் E. T. R. சுந்திரம்பிள்ளை சென்னை (பார்ப்பனரல்லாத வாலிப சங்க காரியதரிசி.) இ. மா. கோபால கிருஷ்ணக் கோனார் திரவியம் பிள்ளை ராமானுஜம் நாயுடு ஷண்முகம் பிள்ளை ஜனப் பகருதீன் சாயபு பகதூர், புன்னையப்ப நாடார். சோளவந்தான் தேசபக்தர்கள் திருவாளர்கள் கண்ணையிர முதலியார் சுப்பிரமணிய முதலியார் வெங்கிட்டசாமி அய்யா இன்னும் எத்தனையோ கனவான்களும் தங்கள் வீட்டுக்காரியங்கள் போல எச்சில் எடுப்பது முதற்கொண்டெல்லாக் காரியங்களும் பிரதிநிதிகளுக்கு வசதி செய்து கொடுக்கும் விஷயத்தில் ஆசை கொண்டு போட்டி போட்டு நடந்ததானது பெரிய மனிதன் பிரபு என்று தன்னை நினைத்த ஒவ்வொருவரையும் வெட்கப்படச்செய்தது. ஜனப் அலாவுதீன் ராவுத்தரவர்கள் முகம்மதிய பிரதிநிதிகளுக்கு விருந்து செய்ததும் மகாநாட்டு நடவடிக்கையில் கலந்துழைத்ததும் மிகவும் குறிப்பிடத் தக்கதே.

தொண்டர்கள்.

மகாநாட்டுத் தொண்டர் படைக் காரியதரிசியாக ஸ்ரீமான் கொண்டைய நாயுடு அவர்களும் [illegible] காரியதரிசியாக ஸ்ரீமான் மாணிக்கம் பிள்ளையும் தொண்டர் அதிபதி [illegible] நாயுடு அவர்களும் உப அதிபதிகள் ஸ்ரீமான் வக்கீல் நாராயணசாமி [illegible], பிச்சைமுத்துக் கோனார், கம்பம் [illegible] அடப்பதல் ஹஜிமான் அவர்களும் 10 தொண்டர்கள் கொண்ட ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு கேப்டன் வீதம் 200 தொண்டர்களுக்கு ஸ்ரீமான்கள் வீராபு முதலியார், [illegible] நாயுடு, [illegible] பண்டர், [illegible] முத்தையா சி. பொன்னம்பலம், [illegible] நாயுடு, [illegible] பிள்ளை, [illegible] வேங்கடப நாயுடு, [illegible], எஸ். கதிர்வேல்சாமி ஜெம்மல் செல்லையா, சதாசிவம் பிள்ளை மாசிலாமோகன், எஸ். சீனிவாசம், ஏ. எஸ். சத்தியநாதன், ஏ. நாராயணசாமி நாயுடு டி. கே. ராம நாயுடு ஆகிய 20 கேப்டன்களும், 200 தொண்டர்களும் எடுத்துக் கொண்ட முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

பொதுக்காட்சி

வெகு குறுகிய காலத்தில் மஹாநாடு கூட்ட நிச்சயித்தும் போதுமான அளவு பிரசாரம் செய்ய சாவகாசமும் வசதியும் இல்லாதிருந்தும், பல பத்திரிகைகள்—பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளும் கூட மஹாநாட்டு விளம்பரத்தை பொறுப்பு [illegible] யாலும், பயந்ததாலும் சரியானபடி விளம்பரப்படுத்தப்பின் வாங்கியும் இம் மஹாநாட்டுக்கு தாராளமாகப் பிரதிநிதிகள் போகாமலிருப்பதற்கு பிரசாரங்களும் சூழ்ச்சிகளும் செய்தும், இவ்வளவு சிறப்போடும் ஊக்கத்தோடும் உணர்ச்சியோடும் நடந்திருக்கிறதென்றால் பார்ப்பனரல்லாதார் மஹாநாடு என்பது யாரோ பொறுப்பற்ற சிலரால் கூட்டப்பட்டதா? தமிழ் நாட்டின் பிரதிநிதித்துவம் பொருந்தியதல்லாததா? அல்லது இந்நாட்டு பார்ப்பனரல்லாத மக்களின் உண்மையான பிரதிநிதித்துவம் பொருந்திய மஹாநாடா என்பது யோக்கியர்களுக்கு விளங்காமற் போகாது.

தங்களினத்தை காட்டிக் கொடுத்தும் பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்தும் வாழ வேண்டிய நிலைமையடைந்தவர்கள் இதை உண்மையான மஹாநாடென்று ஒப்புக்கொள்ளவோ குற்றஞ் சொல்லாமலிருக்கவோ முடியாதென்பதை யாவரும் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான்.

10வது பார்ப்பனரல்லாதார் மஹாநாட்டில்

சடங்கைப்பற்றிய தீர்மானம்.

சர். கே. வி. ரெட்டியாரின் விரிவுரை.

இந்தத் தீர்மானம் எவ்வளவு முக்கியமான [illegible] தென்பதை அக்கிராசனர் உங்களுக்குச் சொல்லியிருக்கிறார். இன்றைய தினம் நம் [illegible] பொருளாதார விஷயத்திலும் [illegible] விஷயத்திலும் அடிமைப்பட்டிருக்கிறோமென்பதற்கு முக்கிய காரணமென்னவென்றால் நமது வைதிகச் சடங்குகளும் அதன் மூலமாய்ப் பார்ப்பனர் பெற்றுள்ள ஆதிக்கமுமாகும். இந்தியா ஒன்றுதான் இந்த உலகத்திலேயே ஆயிரக்கணக்கான வருடங்களாய் அன்னிய ஆட்சியின் ஆதிக்கத்திற்கு அடிமையாயிருந்துவருகிறது. இந்த உலகில் எந்த தேசமாவது 200 வருடத்திற்கு மேற்பட்டு அன்னிய ஆட்சிக்குட் பட்டிருந்ததாக உங்களால் சொல்லமுடியுமா? இந்த துரதிர்ஷ்டமான நாடு ஒன்றுதான் அநேக வருடங்களாய் அன்னிய ஆட்சியில் நிரந்தரமாய் அடிமையாயிருந்துவருகிறது. இதற்குக் காரணம் என்னவென்பது உங்களுக்குத் தெரியுமா? புரோகிதக்கூட்டத்தார் என்னுமோர் ஜாதியார் மதசம்பந்தமான கொள்கையின் பேரால் நமது கால்களையும் கைகளையும் கட்டிக் கீழே தள்ளி மேலேறி உட்கார்ந்து கொண்டமையேதான். வேண்டுமானால் இரண்டொரு உதாரணங்களால் அதன் உண்மையை உங்களுக்கு விளக்கிக் காண்பிக்கிறேன். முதலாவதாக கடவுளால் அளிக்கப்பட்டதென்று சொல்லப்படும் வேதமென்கிற புத்தகத்தின் யோக்கியதையை கவனியுங்கள்.

அன்னிய மதஸ்தர்கள் பல்லாயிரம் மைலுக்கப்பாலிருந்து தங்கள் குடும்பங்களையும் சுற்றத்தாரையும் விட்டு, நம் நாட்டிற்கு வந்து, தாங்கள் எது உண்மையென்று நம்புகிறார்களோ அதை நமக்கு இலவசமாய்த் தெரிவித்து அவரோடு நம்மை சேர்க்க முயற்சி செய்கிறார்கள். ஆனால் நமது புரோகித ஜாதியார் கடவுளால் கொடுக்கப்பட்டதென்னும் வேதத்தை நாம் படித்தாலும், பார்த்தாலும், காதினால் கேட்டாலும் நமக்கு பாவமென்கிற பெயராலும், தங்களுக்கு தோஷமென்கிற பெயராலும் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்களோ தங்கள் வேதத்தை ஒப்புக்கொள்ளாதவர்கட்குக்கூட இலவசமாய் வீடுகளிற் கொண்டுபோய் வழங்குகிறார்கள். மகமதியர்களோ குரான் என்கிற வேதத்தை ஒரு கையிலும் கூரிய வாளை ஒரு கையிலும் வைத்துக்கொண்டு கட்டாயப்படுத்தி அன்னிய மதஸ்தர்களுக்கும் விநியோகித்ததாக சொல்லப்படும் கதை முழுதும் உண்மையில்லாவிட்டாலும் அவரவர் உயர்ந்ததென்று நம்பும் வேதத்தை எல்லோருக்கும் சமமாக வழங்க எவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களென்பதை இதிலிருந்து ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம்.

நம்முடைய புரோகித ஜாதியாரென்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்கள் இந்த விஷயத்தில் என்ன செய்கிறார்களென்பதை கவனியுங்கள் (சிரிப்பு) அவர்கள் வேதம் என்னும் புஸ்தகம் கடவுளாலேயே தங்களுக்குத்தான் வழங்கப்பட்டதென்று சொல்லுகிறார்கள். அதைத் தாங்கள்தான் படிக்கவும், பார்க்கவும், சொல்லவும் கூடுமாம். அதோடுகூட பிறர் காதிலும் கேட்கக்கூடாதாம். ஒருக்கால் தப்பித்தவறி நாம் காதால் கேட்க சந்தர்ப்பம் நேரிட்டுவிட்டால் உடனே நமது காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

கடவுளால் சொல்லப்பட்டவைகள் என்று

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நம்பும்படியானவைகளிலிருந்து மனித வர்க்கம் நன்மையடைவதற்காகவே வேதம் ஏற்பட்டதென்று சொல்லவேண்டும். அப்படியிருக்க இந்த பார்ப்பனர்கள் எதற்காக நமக்கும் கடவுளுக்கும் மத்தியில் வேதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு தடைகல்லாய் நின்றுகொள்ளவேண்டும் (கரகோஷம்) வேதத்தைப் பொறுத்த அளவிலே இவர்கள் யோக்கியதை இப்படியென்றால் மற்ற விஷயத்தைக் கவனிப்போம். நமது தினசரி வாழ்வில் அவர்கள் தங்களுக்கு எவ்வளவுதூரம் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை சற்றாராய்வோம். (சிரிப்பு) நமது பிறப்புமுதல் இறப்புவரையிலும் மற்றும் பிறக்குமுன்னும் இறந்தபின்னும்கூட தாங்கள் தங்கள்பிறவியில்உயர்ந்தவர்களென்கிற ஆதிக்கத்தை கொஞ்சமும் இடைவிடாது நம்மீது செலுத்திக்கொண்டே வருகிறார்கள். நாம் தாயின் கருப்பையிலிருக்கும்போதே சடங்குகளை துவக்கி வருகிறார்கள். இதற்கெல்லாம் நாம் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறதென்பதை மறந்து விடாதீர்கள். பிறந்தவுடனேயே நமது ஜாதகத்திரம் பார்க்கவேண்டியவனாகி விடுகிறான். தகப்பன் குழந்தையை 15 நாட்களுக்கும் பார்க்கக்கூடாதென்று ஒரு தடையை ஏற்படுத்தி 15ம்நாட் கடைசியில் ஓர் சடங்கைச்செய்து பணத்தை வாங்கிக்கொண்டபிறகு உத்திரவு கொடுக்கிறான். குழந்தையைப்பெற்ற தகப்பன் எவ்வளவு நூல் ஆராய்ச்சியுடைய வித்வானாயிருந்தாலும் ஆங்கிலத்திலும் பி. எ. எம். எ. பட்டம் பெற்றவருமானாலும் தன்னுடைய பிள்ளைக்கு அ ஆ, ABC எழுத்துக்கள்கூட சொல்லிக் கொடுக்கக்கூடாதென்பதோடு தனக்குப்பணம் கொடுத்து சடங்கு செய்து படிக்கவைக்கவேண்டுமென்று சொல்லுகிறான். சர்ப்பமும் பிறப்பும் படிப்பும் இப்படியானால் கலியாணத்தைப்பற்றியும் சாந்திமுகூர்த்தத்தைப்பற்றியும் நான் சொல்ல வேண்டியதேயில்லை (சிரிப்பு) எல்லாவற்றிலும் மிகுதியும் நிந்திக்கக்கூடிய விஷயமேதென்றால் சாவு விஷயத்தில் தனக்கு வைத்துக்கொண்டிருக்கும் ஆதிக்கம்தான். இறந்ததுமுதல்-என்? இறக்கப் பத்து நாழிகைக்கு முன் இருந்தே தொடர்ச்சியாய் கோதானம்முதல் 15 நாட்கள் சடங்கென்று துக்கம் விசாரிக்க வந்தவர்களைக்கூட கவனிக்கமுடியாமல்நம்மைஉபத்திரவிப்பதோடு இதற்காக நம்மிடமிருந்து பணமும் அரிசியுமாத்திரமல்லாமல் தன் குடும்ப நிர்வாகத்திற்கு வேண்டிய சகல சாமக்கிரியைகளையும் நம்மிடமிருந்து கரந்துவிடுகிறான். இதில் மிகுதியும் கஷ்டமான காரியமென்னவென்றால் இவ்வளவும் கொடுத்ததுமல்லாமல் தன்னுடைய அசிங்கம் பிடித்த கால்களைக்கழுவி அந்தத் தண்ணீரை யெடுத்து நமது தலையில் தெளித்துக்கொள்ளவும் சொல்வதோடு சில சமயங்களில் குடிக்கும்படியும், தனது காலில் நமது தலை முட்டும்படியாக விழுந்து கும்பிடும்படியும் சொல்லுகிறான். இவைகளை ஒரு நிமிடம் மனிதத் தன்மையிலிருந்து சிந்தித்துப்பாருங்கள்! இவைகள் மனிதத்தன்மையையே தாழ்த்திக்கொண்டு வருகிறதில்லையா. தெருவின் வழியே ஓர் அநாமதேயப் பார்ப்பனன் நடந்து போவானேயானால் வீட்டு வெளித் திண்ணையிலுட்கார்ந்திருக்கும் இரண்டு மூவாயிரம் ஏக்கர் நிலச் சுவான்தார்களாயிருந்தபோதிலும் உடனே எழுந்து அந்தப்பார்ப்பனனுக்கு நமஸ்காரமென்று இருகையும் கூப்பி கும்பிட்டாகவேண்டும். இதுகளிலிருந்து ஜனங்களின் சுயமரியாதை எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறதென்பதை கொஞ்சநேரம் சிந்தித்துப்பாருங்கள், பார்ப்பனர்களுடைய சாமர்த்தியமானது நமது சுயமரியாதையைக் கெடுக்கத்தக்க இந்தக் காரியங்களை மதங்களின் பேரால் நமது சமூக வாழ்வின் நடவடிக்கைகளில் எப்படி நம்மை அடிமையாக்கி இருக்கிறதென்பதை கவனியுங்கள். நமது இருகைகளையும் கால்களையும் தகர்க்க முடியாத வைதீகச் சடங்குச் சங்கிலிகளால் இருகக் கட்டித்தள்ளிவிட்டான். இந்த விலக்கமுடியாத சங்கிலிகளை வெட்டித்தள்ள வெட்டு இரும்பாகத்தான் இந்தப் பார்ப்பனரல்லாதாரின் இயக்கம் தோன்றியிருக்கிறதே தவிர வேறல்ல. (பெருத்த கரகோஷம்)

அன்பார்ந்த என் நாட்டவர்களே! நம்மை யார் ஆண்டாலும் கவலையில்லை. வெள்ளையர் அதிகார வர்க்கம் ஒழிய வேண்டியது என்பது பார்ப்பன அதிகார வர்க்கம் அந்த ஸ்தானத்தில் உட்கார்ந்து இனியும் அதிகமாக நம்மீது ஆதிக்கம் செலுத்தி நம்மை நசுக்கி பிணமாக்குவதற்கு அல்ல. ஆனால் நமக்கு வேண்டியதெல்லாம் முன் சொல்லிய கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெறத்தக்க சுதந்திரமடைவதுதான் நமது இயக்கத்தை எதிர்க்கிறவர்கள் இந்த இயக்கமானது உண்மையான சுதந்திரத்திற்கு ஏற்பட்டதென்பதைக் கருத்திலிருத்த மட்டும். எதுவாயினும் நாம் இத்தகைய புரோகிதர்களான பார்ப்பனர் கட்டுப்பாட்டிற் கடிமையாகி சுயமரியாதையிழந்திருக்கிறோமோ அதுவரையில் அரசியல் விஷயத்திலெ எந்தவித முன்னேற்றத்திற்கும் சுதந்திரத்திற்கும் நாம் லாயக்கானவர்களல்ல. முதலில் ஒவ்வொரு மனிதனும் கட்டுப்பாட்டிலிருந்து விலகி சுயமரியாதை யடையட்டும்; பிறகு தனது வகுப்பு சுயமரியாதை யடையட்டும்; பிறகு நமது தேசம் தானாகவே விடுதலை யடைந்துவிடும்.

நமது எதிரிகள் நமது இயக்கத்தைக் கெடுப்பதற்காக நம்மை உத்தியோக வேட்டைக்காரர்களென்று சொல்லிப்பழி சுமத்தி ஒழிக்கப் பார்ப்பது சரியானதல்லவென்று எடுத்துக்காட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய சமூகத்தாரில் ஜமீன்தார்களும் மிராசுதார்களும் பலத்த வியாபாரிகளும் விவசாயிகளும் எத்தனையோ பேரிருக்கிறார்கள். அவர்களில் இப்பொழுது நாம் நமது எதிரிகளால் எந்த உத்தியோகத்திற்கு வேட்டையாடுகிறோம் என்று சொல்லப்படுகிறோமோ அப்படிக்கொத்த உத்தியோகங்களைத் தாங்கள் சொந்தத்தில் வைத்து நிர்வாகம நடத்தப்போதுமானபலர் நம்மில் இருக்கிறார்கள் (கரகோஷம்) நாம் உத்தியோகத்திற்காக போராடுவதாய்ச் சொல்லப்படுவதெல்லாம் எதுவாயிருக்குமென்றால் ஒரு கூட்டத்தார்தாங்கள்ஏகபோகமாய் அரசியல் பங்கிலுள்ள எல்லா உத்தியோகங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிற பாத்தியதையும் வழக்கத்தையும் உடைத்தெறியவும் நமது சமூதாயத்துறையில் மற்றொரு புரோகித வகுப்பாருக்குக் கட்டுப்பட்டு சுயமரியாதையிழந்து கிடக்கும் கொடுமையை நிவர்த்தித்துக் கொள்ள உத்தியோகங்களை உபயோகப்படுத்த விரும்புவதையும் தான். இத்தீர்மானத்தைக் கையாள்வதினால் தான் நம் மக்களின் விடுதலையை நாம் அடைய முடியும். இத்துறையில் தெலுங்கு நாட்டார் பயன்படும்படியான சில வேலைகள் செய்திருக்கிறார்கள். அவைத் தலைவர் சற்றுமுன்பு கம்மவாரு வகுப்பார்கள் கூட்டத்திலேயே அனேக புரோகிதர்களை உண்டுபண்ணியிருப்பதாக உங்களிடம் சொன்னார். இந்தச் சீர்திருத்தங்களைப் பின்பற்றினவர்களில் நானும் ஒருவனே. என்னுடைய குமாரத்தியின் கல்யாணத்திற்கு நான் பிராமணப்புரோகிதர்களை அழைக்கவேயில்லை. எனது வகுப்புப்புரோகிதரை வைத்தே கலியாணத்தை நடத்தி வைத்தேன். அன்று வெளிவந்த தெலுங்கு பத்திரிகைகளில் இக்கலியாணம் எந்தவிதமான முடிவை யடையுமோவென்று பலவாறாக எழுதப்பட்டிருந்தன. இந்தக் கல்யாணம் சரியானதல்லவென்றும் இக்கல்யாணத்தால் வாரசுகளுக்கு சட்ட சம்பந்தமான தொந்தரை யுண்டாகுமென்றும் சொல்லப்பட்டிருந்தன. சில பிராமணர்கள் இக்கல்யாணமானது தம்பதிகளுக்கு ஜீவிதத்தில் நன்மை உண்டாகும்படி பயன்படாது என்று கூடச் சொன்னார்கள். ஆனால் கனவான்களே நான் உண்மையாக உங்களிடம் சொல்லுகிறேன். எனது மருமகன் இப்பொழுது ஓர் பெரும் வக்கீலாயிருக்கிறார். செல்வாக்கும் செல்வமும் நிறையப் பெற்றிருக்கிறார். 4, 5-குழந்தைகளுமுண்டு. இத்துடன் தம்பதிகள் சுகமாக தனது குடும்ப வாழ்க்கையை நடத்துகிறார்கள். (பலத்த சிரிப்பு) ஆகவே தீமையான சம்பவங்கள் நடைபெறுமென்று நீங்களெண்ண வேண்டாம். நாம் எந்த விதத்திலாவது இந்தக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலையடைய வேண்டும். அதற்கு இந்தத் தீர்மானமே நமது கட்சியார் அனுபவத்தில் செய்யக் கூடியதாயிருக்கிறது. இவர்கள் நம்மோடு கூட விருந்து சாப்பிடாத காலங்களுமிருந்தன. பார்ப்பனரல்லாதார் சாப்பாட்டு வேளைகளில் பார்ப்பனர் வீடுகளுக்குப் போக நேரிடும்பொழுது சிறிதேனும் மரியாதையும் ஈவு இரக்கமுமின்றி கதவுகள் மூடப்பட்ட சம்பவங்கள் எனக்குத் தெரியும். இந்த இயக்கத்திற்குப் பின் இக்கொடுமைகளில் அநேகம் குறைபட்டிருக்கிறதென்றாலும் மறுபடியும் தலை எடுக்காதென்று சொல்ல இன்னும் தைரிய மேற்படவில்லை. நாமெல்லோரும் முன்னேக்கிச் செல்ல வேண்டுமென்பது தான் எனது ஆசை. முன்னேற்றம் அபிவிருத்தி என்பவைகள் தான் காலத்தின் சுறுசுறுப்பும் முயற்சியுமில்லாத எந்த நாட்டாரும் சுயமரியாதையும் க்ஷேமமும் அடைய முடியாது. உணர்ச்சியற்றுக் கட்டைபோலவே.

(இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.)

அஸ்ஸாம் காங்கிரஸ்.

அஸ்ஸாம் காங்கிரஸ் கூட்டமானது தேசத்தின் அரசியல் நிலை என்ன வென்பதை தெளிவாகக் காட்டி விட்டது. பெயருக்கு மாத்திரம் எல்லா இந்தியப் பொதுமக்களின் பிரதி நிதித்துவ சபை என்று சொல்லிக் கொள்ளப்படுவதானாலும், இந்திய மக்களுக்கு அரசியல் விடுதலை அளிக்கும் சபை என்று சொல்லிக் கொள்ளப்படுவதானாலும் காரியத்தில் பார்ப்பனர்களும் வக்கீல்களும் தங்களது வயிற்றுப் பிழைப்பிற்கும், வாழ்வுக்கும் பாமரர்களை ஏமாற்றக் கண்டு பிடித்த சூழ்ச்சிச் சபையாகவே விளங்கிவருகிறது, பார்ப்பனர்களுடையவும் வக்கீல்களுடையவும் கொஞ்சகால துர்திர்ஷ்ட வசத்தால் காந்தி என்னும் ஒரு மஹான் காங்கிரஸிற் புகுந்து பார்ப்பனர்களையும் வக்கீல்களையும் ஒரு ஆட்டு ஆட்டி அசைத்துக் கீழே தள்ளி, தேசப் பிரதிநிதிகளென்பவர், குடியானவர்களும் தொழிலாளர்களும் ஏழைமக்களும் கூலிக்காரர்களும் தானென்பதும், சுயராஜ்யம் அரசியல் விடுதலை யென்பது மக்கள் சுயமரியாதையோடு மனச்சாட்சியை விற்காமல் வயிறாரக்கஞ்சி குடிக்கச் செய்வதுதானென்பதும் மக்களுணருமாறு செய்து அப்பலன்களை யடையப் பாடுபட்டார். இவ்வேழை மக்களுக்கேற்பட்ட துரதிஷ்ட வசத்தின் வலிமையானது வீழ்த்தப்பட்ட பார்ப்பனரையும் வக்கீல்களையும் மறுபடியும் தலையெடுக்கச் செய்து மஹாத்மா காந்தியையும் மூலையில் உட்கார வைத்துப் பழையபடியே பார்ப்பனருக்கும் படித்தவர்கட்கும் வாழ்க்கை கொடுக்கும் ஸ்தாபனமாகக் காங்கிரஸை ஆக்கிவைத்து விட்டது. இவ்வுண்மை இவ்வருடக் காங்கிரஸ் பிரதி நிதிகளைப் பார்த்தாலே விளங்கும். மஹாத்மாவின் காங்கிரஸின் பொது விவசாயிகளும், தொழிலாளிகளும், வியாபாரிகளும், கூலிக்காரர்களுமாய் நாலாயிரம் ஐயாயிரக் கணக்காய்ப் பிரதி நிதிகள் நிரம்புவார்கள். உதாரணமாக சென்னைமாகாணத்திலிருந்துமாத்திரம் ஆமதாபாத், கயா, காக்கிநாடா, பெல்காம் முதலிய காங்கிரஸ்களுக்கு ஆயிரம் பிரதி நிதிகளுக்குக் குறையாமல் உண்மைப் பிரதி நிதிகளான மேற் கண்ட வகுப்பார்களே, நிறைந்திருப்பார்கள். இப்போது அஸ்ஸாம் காங்கிரஸிலோ ஒட்டு மொத்தம் பிரதி நிதிகள் பார்ப்பனப் பத்திரிகைகளின் கணக்குப் படிக்கே 1507. அதாவது காங்கிரஸ் நடந்த மாகாணமாகிய அஸ்ஸாம்மாகாணத்திலிருந்து 50பேர்களும் வங்காளமாகாணத்திலிருந்து 600பேர்களும் பிஹாரிலிருந்து 350 பேர்களும் சென்னை, ஆந்திரா, கேரளம் ஆகிய இம்மூன்றுக்கும் 200 பேர்களும் ஐக்கியமாகாணத்திற்கு 140 பேர்களும் பஞ்சாபிலிருந்து 40 பேர்களும் மத்திய மாகாணத்திலிருந்து 44 பேர்களும் மஹாராஷ்டிரத்திலிருந்து 21 பேர்களும், பம்பாயிலிருந்து பத்தே பேர்களும் உத்கல்மாகாணத்திலிருந்து 25 பேர்களும் ராஜாபுதனத்திலிருந்து 15 பேர்களும் டில்லியிலிருந்து 9பேர்களும் பர்மாவிலிருந்து 3 பேர்களும் பிரதி நிதிகளாக வந்திருந்தார்களாம். இந்தப் பிரதி நிதிகள் 100க்கு 95 பேர் ஆங்கிலம் படித்த வக்கீல்களும் பார்ப்பனர்களுமாகிய, தேசத்தின் உண்மையான விடுதலையிலும் சுயமரியாதையிலும் கவலையில்லாதவர்களே கூடியிருந்தார்கள். உதாரணமாகச் சென்னையிலிருந்து சென்றவர்கள் பெரும்பாலும் யாரென்பதும் இவர்களிற் பெரும்பாலும் யாருடைய செலவில் யாருடைய நன்மைக்காகக் கூலி கொடுத்து அழைத்துச் செல்லப்பட்டார்களென்பதும் காங்கிரஸ்தான் தேசத்திற்குப் பிரதி நிதித்துவம் வாய்ந்த சபையென்று பார்ப்பனர்களுடன் ஒத்துப்பாடி வயிற்றை வளர்த்து வாழ்க்கை நடத்தபவர்களில் ஒருவருக்காவது உண்மை தெரியாமலிருக்க நியாயமில்லை. மஹாத்மாவைக் காங்கிரஸில் கொண்டு வந்து காட்டி பாமர ஜனங்களை ஏமாற்றிப் பதவி பெறப்பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சியை அறியாதார் யார்? காங்கிரஸின் தலைவரும் காரியதரிசியும் கூட்டுத் தலைவரும், விளம்பரக்காரரும், விவாதங்களை நடத்தினவர்களும் யாரென்பது தெரியாதா? ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாசையங்கார் ரங்கசாமி ஐயங்கார் பண்டித நேரு சத்தியமூர்த்தி, பிரகாசம் பந்துலு, சாம்பமூர்த்திபந்துலு சி. வி. வெங்கட்டரமண ஐயங்கார், முதலிய பார்ப்பனர்களே காங்கிரஸில் ஆட்சிபுரிந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிற்கு எப்படி ஸ்ரீமதிகள் பாலாம்பாள் அம்மாள் அசலாம்பிகை அம்மாள் முதலிய அம்மாள்கள் அரசியல் வாழ்வில் சிறந்தவர்களோ அப்படியே இந்தியா பூராவுக்கும் என்பதாய் ஸ்ரீமதி சரோஜினி அம்மாள் என்கிற ஒரு பார்ப்பினி அம்மாள் சிறந்து விளங்குகிறார்கள். ஆகவே இந்திய அரசியல் வாழ்வுக்கான காங்கிரஸ். பார்ப்பனர்களின் எடுப்பார் கைப்பிள்ளையாய் இருப்பது விளங்கவில்லையா? அக்கிராசனர் பிரசங்கமோ தனக்கே இன்னதெழுதுகிறோமென்று விளங்காமல் சென்னைத் தேர்தலில் தானும் தனது பக்த கோடிகளும் பணத்தாலும் சூழ்ச்சியினாலும் ஜெயம் பெற்ற ஆணவமே ஒவ்வொரு எழுத்துக்களிலும் துலங்கும்படியாகவும், தான் கண்ணை மூடிக்கொண்டால் உலகமே இருண்டுவிடுமென்று நினைக்கும் பூனைபோல் உண்மையான விஷயங்களைத் தான் மறைத்துத்திரித்துக் கூறி விட்டதினாலேயே உலகத்தார் உண்மைகண்டு பிடிக்க முடியாது என்கிற அறியாமை விளக்கமும், வக்கீல் வாதத்தின் மூலம் பார்ப்பன ஆட்சிக்கேற்ற சூழ்ச்சிகளும் தந்திரப் பேச்சுகளும் முதலைக் கண்ணீர் என்பது போல மாய்மாலக்கூற்றுகளும் நிறைந்திருக்கின்றன. பிரசங்கம் அடிமுதல் நுனி வரையில் ஒரு எழுத்தாவது அந்தரங்க சுத்தியோடு குறிக்கப்பட்டதல்லவென்றும் ஒவ்வொரு எழுத்தும் ஊராரை ஏமாற்றும் கருத்துடனேயே வரையப்பட்டதென்பதை எவ்வித நிபந்தனையின் பேரிலானாலும் உறுதி கூறக்கூடியதாகவும் இருப்பதாய் நன்றாக நிருப்தியாக உணருகிறோம்.

தீர்மானங்களின் யோக்கியதையோவென்றால் "எனக்குப் பைத்தியம் தெளிந்து போய் விட்டது உலக்கை எடுத்துக்கொண்டு வா கோவணம் கட்டிக்கொள்ள" என்று சொல்வது போலிருக்கிறது.

தீர்மானங்களின் விபரம் அடியில் வருமாறு:-

1 சுவாமி சிரத்தானந்தர் கொலை.

"சுவாமி சிரத்தானந்தர் துரோகமாகவும் கோழைத்தனமாகவும் கொலைசெய்யப்பட்டது குறித்து இந்த மகாசபை தன் பயங்கரத்தையும் ஆத்திரத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறது. தமது வாழ்நாளை தேச ஊழியத்திற்கென்றே அர்ப்பணம் செய்திருந்தவரும், தாழ்ந்துபோனவர்கள், வீழ்ந்துபட்டவர்கள், பலஹீனமானவர்கள், ஆகியவர்களுடைய கட்சியைப் பயமின்றி எடுத்துக்கூறி வந்தவருமான அந்த தீர தேசபக்தரின் பரிதாப மரணத்தினால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அளவிலா நஷ்டத்தைக் குறித்து இந்த மகாசபை துயருறுகின்றது."

2 உமார் ஸோபானி.

"ஒத்துழையா இயக்கத்தின்போது காங்கிரஸுக்கும் தேசத்துக்கும் அரிய ஊழியம் செய்த ஜனாப் உமார்ஸோபானியின் அகால மரணத்தைக்குறித்து இந்த மகாசபை பெரிதும் துக்கிக்கிறது."

3 தென்னாப்பிரிக்கா இந்தியர்.

"தென்னாப்பிரிக்காவில் குடியேறியுள்ள இந்தியர்களின் அந்தஸ்தை நிர்ணயிப்பதின் பொருட்டுத் தற்போது ஆலோசனை நடத்திவரும் ராஜி மகாநாட்டுக்கு இந்த மகாசபை வாழ்த்துக் கூறுவதுடன், அந்த மகாநாட்டுக்கு ஆசிகூறி வழிகாட்டுமாறு ஆண்டவன் அருளைக்கோருகின்றது. தென்னாப்பிரிக்காவில் இம்மகாநாடு கூடுவதற்கேற்ற நிலைமையை உண்டுபண்ணுவதில் முதன்மையாயிருந்த அவ்வுத்தம ஆங்கிலேயா ஸ்ரீமான் ஆண்ட்ரூஸுக்கு மீண்டுமொருமுறை இம்மகாசபை வந்தனம் செலுத்துகிறது"

4 கெனியா இந்தியர்.

"கெனியாவில் குடியேறியுள்ள இந்தியர்களை ஒடுக்கும் நோக்கத்துடன் அந்நாட்டிலே மேலும் மேலும் சட்டங்கள் செய்து வருவதற்குச் சமீபத்தில் தலைவரியை 20 ஷில்லிங்கிலிருந்து 50 ஷில்லிங்குக்கு உயர்த்தியிருப்பதே உதாரணமாயிருக்கிறது. இச்செயலானது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்பது இந்தியர்களுடைய நன்மைகளையும் உரிமைகளையும் பறிகொடுத்து ஐரோப்பியரின் நன்மைகளைப் பாதுகாக்கும், ஸ்தாபனமேயன்றி வேறில்லையென்பதை மீண்டும் நிரூபித்துவிட்டதென்று இம்மகாசபை அபிப்பிராயப்படுகிறது."

5 சட்டசபைத் திட்டம்.

"தேச முன்னேற்றத்துக்காக எல்லா விஷயங்களிலும் தற்சார்பும், சுயராஜ்யத்தை நோக்கித் தேசம் முன்னேறுவதற்குத் தடையாயுள்ள எல்லாவிஷயங்களிலும் தீவிரமான எதிர்ப்புமே இந்திய சட்ட சபையிலும் மாகாண சட்டசபைகளிலுமுள்ள காங்கிரஸ்காரர்களின் முக்கியகொள்கையாயிருக்கவேண்டுமென்னும் தீர்மானத்தை இந்த மகாசபை வலியுறுத்துவதுடன், முக்கியமாகச் சட்டசபைகளிலுள்ள காங்கிரஸ்

(இதன் தொடர்ச்சி 11ம பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

அக்ஷய-ஹூ மார்கழி-மீ 18-உ.

பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

சென்ற மாதம் 25, 26உ சனி ஞாயிற்றுக் கிழமைகளில் மதுரை மாநகரில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு கூடிக் கலைந்து விட்டது. மகாநாடானது சென்னை தென் இந்திய நல உரிமைச்சங்கத்தினரால் பார்ப்பனரல்லாதார் மகா நாடென்று முறையாகச் சென்ற பத்து வருஷகாலமாய் நடந்துவந்ததை அனுசரித்தே கூட்டப்பட்டது என்பதாகக்கருதி "பார்ப்பன ரல்லாதார் 10வது மகாநாடு" என்னும் பேரால் கூட்டப்பட்டது என்று சொல்வதானாலும் இவ்வருஷம் பார்ப்பனரல்லாதார் முதல் மகாநாடென்றே சொல்ல வேண்டும். இந்த மகாநாட்டிற்கு வந்தால் தங்கள் வாழ்வில் மண் விழுந்துவிடுமோ, பெருமை குறைந்துவிடுமோ, பார்ப்பனர்கள் அழித்து விடுவார்களோ என்று பயந்தவர்களும், தவிர்க்கமுடியாதபடி பார்ப்பனர்களின் தாக்ஷண்ணியத்திற்கு கட்டுப்பட்டவர்களும், எப்போதும் பார்ப்பனரல்லாதார் கூட்டத்தில் சேருவதில்லை என்பதாக பார்ப்பனருக்கு வாக்குறுதி கொடுத்து அப்புறம் இப்புறம் ஒப்பந்தம் பேசிக்கொண்டவர்களும், தவிர்க்க முடியாத அசந்தர்ப்பத்தில் பட்டவர்களும் தவிர மற்றெல்லா முக்கியஸ்தர்களும் பிரதிநிதிகளும் விஜயம் செய்திருந்தார்கள். இம்மகா நாடு கூட்ட வேண்டுமென்று "குடி அரசின்" மூலம் வெகு நாளாக எழுதிக் கொண்டு வந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கும். இதை அனுசரித்தே சென்னை ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களையும் மற்றும் ஜில்லாக்களிலுள்ள பல திறப்பட்ட அபிப்பிராயம் கொண்ட பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும் இவ்வாறுமாதகாலமாய் கண்டு பேசி நமது திட்டங்களை விளக்கிக் காட்டி அவர்களது சம்மதமும் பெற்று வர ஸ்ரீ நாயக்கர் ஆங்காங்கு சென்று கொண்டிருந்ததும் வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆகவே இதன் பலனாக சட்ட சபைத் தேர்தல்கள் முடிந்தவுடன் இம்மகா நாடு கூட்டுவதாய் உபதேசித்திருந்தபடி மகா நாடு மதுரையில் கூட்டினதும் எல்லாப் பிரமுகர்கள் விஜயம் செய்திருந்ததும் அவர்கள் ஏற்கனவே ஒப்புக்கொண்டது போல் நமது திட்டமாகிய நிர்மாணத்திட்டத்தை மகா நாட்டில் நிறைவேற்றிக் கொடுத்ததும் நமக்கு மிகுதியும் சந்தோஷமே. இந்நிர்மாணத் திட்டம் மகா நாட்டில் நிறைவேற்றப் பட்டதைப் பற்றி நமது எதிரிகளான பார்ப்பனரும் நமது கோடாலிக் காம்புகளான பார்ப்பன ரல்லாதாரில் சிலரும் என்ன சொல்லிக் கொண்ட போதிலும் நமக்கு கவலை இல்லை. காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு இவ்விரு கூட்டத்தாரும் நடந்து கொள்ளும் இழி தன்மையைப் போலவும் வஞ்சக நினைவோடு தீர்மானிக்கும் போலித் தீர்மானங்களைப் போலுமல்லாமல் மதுரை மகா நாட்டில் தீர்மானங்கள் நிறைவேறின. மிகப் பெரும் பகுதி மக்கள் உண்மையான ஊக்கத்தோடும் எவ்விதத்திலாவது நிறைவேற்றி வைக்க வேண்டும் என்னும் ஆவலோடுமே அவைகள் ஏக மனதாய் நிறைவேற்றி வைக்கப்பட்டிருக்கின்றன.

தீர்மானங்களையும் மக்களின் உண்மையான நிலையையும் கவனிக்காமல் சில வாய்ப்பந்தல் பதர்கள் அக்கிராசனர் இப்படிச்சொன்னார், வரவேற்பு அக்கிராசனர் அப்படிச் சொன்னார்; பெயர் நன்றாக இல்லை, சுரைக்காய்க்கு உப்பு இல்லை என்று சோம்பேறி ஞானம் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் வருவது நமக்கு ஒன்றும் அதிசயமாக இல்லை. உலக அனுபவ சரித்திரத்தில் இப்படி ஒரு கூட்டம் இருந்துகொண்டுதான் வந்திருக்கிறது. ராவணனுக்கு தன் தம்பியே துரோகியாயிருந்தான். கிறிஸ்துவுக்கு தனது சிஷ்யனே துரோகியாயிருந்தான். மகாத்மாவையும் தனது சிஷ்யகோடியிலொருவரே மூலையில் உட்கார வைத்துவிட்டார். ஆகவே பஞ்சமும் நோயும் பார்ப்பனச் சூழ்ச்சியும் உற்றதும் சுயமரியாதை அற்றதுமான நமது நாட்டில் இத்திருக்கூட்டம் தோன்றுவது அதிசயமல்ல. இக்கூட்டம் யோக்கியமானகூட்டமாயிருக்குமானால் மகாநாட்டிற்கு வந்து தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லவோ மகாநாட்டுக்கு தெரிவிக்கவோ செய்திருக்கும். அது யாருக்கும் ஆட்சேபமுமிருக்கவில்லை. சிலருக்கு பார்ப்பனால்லாதார் என்கிற பெயர் பிடிக்கவில்லையாம். இதனால் தங்களுக்கு பெருத்த அவமானமாயிருக்கிறதாம். இவர்கள் இதுவரை எந்த உலகத்திலிருந்தார்களோ தெரியவில்லை. இவர்களையும் இவர்கள் பெற்றோர்களையும் சந்ததிகளையும் சேர்த்து வெள்ளைக்காரன், "மகமதியரல்லாதார்" என்று மேளம்போட்டு அழைக்கிறானே இதனால் இவர்களுக்கு மானம் போகவில்லையா என்று கேட்கிறோம். இந்தப் பெயரோடு இவர்கள் சகோதரர்கள் சட்ட சபைக்குப் போக உடந்தையாய் இருந்தார்களே இதனால் இவர்கள் மானம் போகவில்லையா? என்று கேட்கிறோம். கொஞ்சமாவது நெஞ்சில் ஈவு இரக்கம் குலாபிமானம் தேசாபிமானம் ஒன்றுமில்லாமல் தன் வாழ்வையும் தன் பெயர் தம்பட்டமடிப்பதையுமே கருத்திலிருத்திக்கொண்டு—மகாநாடு எதற்காக நடத்தப்பட்டது? இதனால் யார் பலன் அடைவார்கள்? இம்மாதிரி ஒரு கூச்சல் ஏற்பட்டபிறகு நமது மக்களின் நிலை என்னவாயிருக்கிறது?என்பதை கொஞ்சமும் உணராமல் "உபதேசியார்" வேடம்போடுவதானால் அது மனதிற்கு எவ்வளவு வேதனையைக் கொடுக்கும் என்பது அனுபவித்தவனுக்குத் தான் தெரியும்.

நிற்க மகாநாட்டுக்கு வந்தவர்களுக்கும் மகாநாட்டு அனுதாபிகளுக்கும் ஒரு வார்த்தை. தீர்மானங்களை நிறைவேற்ற அனுகூலமாயிருந்ததும்தீர்மானங்களைநிறைவேற்றியதும் மாத்திரம் போதாது. பார்ப்பன காங்கிரஸ்காரர்களுக்கு ஆனால் இதுபோதும். ஏனெனில் காங்கிரசு என்பது நமது நாட்டைப் பொறுத்தவரையில் பார்ப்பனர்களும் படித்தவர்களும் இவ்விரு கூட்டத்தார்களின் கூலிகளும் சிஷ்யர்களுமுடையதாமாயிருப்பதால் ஏதோ ஒரு தீர்மானம் பாமர மக்கள் ஏமாறும்படி போட்டு சட்டசபைக்குப்போய் உத்தியோகம் பெறவேண்டியதே அதன் தத்துவம். ஆனால் மதுரை மகாட்டிற்கு வந்திருந்த 5000 பிரதிநிதிகளில் உத்தியோகத்திற்கு லாயக்கானவர்களோ சுமார் ஒரு நூறு பேர்கள்கூட இருக்கமாட்டார்கள். மற்ற 4900 பேரும் தங்கள் நாட்டினுடையவும் சமூகத்தினுடையவும் சுயமரியாதையைக்காப்பாற்ற வந்தவர்கள் ஆதலால் இவர்கள் இனி சும்மா இருக்காமல் இத்திட்டங்களை நிறைவேற்ற முயலவேண்டும். சென்னைத் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்களின் யோக்கியதை இம்மகாநாட்டில் நன்றாய் விளங்கிவிட்டது. ஆகலால் அவர்களை நம்புவதில் முழுப்பலனையும் அடைந்து விடமுடியாது. ஆங்காங்கு ஜில்லா தாலூக்கா கிராம வாரியாக கிளைச் சபைகள் ஏற்பாடு செய்வதும் பிரசாரம் செய்வதும் நிர்மாணதிட்டங்களை நிறைவேற்றுவதும் பொது மக்களுடைய வேலையாய் விட்டது. சீக்கிரத்தில் வேலை செய்வோரின் கூட்டம் என்பதாக ஒரு கூட்டம் கூட்டி ஜனவரி மாதத்திற்குள்ளாகவே இத் திட்டங்களை நிறை வேற்றத்தகுந்த வழிகளைக் காணவேண்டும்.

இக் கூட்டத்தின் அங்கத்தினர்கள் கூடிய வரையில் எந்தத்தேர்தலுக்கும் நிற்கக் கூடாதவர்களாகவும் தங்களது முழு நேரத்தையும் இதற்கே செல விடுபவர்களாகவும் இருக்க வேண்டும். 12-பேருக்குக் குறையாமல் மாதம் 30 ரூபாயிக்கு அதிகப்படாத சம்பளமும் 10 ரூபாயிக்கு அதிகப்படாத படியும் கொடுத்து ஜில்லா சுற்றுப் பிரயாண அமைப்புக்காரரையும், மாதம் 50-ரூபாய்க்கு அதிகமில்லாத சம்பளமும் 25-ரூபாய்க்கு அதிகமில்லாதபடியும் கொடுத்து 3மண்டலாதிபதிகளை தணிக்கையாளராகவும் நியமித்து வேலை துவங்கவேண்டும். ஆக இந்த செலவுகளுக்கும் சில்லரைச்செலவுகளுக்குமாக மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் குறைந்தது மூன்றுமாதத்திற்காவது தமிழ்நாட்டிற்கு 3000 ரூபாய் வேண்டும். இந்தப்பணத்தை யாராவது சிலரோ ஒருவரோ தருவதாக

இந்த இரண்டுவாரத்திற்குள் ஸ்ரீமான் மதுரை P. T. ராஜன் அவர்களுக்கு தங்களது பெயர்களையும் தொகைகளையும் தெரிவித்துவிடவேண்டும். அப்படிக்கு இயலாதவரை ஸ்ரீமான்கள் P. T. ராஜன் 1000 ரூபாயும் சவுந்திர பாண்டிய நாடார் 1000-ரூபாயும் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் 500 ரூபாயும் ஸி. எஸ். ரத்தின சபாபதி முதலியார் 500 ரூபாயுமாகப்போட்டுக் கொண்டு ஜனவரி 15உயில் கூட்டம் கோவையிலோ மதுரையிலோ போட்டுகாரியங்கள் துவக்க வேண்டும். அப்படிக்கு இல்லாதவரை நமது மகாநாடு என்பது நமது எதிரிகள் சொல்வதுபோல் தான் என்று பிறர் நினைக்க இடமுண்டாகிவிடும். மகாத்மா காந்தியவர்கள் ஏப்ரல் மத்தியில் நமது நாட்டிற்கு விஜயம் செய்யப் போகிறார். அக்காலத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் மக்களின் சுயமரியாதைக்கும் பொருளாதார நிலைமைக்கும் வேலை செய்ததா அல்லது காங்கிரஸ் வேலைசெய்ததா? என்பதை அறியச்செய்துகதரைப் பரப்புநாம் எவ்வளவு தூரம் பிரசாரம் செய்திருக்கிறோம் என்பதைக்காட்டி நமது இயக்கத்திற்கு மாகாத்மாவின்ஆசியைப் பெற வேண்டும். மகாத்மாவின் அபிப்பிராயங்கள் வர வர தாக்ஷண்ணியத்திற்கு கட்டுப்படக் கூடியதாயிருந்தாலும் அதுவும் பெரியோர் குணத்திலொன்றாதலால், மகாத்மாவின் ஆசி நமக்கு இருப்பதென்பது நமது சுயமரியாதை இயக்கத்திற்கு எவ்வளவோ மேன்மையை உண்டாக்கும். ஆதலால் மகாநாட்டுக்கு வந்துபோனவர்களும் மகா நாட்டு அநுதாபிகளும் இதை கவனித்து உடனே தாங்கள் செய்ய வேண்டியதைச்செய்வதுடன் முதல் காரியமாக வரப் போகும் பொங்கல் பண்டிகைக்கு எல்லோரும் கதரையே வாங்கி உடுத்த வேண்டும். என்றும் தங்கள் சிப்பந்திகளிடையிலும் வேலைக்காரர்களிடையிலும் தங்கள் ஆதிக்கத்தில் உள்ள ஸ்தாபனங்களின் இடையிலும் கதரைப் பரப்ப வேண்டும். அதில்லாமல் வாயில் பேசுவதானது பார்ப்பன அரசியல் புரட்டுக்கு இளைத்ததாகா தென்று கண்டிப்பாய் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குறிப்பு — இம்மாதம் 1-தேதி முதல் கதரின் விலையும் கஜம் ஒன்றுக்கு 0—0—9 விதம் குறைவு பட்டிருக்கிறது.

சுவாமி சிரத்தானந்தர்.

சுவாமி சிரத்தானந்தர் என்னும் பெரியாரை உலகம் முழுதும தெரியும். இவர் தேசத்திற்காகவும், சமூகத்திற்காகவும், ஒதுக்கப்பட்டவர்களின் உயர் முன்னேற்றத்திற்காகவும் தனதுதொழில், செல்வம், குடும்பம் முதலியவற்றைத் தியாகம் செய்து தனது ஜீவிதத்தின் பெரும்பான்மையான பாகத்தையும்சந்நியாசியாகவிருந்தே, தான் எடுத்துக்கொண்டகாரியத்திற்காக அஞ்சாநெஞ்சத்தோடும், இளையா ஊக்கத்தோடும்தொண்டாற்றினார். இவர் ஒரு முசிலீமால்படுகொலையுண்டிறந்தது ஒவ்வொரு மனிதனுடைய மனதையும் பெரும் துன்பத்திற்குள்ளாக்குமென்பதற்கு சிறிதேனும் ஐயமில்லை. சுவாமிகளது மரணத்தால் இந்தியா தனது உண்மை புத்திரர்களில் ஒருவரை இழந்ததென்று சொல்வது மிகையாகாது. ஆயினும் இதை ஆராயுமிடத்து இதுவும் ஒரு நன்மைக்கென்றே கொள்ளநேரும். ஏனெனில் பிறப்பெய்திய ஒவ்வொரு மனிதனும் இறக்க வேண்டியதவசியமே. அங்ஙனம் சுவாமிகள் சாதாரணமாக ஏதோ ஒரு நோயின் பேரால் இறந்திருப்பாரேயாயின் இன்றிருக்கும் உணர்ச்சிக்கும் அவரது தொண்டில் மக்களுக்கிருக்கும் ஊக்கத்திற்கு இத்தனை ஏதுவில்லாமலிருக்கும். இப்படுகொலையினால் அனுவசியமாய் ஒரு கூட்டத்திற்கு பழியேற்பட நேரிட்டதேயன்றி சுவாமிகளுக்கேனும் அவர்கொண்ட தொண்டிற்கேனும் யாதொரு குறைவும் வந்ததாக எண்ண இடமில்லை.

அவர் தான் கொண்ட காரியத்திற்காக இரத்தம் சிந்தி உயிர் துறந்து தானும் தானெடுத்த காரியமும் உலகினின்று மறையாவண்ணம் செய்திருக்கிறார். ஏசுநாதர் சிலுவையிலறையப்படாதிருந்தால் இன்று அவருக்கித்தனை பக்தர்கள் இருக்கமாட்டார்கள். அதுபோலவே சுவாமிகளும் அழியாப் புகழ் பெற்றுவிட்டார். ஆதலால் அவரது உண்மை பக்தர்களுக்கிடையில் இக்கொலைக்காக பரபரப்பும் கிளர்ச்சியும் ஒரு சிறிதும் வேண்டியதில்லை அவர்களுக்கு முன்னிருந்ததைவிட பன்மடங்கு சுவாமிகள் காரியத்தில் அபிமானம் கொள்ள அவகாசம் கிடைத்திருக்கிறது. இத்தருணத்தை வீண் போக்காது அப்பெரியார் விட்டுப்போன காரியத்தை சிரமேற் கொண்டு வினையாற்ற வேண்டியதே கடனாகும். தான் கொண்ட கொள்கைக்காக கடைசிவரை கொஞ்சமும் தளராமல் உழைத்து வந்து அதற்காகவே தனது உயிரையும் துறந்த சுவாமிகளது ஆத்மா சாந்தி அடைவதாக.

அஸ்ஸாம் காங்கிரஸ்.

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

காரர்கள் பின்வருமாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

(அ) தேசீய கோரிக்கைக்கு அரசாங்கத்தார் திருப்திகரமான பதிலளித்ததாக காங்கிரஸ் மகாசபை அல்லது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அபிப்பிராயப்படும்வரை மந்திரி பதவிகளையும், மற்றும் அரசாங்கத்தினால் கொடுத்துப் பெறற்குரிய உத்தியோகங்களையும் மறுத்துவிடவேண்டும்; மற்றக் கட்சியினரால் மந்திரிசபை அமைக்கப்படுவதையும் எதிர்க்கவேண்டும்.

(ஆ) அரசாங்கத்தார் அத்தகைய பதிலளிக்கும்வரை அல்லது அகில இந்திய காரியக்கமிட்டியார் வேறுவிதமாககட்டளையிடும்வரை செலவுகளுக்கு அநுமதி மறுப்பதுடன் வரவு செலவு திட்டங்களை நிராகரித்துவிடவேண்டும். ஆனால் (ஈ) பிரிவில்கண்ட விஷயங்களுக்காக இவ்விதிக்கு விலக்குச் செய்துகொள்ளலாம்.

(இ) அதிகாரவர்க்கம் தன் சக்திகளைத் திரட்டி அமைப்பதற்காகக் கொண்டுவரும் எல்லா மசோதாக்களையும் நிராகரிக்கவேண்டும்.

(ஈ) தேசிய வாழ்வின் வளர்ச்சிக்கும் பொருளாதாரம், விவசாயம், தொழில், வியாபாரம் ஆகிய இத்துறைகளில் முன்னேற்றத்திற்கும் தனிப்பட்டவர்களின் சுதந்திரம், பேச்சுரிமை, கூட்டங்கூடும் உரிமை, பத்திரிகை உரிமை இவற்றின் பாதுகாப்புக்கும் அவசியமான தீர்மானங்களையும், மசோதாக்களையும் கொண்டுவந்து நிறைவேற்றவும், ஆதரிக்கவும் வேண்டும்.

(உ) விவசாயத்தொழிலில் ஈடுபட்ட குடிகளின் நிலைமையைக் கூடிய விரைவில் அபிவிருத்தி செய்வதற்காக நிரந்தர குடிவார உரிமை முதலிய நன்மை தரும் மசோதாக்களைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும்.

(ஊ) விவசாயத் தொழிலாளர், ஆலைத் தொழிலாளர் இவர்களின் உரிமைகளைப் பொதுவாகப் பாதுகாத்து, நீதிக்கிசைந்த முறையில் நிலச்சுவான்தார்களுக்கும் குடிகளுக்கும், முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்படும் விவாதங்களைத் தீர்த்துவைக்கவேண்டும்.

6 நிர்மாண வேலை.

காங்கிரஸ் அடியிற்கண்ட நிர்மாண வேலைத்திட்டத்தை அங்கீகரிக்கிறது

நாட்டில் செய்யப்படும் வேலையில் பொது ஜனங்களுக்கு அவர்களுடைய அரசியல் உரிமைகளை அறிவுறுத்துவதும், அவ்வுரிமைகளை அடைவதற்குப் போதிய பலமும், எதிர்க்கும் சக்தியும் அவர்கள் பெறும்படி நிர்மாண திட்டத்தில் பயிற்றுவதும் முக்கிய அம்சங்களாயிருக்கும். நிர்மாண திட்டமானது முக்கியமாகக் கதர்ப்பிரச்சாரம், வகுப்பு ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றம், மதுவிலக்கு ஆகிய இத்துறைகளில் நடத்தி வைக்கப்படும் கிராம நிர்மாணம், ஸ்தாபனங்களைக் கைப்பற்றுதல், தேசிய முறையில் கல்வி அபிவிருத்தி, ஆலைத்தொழிலாளர், விவசாயத் தொழிலாளர் முன்னேற்றம், தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் மிராசுதாரர்களுக்கும், குடியானவர்களுக்கும் சமரசத்தை ஏற்படுத்தல், பொதுவாக இந்தியாவிலும் வெளிநாட்டிலுமுள்ள இந்தியர் தேசிய, பொருளாதாரத் துறைகளிலும், தொழிலிலும், வியாபாரத்திலும் முன்னேறுவதற்கான முயற்சிகள் எல்லாம் இவ்வேலையில் அடங்கியதாகும்.

7 வெளிநாட்டில் பிரசாரம்.

(அ) வெளிநாடுகளில் காங்கிரஸ் செய்யும் வேலை வெளிநாட்டாரை இந்தியாவின் விடுதலை இயக்கத்தில் பற்றுகொள்ளும்படி செய்யும் நோக்கத்துடன் உண்மையான விவரங்களைப் பரப்பி வருவதுடன் அமையும்.

(ஆ) அடுத்த ஜனவரி மாதம் 20 தேதி பிரஸ்ஸல்ஸ் (பெல்ஜியம்) நகரில் நடைபெறவிருக்கும் ஒடுக்கப்பட்ட நாட்டாரின் காங்கிரசுக்கு இம்மகா சபையின் பிரதிநிதியாக பண்டித ஜவஹரிலால் நேரு நியமிக்கப்படுகிறார்.

8 வங்காள அரசியல் கைதிகள்.

காங்கிரஸ் மகாசபையிலும், பிறசபைகளாலும் பல முறை கண்டிக்கப்பட்டிருக்கும் 1818ம் வருஷத்து 3வது ரெகுலேஷனையும் சட்டசபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் அபிப்பிராயத்துக்கு நேர்மாறாக யதேச்சாதிகாரத்தினால் நிறைவேற்றப்பட்ட வங்காள அவசரச்சட்டத்தையும் அரசாங்கத்தார் உபயோகிப்பதற்குச் சிறிதும் நியாயமில்லையென்று இந்தக் காங்கிரஸ் உறுதியாக அபிப்பிராயப்படுகிறது. இச்சட்டங்களின் கீழ் வங்காளத்தில் அமைதியாகப் பொது ஊழியம் செய்துகொண்டிருந்த பலர் கைதுசெய்யப்பட்டு, திட்டமாகக் குற்றங்கள் தெரிவிக்கப்படாமலும், பகிரங்க விசாரணையின்றியும் சிறையிலிடப்பட்

டதுடன் அவர்கள் இன்னமும் தாங்கள் செய்த குற்றங்கள் இன்னவையென்று தெரியாமலிருக்கிறார்கள். இந்நிலைமையில் தேசத்தாரும் சட்டசபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களும் தெரிவித்துள்ள தெளிவான அபிப்பிராயத்துக்கு மாறாக அவர்கள் இன்னமும் சிறையில்வைக்கப்பட்டிருப்பதையும், வங்காளத்திலிருந்து நாடு கடத்தப்பட்டிருப்பதையும் இந்த மகா சபை பலமாகக் கண்டிக்கிறது.

9 ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை.

ஹிந்து முஸ்லீம்களுக்குள் தற்போது நிகழ்ந்துவரும் வருந்தத்தக்க பூசல்களை ஒழிப்பதற்கு இந்து முஸ்லீம் தலைவர்களைக் கலந்துகொண்டு தகுந்த முறைகளைக் கண்டு பிடிக்க உடனே நடவடிக்கை எடுத்துக்கொண்டு 1927ம் வருஷம் மார்ச்சு மாதம் 31 தேதிக்குள் அறிக்கை அனுப்புமாறு காரிய கமிட்டிக்கு இந்தக் காங்கிரஸ் கட்டளையிடுகிறது. இது சம்பந்தமாக தேசத்திலுள்ள எல்லா காங்கிரஸ்காரர்களும் யோசனைசொல்லவும், மேற்படி காரியக்கமிட்டி அறிக்கையை ஆராய்ந்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துககொள்வதற்கும் அகில இந்தியகாங்கிரஸ் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கிறது

[ஏனைய தீர்மானங்கள் அடுத்த வாரம் வெளிவரும்]

ஆகிய பதின்மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதில் முக்கியமாய் கவனிக்க வேண்டியது 4-வது தீர்மானமாகிய சட்டசபைத் திட்டம் என்னும் தீர்மானமேயாகும். இது எவ்வளவு தூரம் பாமர மக்களை ஏமாற்றச்செய்த தீர்மானம் என்று அறிய வேண்டுமானால், இத் தீர்மானத்தை விஷயாலோசனைக் கூட்டத்தில் பிரேரேபிக்க ஆரம்பித்தவுடன் மகாத்மா அக்கூட்டத்தைவிட்டு வெளியேறினதிலிருந்தே அறிந்துகொள்ளலாம். அதாவது அத்தீர்மானத்தில் சட்டசபையிலுள்ள காங்கிரஸ்காரர்கள் நடந்துகொள்ளவேண்டியதைப்பற்றி குறித்திருப்பதில் "அரசாங்கத்தார் திருப்திகரமான பதிலளித்ததாக காங்கிரஸ் கமிட்டியாருக்கு தோன்றும்வரை மந்திரி பதவிகளையும் அரசாங்கத்தினால் கொடுத்து பெறத்தகுந்த உத்தியோகங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. மற்றக் கட்சியினரால் மந்திரி சபை அமைக்கப்படுவதையும் எதிர்க்கவேண்டும்." என்பதானது இதன் உட்பொருள் என்ன? தாங்களே மந்திரி சபையை அமைத்து நடத்தத்தக்க யோக்கியதை கிடைக்கும்வரை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்பதுதான். இப்போது சென்னை மாகாணத்தில் மாத்திரம் மற்ற கட்சியாரைவிட அதிகமான பேர் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தாலும் மற்ற மாகாணங்களில் போதிய மெஜாரிட்டி இல்லையாதலால் ஒரு மாகாணம் மாத்திரம் ஒப்புக்கொண்டால் மற்ற மாகாணத்தாரின் நிஷ்டூரம் ஏற்படும். ஏனெனில் வங்காள மாகாணத்தாருக்கு சென்ற தேர்தலில் போதிய மெஜாரிட்டி இருந்தும் சென்னை மாகாணத்தாருக்காக அவர்கள் மந்திரி உத்தியோகத்தை மறுத்துவிட்டது எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். அதற்கு பதிலாக மற்ற மாகாணத்தாருக்காக இவர்கள் மறுக்கவேண்டியதாயிற்று. அல்லாமலும் சென்னை மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சியார் மந்திரி சபை அமைப்பது சுலபமான காரியமல்ல. முதலாவது மந்திரி உத்தியோகத்திற்கு அக்கட்சியில் தலைவரால் வாக்களிக்கப்பட்டபடி குறைந்தது 8, 10 பேருக்கு கொடுத்தாகவேண்டும்.

ஸ்ரீமான்கள் 1 நரசிம்மராஜு, 2 சாமி வெங்கிடாசல செட்டியார், 3 டி. ஆதிநாராயண செட்டியார், 4 எஸ். முத்தய்யா முதலியார், 5 கே. ஆர். வெங்கிட்டராமய்யர், 6 எல்.கே. துளசிராம், 7 சி. வி. வெங்கிட்டரமண அய்யங்கார், 8 எஸ். சத்தியமூர்த்தி இது தவிர ஜனாப்கள் மூன்று பேருக்கும் வேறு ஏதாவது வழி செய்தாகவேண்டும். இது தவிர வேறு பலருக்கும் வேறு பல உத்தியோகங்கள் வழங்கியாகவேண்டும். ஆகவே இந்தப் பத்துப் பதினைந்து பேர்களில் மூன்று மந்திரி உத்தியோகம் பெற்றவர்களும், தலைவர் உத்தியோகம், உபதலைவர் உத்தியோகம் பெற்றவர்களும் போக மற்ற 12 பேர்கள் உடனே பெரும்பாகம் நேரே ஜஸ்டிஸ் கட்சியிலும் சிலர் சுயேச்சை கட்சியிலும் சேர்ந்துவிடுவார்கள். தவிரவும் சட்ட சபை மொத்தம் 128 மெம்பர்களில் சுயராஜ்யக் கட்சியார் பெற்றதெல்லாம் அவர்கள் சொல்லுகிறபடி வைத்துக்கொண்டாலும் 45 பேர்கள்தான், மீதி 83 பேர்கள் எதிர்கட்சியில் உட்கார்ந்தால் இவர்கள் கதி என்னவாகும் என்பது அவர்களுக்குத் தெரியும் ஒரு சமயம் சர்க்கார் உதவி கிடைப்பதாக வைத்துக்கொண்டால் சர்க்கார் சொல்லுகிறபடி இவர்கள் கேட்டாகவேண்டும். சுயேச்சைக் கட்சியார் தயவு பெறலாமென்றாலோ அவர்களுக்கு ஒரு மந்திரி ஸ்தானமாவது கொடுத்தாகவேண்டும். அப்பொழுது சுயராஜ்யக் கட்சியில் இருந்து இன்னும் சிலபேரும் சுயேச்சைக் கட்சியிலிருந்து இன்னும் சில பேரும் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்துவிடுவார்கள். ஆகவே இந்த காரியங்கள் தான் சுயராஜ்யக் கட்சியார் மந்திரி பதவி அடைவதற்கு இடையூறாக இருந்தது. கவர்னர் கூப்பிட்டு அமைக்கச்சொன்னாரே என்றால் சர்க்கார் இம்மந்திரி சபையை யார் தலைமையாவது போட்டுத்தானாகவேண்டும். குறைந்த துணையினரான சுயேச்சைக் கட்சியாரைக் கூப்பிட்டு இருக்கும்போது அதிகத் துணையார் என்று சொல்லிக்கொள்பவர்களை கூப்பிடுவதில் ஆட்சேபனை என்ன இருக்கிறது? ஆதலால் தங்களுக்கு மந்திரி பதவி வகித்து யாருடைய தயவு தாக்ஷண்ணியமும் இல்லாமல் அனுபவிக்கக் கூடிய காலம் வரும் வரை "சர்க்கார் இணங்கி வரவில்லை" என்று சொல்லிக்கொண்டு காலம் தாட்டுவதற்கு ஆகவே இத்தீர்மானம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். தவிரவும் சுயேச்சைக் கட்சி மந்திரியை சபை அமைத்தது பேருக்கு மாத்திரம் ஸ்ரீமான் சுப்பராயனே ஒழிய உண்மையில் சுயராஜ்யக் கட்சி பார்ப்பனரும்,"ஒத்துழைப்புபார்ப்பனரும்" "ஒத்துழையா பார்ப்பனரும்" சேர்ந்துதான் அமைத்திருக்கிறார்கள். உண்மையில் சுயராஜ்யக் கட்சியார் திருட்டுத்தனமாய் ஒத்துழைப்பதாக வாக்களித்திரா விட்டால் ஸ்ரீமான் சுப்பராயன் அவர்கள் மந்திரி சபை அமைக்க தைரியம் கொண்டிருப்பாரா என்பதை வாசகர்களே யோசித்துப் பார்க்க வேண்டும். ஆதலால் காங்கிரஸ் கமிட்டிக்கு சர்க்கார் திருப்தியளிக்கும்படி நடந்து கொள்வது என்பது "ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் காத்திருப்பது தான்." தவிர ஷை தீர்மானத்தின் 2-ம் பாகமாகிய, சிலவினங்களை நிபந்தனைகளுக்குட்பட்டு நிராகரிப்பது என்பதும் மூன்றும் பாகமாகிய அரசாங்கத்தார் கொண்டுவரும் மசோதாக்களை எதிர்ப்பது என்பதும் தாங்கள் சவுகரியம் போல் நடந்து கொள்ளுவதற்கு ஏற்படுத்திக்கொண்ட தந்திர மார்க்கமே ஆகும். நான்காம் பாகமாகிய சில மசோதாக்கள் கொண்டுவர இடம் வைத்துக்கொண்டிருப்பது எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் தங்களுக்கு ஒரு நிலை இல்லாததும் முன்னுக்கு பின் முரணானதும் சமயம் போல் நடந்துகொள்ள உரிமை பெற்றுக் கொண்டதுமாகும். மற்ற பாகத் தீர்மானங்களும் பலதிறப்பட்ட பிறரை ஏமாற்றுவதற்கு உதவியதே அல்லாமல் காரியத்தில் நடத்தக்கூடியதல்ல. தவிர 11-வது தீர்மானமாகிய கதர் தீர்மானம் மாத்திரம் நாம் சிறந்து சந்தோஷப்படக் கூடியதாயிருக்கிறது. அதுவும் மதுரை பார்ப்பனரல்லாதார் மகா நாட்டில் கதர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக இங்கிருந்து கோஹத்திற்கு தந்தி போனவுடன் அங்குள்ள பார்ப்பனர்கள் இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போய் திடீரென்று தாங்களும் தீர்மானிக்க வேண்டியதாயிற்று. ஆனாலும் எத்தனை பேர்கள் காங்கிரஸ் மெம்பர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் கட்டப்போகிறார்கள் என்பதை பொது ஜனங்கள் பார்க்காமல் இருக்கப் போவதில்லை. எப்படி ஆனாலும் இத்தீர்மானம்காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட அளவுக்காவது நாம் சந்தோஷப்பட்டுத்தான் ஆக வேண்டும் மற்றபடி 6-வது தீர்மானமாகிய நிர்மாண வேலை என்னும் தீர்மானமானது. மொட்டையாகவும் குழப்பப்பட்டு ஏமாறும்படியாகவும் குறிக்கப்பட்டிருக்கிறது

காங்கிரஸ் நிர்மாண திட்டத்தை அங்கீகரிக்கிறது என்றும் நிர்மாண திட்டத்தின் மூலம் ஜனங்களை பயிற்றுவது என்றும் எழுதப்பட்டிருக்கிறது. யார் நடத்தி வைப்பதென்றாவது அதன் அவசியத்தை ஒப்புக் கொள்வதாகவாவது குறிப்பிடவேயில்லை. ஆனால் அக்கிராசனர் உபன்னியாசத்தில் கதர்ப் பிரசாரத்தை காங்கிரசிலிருந்து தனி இயக்க மூலம் பிரித்துக் கொண்டது போல் தீண்டாமையையும் காங்கிரசிலிருந்து பிரித்துவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறதைப் பார்க்கும்போதே இவர்கள் நோக்கம் சட்ட சபையும் மந்திரி பதவியுந்தான் என்பது நன்றாய் விளங்கிவிடும். ஆகவே காங்கிரசின் உண்மையான வேஷம் இன்னது என்பது இந்த தடவை நன்றாய் வெளியாய் விட்டது. இனியும் ஏதோ சில பிழைப்புக்கு வேறு நிவர்த்தி இல்லாத ஆசாமிகளையும் வக்கீல்களையும் பார்ப்பனர்களையும் தவிர மற்றவர்கள் இப்போதைய காங்கிரசில் நுழைய மாட்டார்கள் என்பது மாத்திரம் உறுதி. இனி எவ்வித சூழ்ச்சியிலும் மக்கள் ஏமாறமாட்டார்கள் என்பதும் உறுதி.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மதுரை மகாநாடு.

ஸ்ரீமான்
சிங்காரவேலு செட்டியாரின்
அபிப்பிராயம்.

அரசியலின் தடைநீங்க மார்க்கம்.

காங்கிரஸ் வாதிகளாகிய நாங்கள் மதுரை மகாநாட்டில் அரசியல் வளர்ச்சி சம்பந்தமாக நடைபெற்றதைப்பற்றி என்ன அபிப்பிராயங்கொண்டபோதிலும், மகாநாட்டில் மத சீர்திருத்த சம்பந்தமாக நிறைவேறின தீர்மானத்தைப்பற்றியும் அங்கு நம் நாட்டார் சடங்கு சீர்திருத்த விஷயமாக எடுத்துக்கொண்ட ஊக்கத்தைப்பற்றியும் புகழ்ந்தேத்தாமலிருக்க முடியவில்லை. இத்தீர்மானப்படி ஒவ்வொரு வகுப்பாரும் தங்களுக்குள்ளேயே புரோகிதர்களையும், சடங்குக் காரர்களையும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிகிறது. இது நமது சமய சரித்திரத்தில் ஓர் விசேஷ சம்பவமே. நெடுநாளாக புராணங்கள் இந்தியாவில் பரவின நாட்கள்தொட்டு மதக்கிரிகைகளும் சடங்குகளும் செய்ய பிரத்தியேகமான ஓர் கூட்டத்தார் லாயக்குள்ளவர்களென்றும் அன்றுதொட்டு அக்கூட்டத்தாரே புரோகிதர்களாகவுமிருந்து வருகிறார்கள். அவர்களைத்தான் நாம் பிராமணர்களென்று சொல்லுகிறோம். இவர்கள் மதசம்பந்தமான வைதிக, லௌகிகமான அல்லாக்கிரியைகளுக்கும் புரோகிதர்களாயிருக்கின்ற ஆதிக்கத்தை கைப்பற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். மற்ற சமூகத்தார்களும் நாளது வரையிலும் அவர்களிடமிருந்து இந்த உரிமையைக் கைப்பற்ற முயற்சித்ததுமில்லை. இல்லையென்று ஓரே பிடிவாதமாய் சொல்ல முடியாது. பிரம்மசமாஜத்தவர்களும், நம நாட்டு வீரசைவர்களும் இது விஷயமாய் [illegible] கிளர்ச்சி செய்தார்கள். ஆனால் [illegible] நாடு முழுவதும் பரந்த இயக்கமாயிருக்கவில்லை. மதுரையில் நடந்த மகாநாடே முதன்மையாக இந்த இயக்கத்தை நாடு முழுதும் முதல் இயக்கமாகச் செய்தது. பௌத்தர் காலத்தில் வைதிகம் அறவே தொலையவும் அக்கினிஹோத்திரிகள் என்பவர்களுடைய புரோகிதத் தன்மை பாழ்படவும் நேரிட்டது. அவர்கள் அதை புனர்த்து சமயம்போல் நடத்திக்கொண்டார்கள். மேல் நாட்டில் இத்தகைய வைதிக புரோகித மதத்தையும் கொடுமையையும் மிக்க பெரும் கிளர்ச்சிகள் நடத்தின மார்ட்டின் லூதர் என்பவர் பெரும் கிளர்ச்சிசெய்து வலிவோடு செய்த செய்கையின் காரணமன்றோ இன்று ஐரோப்பாவில் புரோகித மதக்கொடுமை ஒழிந்திருக்கக் காண்கின்றோம்.

மதக்கொடுமை ஒழியவேதான் ஐரோப்பியர்கள் இன்று எவ்வகையிலும் சுதந்திரர்களாயிருக்கிறார்கள். மதுரை மகாநாட்டில் புரோகித மதத்தையும் சடங்கு மதத்தையும் ஒழிக்க கொண்டுவந்த தீர்மானத்தை கொண்டு முதன் முதல் இதுவே நம் நாட்டில் வந்த இயக்கமென்று சுதந்தரதாகமுடைய நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இன்று நாட்டு நம் மக்கட்கிடையிலிருக்கும் மோக்ஷ சம்பந்தமான மூட எண்ணங்கள் தொலைந்தன. அவைகளுக்குச் சாவுமணியடிக்கப்பட்டது. இனிமேல் நம்மவர்கள் புருஷார்த்தத்திற்கோ, புண்ணியத்திற்கோ, மோக்ஷத்திற்கோ புரோகிதர்களை எதிர் பார்க்கவேண்டியதில்லை. இத்துறையிலுள்ள இந்த இயக்கம் நம் மக்கள் பூர்ண சுதந்தரமடைய மற்றெல்லாத் துறைகளிலும் இருந்து வரவேண்டிய போதுமான ஊக்கந்தருமென்று நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன்.

நெடுங்காலமாய் எதிர்பார்க்கப்பட்ட இந்த சீர்திருத்தத்தை அறிவுள்ள எந்த மனிதனும் எதிர்க்கமாட்டான். நம் நன்மைக்காக கடவுளை வணங்குவதும் நம் காரியங்களை நாமே ஆள்வதும் நமது பிறப்புரிமை. ஆகவே உண்மை சுதந்திரவாதிகளாகிய எல்லோரும் இத்தகைய சீர்திருத்தங்களை ஆதரித்து அவற்றை பரவச்செய்து பழக்க வழக்கத்தினால் நமது பிறப்புரிமைக்குத் தடையாய் இருக்கும் எல்லாவற்றையும் அடியோடு புதைக்க பாடுபடுவது அவர்களின் உயர்கடமையாகும். இத்தகைய சீர்திருத்த இயக்கங்களை எல்லா அரசியல்வாதிகளும் அவசியம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இது சுயமரியாதையையும் பிறப்புரிமையையும் காப்பாற்றும் சுதந்திரத்திற்கு முதல்படி. இதனால் வைதீகக்கொடுமையும் புரோகிதக் கொடுமையும் நம் நாட்டிலிருந்து ஒழிந்து போகும் இந்த சீர்திருத்தம் சரியானமுறையில் அனுஷ்டிக்கப்படுமானால் நம் நாட்டில் உள்ள எல்லாவகுப்பினர்களுக்கும் சமத்துவம் உடனே சேருவதுமன்றியில் நமது அரசியலை பாழ்படுத்தும் வகுப்புத்தீயும் ஒழிந்துபோம். ருஷியப் பேரறிஞர் கிக்கோப் என்பவரின் நோக்கத்திற்கிசைந்து சொல்வதானால் "நீங்கள் இதை ஆதரிக்க மனங்கொண்டாலும் சரி இல்லையெனினும் சரி அதற்குரிய காலம் வந்துவிட்டது. ஆகவே நடந்துதான் தீரவேண்டும்" என்று சொல்ல நேருகிறது. வகுப்புத் தீயும் வைதிகக் கொடுமையும் அழிந்துபோகும் காலம் இதுதான். சுயமரியாதையும் சுதந்திரமும் இனிமேல் தடைபடாது ஓங்கிவளரும்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

ருப்பது பிணத்திற் கொப்பாகும். ஆகவே நீங்கள் சுறுசுறுப்பின்றி மரக்கட்டைபோல் இருக்க எண்ணங் கொள்கிறீர்களா? (இல்லை! இல்லை! என்கிற சப்தம்) இல்லையெனில் இந்தப் போராட்டத்தில் ஊக்கம் கொண்டு முன் நின்று பொருதுங்கள். உங்கள் உரிமைக்காகவும் உங்கள் சமூகத்திற்காகவும் கடுமையாய்ப் போராடுங்கள். ஜயலக்ஷ்மி உங்கள் சார்பில் நிற்பாள். எந்த நாளில் இந்தியாவில் ஜாதி வித்தியாசம் கொண்டுவரப்பட்டதோ எந்த நாளில் கற்பனையால் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டதோ எந்தநாளில் இந்த சமுதாயத்தின் ஓர் சமூகத்தாருக்கு கோயிற் பிரவேசம் மறுக்கப்பட்டதோ எந்த நாளில் பார்ப்பனர்கள் உங்களை அடிமைப்படுத்தி பணியச் செய்தனர்களோ அந்நாளிலேயே இந்தியா வீழ்ந்து விட்டது. வீழ்ந்து விட்டது. (ஆரவாரம்) வீழ்த்தப்பட்ட எனது நாட்டுச் சகோதரர்களே! நீங்கள் புத்துயிர் கொண்டெழ மாட்டீர்களா? (எழுவோம் எழுவோம் என்கிற சப்தம்.) இந்த தீர்மானத்தைவிட மேலான உதவி செய்யக் கூடியது வேறு என்னயிருக்கிறது?

சென்ற தேர்தல்களில் நமது தோல்விக்குக் காரணம் மதக் கொடுமையேயன்றி வேறொன்றுமல்ல என்று நீங்கள் நன்றாய்த் தெரியுங்கள் (ஆம்! ஆம்! என்கிற சப்தம்). இத்தகைய மதத் தாழ்மையும் சமுதாயத்தில் ஒரே குறிப்பிட்ட வகுப்பாரின் ஆதிக்கமும் நம்மை அரசியல் துறையில் எழ முடியாத பெரும் படுகுழிக்குள்ளாக்கி விட்டது. உயர்வு தாழ்வு என்கிற எண்ணங்கள் கதிரவனைக் கண்ட பனிபோல் விலகிவிடட்டும்; பார்ப்பனரல்லாத இந்த நம்முடைய இயக்கம் இக்கொடுமை புரோகித மதக் கட்டுப்பாட்டை உடைத்தெறியட்டும். இனிமேற் கொண்டு நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் வீட்டில் நடக்கும் எந்தச்சடங்கிற்கும் பிராமணர்களை அழைக்க மாட்டோமென்ற விரதம் பூண்டு அதன்படி நடக்க வேண்டுமென்ற பெரும் வேண்டுகோளுடன் எனதுரையை முடிக்கிறேன். (அழைக்க மாட்டோம் அழைக்க மாட்டோம் என்கிற சப்தத்தோடு பெருத்த நீண்ட கரகோஷம்.)

விருதுநகர்

விருதுநகரில் சட்ட சபை உறுப்பினர்க்கு உபசரிப்பு 27-12-26ல் மாலை விருதுபட்டி [illegible] பாலிடன் கிளப் அங்கத்தினர்கள் மதுரை ஜில்லாவில் சட்ட சபையில் ஸ்தானம் பெற்ற ஸ்ரீமான்கள் பட்டிவீரன் பட்டி சௌந்தர பாண்டிய நாடாருக்கும், பி. டி. ராஜனுக்கும் சென்னை ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு சிற்றுண்டி விருந்து நடத்தினர்கள். அவ்விருந்துக்கு ஸ்ரீமான்கள் பனகால் ராஜா ஈ. வி. ராமசாமி நாயக்கர் திருநெல்வேலி குமாரசாமி ரெட்டியார், சிதம்பரநாத முதலியார் மதுரை அலாவுதீன் ராவுத்தர், இஞ்சினீர் சின்னு நாயுடு, எஸ். நடேசலிங்கம் பிள்ளை, டி ஆர். சுந்தரம் பிள்ளை, ஈ. சுரேந்திர நாத் ஆரியா, "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் முத்து நாடார் முதலியோர்களும் மற்றும் பல உள்ளூர் வெளியூர் பிரமுகர்களுமாக 300, 400 கனவான்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள். விருந்தாளிகளை பாண்டு வாத்தியங்களுடன் வரவேற்று ஆசனத்திலமரச்செய்து ஆங்கில முறையில் சிற்றுண்டி வழங்கி கூட்டத்தின் அக்கிராசனர் ஸ்ரீமான் இராமசாமி முதலியாருக்கும், ஸ்ரீமான்கள் பி. டி. ராஜன், சௌந்தர பாண்டிய நாடார் அவர்களுக்கும் முனிசிபல் மாஜி வைஸ் சேர்மன் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டு இவர்கள் [illegible] பெரிதும் பண்டிதர் சின்னமணி பாகவதர் [illegible] கேட்போர்க்கு இனிமையானதும் ஆவேசமும், உற்சாகமும் தரக்கூடியதாக மூன்று பாக்களைப் பாடினார். பிறகு விருந்தாளிகள் தக்கபடி உபசாரப்பத்திரத்திற்கும் உபசரிப்புக்கும் பதில் சொன்னபின் மதுரை ஜனாப் அலாவுதீன்

ராவுத்தர் அவர்கள் சுமார் 1-மணி நேரத்துக்கு மேலாக தான் 25 வருஷ காலமாய் பார்ப்பனர்களிடம் பட்ட அவஸ்தையையும் அவர்களால் தனக்குச் செய்யப்பட்ட சூழ்ச்சிகளையும் கேட்போர் ஆச்சரியப்படும்படியும் இனி எந்தக் காரணத்தை முன்னிட்டும் பார்ப்பனர்களை நம்பக் கூடாது என்று ஒவ்வொருவருக்கும் படும்படியாக விரிவாகப் பேசினார், பிறகு ஸ்ரீமான் ஈ. வே. இராமசாமி நாயக்கரைப் பேசும்படி அக்கிராசனர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாயக்கரவர்கள் சட்ட சபையில் ஸ்தானம் பெற்ற தனது நண்பர்கள் சட்ட சபையிலிருந்து காரணம் அரசியல் துறையில் யாதொரு காரியமும் செய்ய முடியாதென்பது தனது பலமான அபிப்பிராயமென்றும் தங்களது வகுப்பு முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் சிறிது உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்றும் அதுவும் அந்தந்த வகுப்பாரும் சட்ட சபையங்கத்தினரும் ஒற்றுமையாயிருந்தால் தான் முடியுமென்றும் விரித்துக் கூறினார். பிறகு பணகால் ராஜா வெழுந்து சில மொழிகள் பேசினதும் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவு பெற்றது.

விருதுநகரில் பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம்

விருதுநகர் க்ஷத்திரிய வித்தியாசாலையில் மாலை 4½ மணிக்கு ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரவர்கள் தலைமையின் கீழ் ஒரு வாலிபர் பொதுக்கூட்டம் கூடி ஸ்ரீமான்கள் நாயக்கரும், ஆரியாவும் பேசிய பின்பு ஒரு பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம் ஏற்பாடு செய்து ஸ்ரீமான் தனுஷ்கோடி நாடார் தலைவராகவும் ஸ்ரீமான்கள் சம்பந்த நாடார் இராமசாமி நாடார் காரியதரிசிகளாகவும் மற்றும் பல கனவான்களை நிர்வாகசபை உறுப்பினராகவும் தெரிந்தெடுத்தபின் கூட்டம் முடிவுற்றது.

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

ஷங்களாக, அந்தந்த சோர்ஸ்களில் உள்ள ரயத்துகளுக்கு தெரிவிக்காமல் திடீர் திடீரென்று டிபுடி பாய்ச்சலாதார் அதிகாரிகளால் மிஸ்டர் கில்மன் துரையவர்கள் தீர்மானத்துக்கு விரோதமாக ஜலத்தைக் குறைத்து விடுவதாலும் தண்ணீரே விடாமல் மடைகளை மூடி விடுவதாலும் ரயத்துகள் பெருவாரியான நஷ்டம் அடைவதோடு மிகுந்த கஷ்டங்களும் கலகங்களும் ஏற்படக் கூடியதாய் இருப்பதாலும், சில்லரை அதிகாரிகள் (Bribery) கொள்ளையடிக்க சாதகம் செய்யக் கூடியதாய் இருப்பதாலும், மேற்கண்ட விதமாக தண்ணீர் குறைப்பதையும், மடைகள் மூடுவதையும், இந்த மகாநாடு பலமாக கண்டிக்கிறது.

b மேலே சொன்ன இரண்டாவது தீர்மானத்தின் தண்ணீர் சப்ளை வசதிகளை, சென்னை சட்ட சபையில் வரப்போகும் நீர்ப்பாசன மசோதாவிலும் சேர்த்துக் கொள்ளும்படிக்கும் அப்படிச் சேர்த்துக் கொண்டே கால்களில் உள்ள ஒவ்வொரு மடைக்கும் பூரா சப்ளை இவ்வளவு என்பதை ரயத்துகளுக்குத் தெரிவித்து அதன்படி தண்ணீர் விட்டு வந்தால், பூட்டிடைப்பு முதலியவைகள் ஏற்படாதென்றும், ரயத்துகள் தெண்டம் கொடுக்கும்படிக்கான விதியை நீர் பாசன மசோதாவில் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்படாதென்றும், விவசாயிகள் கஷ்ட நஷ்டமடையாமலிருப்பார்களென்றும் இம் மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

ரோஜா முத்தையா

[illegible] மிஸ்டர் [illegible] அவர்களால் தீர்மானிக்கப்பட்ட [illegible] தண்ணீர் திறந்து [illegible] மடைகளில், இவ்வளவு தண்ணீர் [illegible] என்பதை அதன் சம்பந்தப்பட்ட [illegible] ரயத்துகளுக்கு ரெஜிஸ்டர் மூலமும், [illegible] கர்ணம் முதலியவர்களின் மூலமும் [illegible] மூலமும் தெரிவிக்கவும், மேற்படி அளவை [illegible] அதிகப்படுத்தவோ அல்லது குறைக்கவோ [illegible] ஏற்படும் காலத்தில், அதை [illegible] நோட்டீஸ் மூலம் தெரிவிக்க [illegible] வேண்டுமென [illegible] அதிகாரிகளுக்கு உத்தரவு செய்யும்படி கவர்ன்மெண்டாரை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

பொது ஸ்தாபனங்களில் [illegible]

ஜில்லா நிர்வாகம், [illegible] நிர்வாகம், ரயில்வே நிர்வாகம் முதலிய [illegible] ஸ்தாபனங்களின் காரியாதிகளில் [illegible] விஷயங்களில் [illegible] பார்ப்பனரல்லாதாருக்கு [illegible] செய்து எல்லா வகுப்பாருக்கும் சம உரிமை வழங்கும் [illegible] சட்டம் [illegible] இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

கிளைச்சங்க ஸ்தாபனம்.

பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கங்களை ஒவ்வொரு ஜில்லா, தாலூக்கா, கிராமங்களிலும் நிறுவி, சமுதாய சீர்திருத்த விஷயங்களில் வாலிபர்கள் தீவிரமாக உழைக்க ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் உதவி புரிய வேண்டுமென்று இந்த மகாநாடு [illegible] வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றது.

சித்த வைத்தியம்.

தமிழ்நாட்டிலுள்ள சித்த வைத்தியர்களும், சித்தவைத்தியக் கல்வி ஸ்தாபனங்களும் ஏற்பாடு செய்வதற்கு வேண்டியவற்றைச் செய்யவேண்டுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

தொழிலாளர் விஷயம்.

இந்தியத் தொழிலாளர்கள் முன்னேற்றத்திற்கும் வசதிக்கும் வேண்டிய சவுகரியம் செய்து கொடுக்க வேண்டியதோடு நாகபட்டணத்திலிருந்து திருச்சிக்கு மாற்றப்படும் தொழிலாளர்களுக்கு, அவர்களுக்கு ஏற்படும் அதிக செலவை உத்தேசித்து சம்பள உயர்வு கொடுக்கவேண்டுமாய் தென் இந்திய ரயில்வே அதிகாரிகளை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

மற்றத்தீர்மானங்கள்.

பிறகு சபைத்தலைவர் அவர்களால் தென் ஆப்பிரிக்கா இந்தியர்களின் விஷயமாயும் உடனே தமிழ்ப்பல்கலைக்கழகமொன்று ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பதை வற்புறுத்தியும் சாசுவத பைசல் மாகாண முழுவதும் நிறைவேற்றுவதற்குத் துரிதமான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுவதை வற்புறுத்தியும் மூன்று தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பிறகு சங்கங்களின் அமைப்பு திட்ட சம்பந்தமாகவும், ஜில்லாதோறும் இரண்டு பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து தலைமை ஸ்தானத்திலுள்ள தாய்ச்சங்கத்தின் நிர்வாகக் கமிட்டியின் அங்கத்தினர்களாக அனுப்பவேண்டுவதைக்குறித்தும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

கதர் விலைக்குறைவு.

30-12-26-ல் மாலை 4-மணிக்கு திருப்பூர் அகில பாரத சர்க்கா சங்கத்தில் கதர் விலை நிர்ணய விஷயமாய் கதர் வியாபாரிகள் கூட்டத்தின் நடவடிக்கை. கூட்டத்திற்கு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார் சுமார் 25 வியாபாரிகள் ஆஜராயிருந்தார்கள்.

தற்காலம் பஞ்சு விலைக் குறைவை உத்தேசித்து அடியிற் கண்டபடி வெள்ளைக்கதர் துணி (காரிக கதர்)க்கு விலை குறைக்கப் பட்டதென்று சர்க்கா சங்க காரியதரிசி ஸ்ரீமான் இராமநாதன் அவர்களால் ஒரு தீர்மானம் கொணர வரப்பட்டது.

இதை ஸ்ரீமான் எம். வி. கருப்பண்ண செட்டியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏக மனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஜரிகை கோட்டிங் தினுசுகளுக்கு கலர், சாதர் எல்லா தினுசுகளுக்கும் முன் இருந்த விலைக்கு கஜம் 1-க்கு அரையணா குறைப்பது என்றும் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

1.	54"	சாதா காரிக கஜம் 1-க்கு	0—10—0
2.	50"	,, ,,	0—9—0
3	45"	,, ,,	0—8—0
4.	40"	,, ,,	0—7—9
5	36"	,, ,,	0—6—3
6	32"	,, ,,	0—5—6
7.	2 "	,, ,,	0—3—9
	ஜரிகை சாதா		
1.	36"	,, ,,	0—9—3
2.	27"	,, ,,	0—7—3
3.	36"	ஜரிகை டிரில் சாதா	0—10—3
4.	27"	,, ,,	0—8—3

சாயம் போட்ட சாதா கதர் துணிகளுக்கு விலை நிர்ணயிப்பதில் பழைய விலை வித்தியாஸத்துடன் விலைகளை குறைத்துப் போட்டுக் கொள்ள வேண்டியது. 36x5x2 சாயத்துணிக்கு ஜதை ரூ. 2—9—6 ஆக விற்க வேண்டியது. மற்றபடி சலவை தினுசுகளுக்கும் அச்சு தினுசுகளுக்கும் இத்துடன் சேர்க்கப்பட்டதும் வியாபாரிகளுக்கு வினியோகிக்கப்பட்டதுமான ஜாபிதாப்படி விற்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த விலைகள் 1927 ௵ ஜனவரி மீ 1-உ முதல் அமுலுக்குக் கொண்டு வரத்தக்கதென்று ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

10-வது பார்ப்பனரல்லார் மகாநாடு.

சர். ஏ. பி. பாத்ரோ பி. ஏ. பி. எல். எம். எல். சி. அவர்கள் தலைமைவகித்தார்கள்.

தலைவர் பேருரையின் சாராம்சம்.

சகோதரப் பிரதிநிதிகளே!

தற்சமயம் நாட்டின் கவனத்தைக் கவர்ந்துள்ளவை நாணயச செலாவணி விஷயமும், வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் விஷயமும், ஏகாதிபத்திய மஹா நாட்டில் இந்தியாவைப்பற்றின விஷயமும், இந்தியாவிலுள்ள பல திறப்பட்ட அபிப்பிராயமுள்ளவர்களையும், வகுப்பார்களையும் ஒன்று சேர்க்கும் விஷயமும், இந்து முஸ்லீம் முதலிய பல சமூகத்தார்களின் சச்சரவுகளை ஒழித்து ஒற்றுமை வளர்க்கும் விஷயமும், இந்திய மக்கள் இராணுவப் பயிற்சி பெறும் விஷயமும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியவைகளாம். இவைகளில் சமூக வளர்ச்சிக்கும், தேசீய வளர்ச்சிக்கும், நமது பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா என்பதும் நமது இயக்கத்தில் ஏதாவது தேசமும் சமூகமும் முன்னேறுவதற்கான திட்டங்களிருக்கிறதா என்பதும் கவனிக்க வேண்டியவை. இதன் உண்மை வெளியானால் நமது எதிரிகள் நம்மை ஏமாற்ற முடியாது. பிராமணரல்லாதாரியக்கம் முன்னேற்ற முடையதோரியக்கமாகும். அதன் கொள்கை குடியேற்ற நாட்டு ஆட்சிமுறையில், இந்தியாவிலும் பொறுப்பாட்சி ஏற்படுத்துவதும் நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு மக்களும் மதம் ஜாதி வகுப்பு எவ்வாறாயினும் ஒவ்வொருவரும் சமத்துவமான உரிமைகளையும் எல்லா விஷயங்களிலும் சமத்துவமான சந்தர்ப்பங்களும் அடையச் வேண்டுமென்பதே நமது இயக்கத்தின் கொள்கையாகும். இவ்வியக்கம் ஆரம்பிக்கும்போது இந்திய தேசீய காங்கிரசின் அரசியல்கொள்கையையேவைத்து ஆரம்பிக்கப்பட்டது. பிறகு, காங்கிரசில் பல மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டதாலும், பொறுப்பற்ற தலைவர்களால் காங்கிரஸ் நடத்தப்பட்டு தப்பு வழிகளில் மக்களை இழுத்துச் செல்வதாயிருந்ததாலும் காங்கிரஸ் கொள்கைகளிலிருந்து மாறுபட வேண்டி ஏற்பட்டதோடு அத்தகைய கொள்கைகளின் பலனாக ஏற்படும் கெடுதிகளுக்கு விரோதமாய் பொதுமக்களைக் காக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. அதை உத்தேசித்தே இந்தியாவில் உண்மையான பொறுப்பாட்சியை ஏற்படுத்தி அகில மக்களுக்கும் சமத்துவமான சந்தர்ப்பமளிக்க வென்றே நமது இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதோடு சுயமரியாதையை உத்தேசித்து மதத்தின் பேராலும், பழக்க வழக்கங்களின் பேராலும், நம்மை அடிமைப்படுத்தும் புரோகிதத்தன்மையை ஒழிக்க வேண்டியும் நமது இயக்கத்தை ஏற்படுத்த வேண்டியதாயிற்று. ஆகவே, உண்மையான பொறுப்பாட்சி பெறவும், சுயமதிப்பைக் காக்கவும், வகுப்பேற்றத் தாழ்வையும் ஜாதி இறுமாப்பையும் ஒழித்து அகில வகுப்புகளுக்கும் சம உரிமையை நிலை நாட்டவும் செய்வதே நமது இயக்கத்தின் தத்துவ மென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வகுப்புச் சுதந்தரம்.

இவ்வியக்கத்தின் மூலமாய் முக்கியமாய்க் கைக்கொள்ளப்பட்ட வகுப்புரிமை என்னும் கொள்கையானது, நம்நாட்டு மக்களால் புதிதாக ஏற்படுத்திக் கொண்டதல்ல. பிரிட்டிஷ் அரசாங்கத்தாராலேயே 1846௵ ஏப்ரல்-௴ 23௳யிலும், 1854௵ மார்ச்சு-௴ 9௳யிலும், 1855௵ மார்ச்சு-௴ 5-௳யிலும், பிறப்புவிக்கப்பட்ட போர்டு ஸ்டேண்டிங் ஆர்டர் என்று சொல்லப்பட்ட அரசாங்க் கிரந்தர விதிகளின் கீழ் கையாளப்பட்டு வந்ததோடு 1911௵த்திலும் 1913௵ செப்டம்பர்௴ 3௳யிலும், மறுப்படியும் அவற்றை புனராலோசனை செய்து உறுதி செய்யப்பட்டதோடு பல்வேறு வகுப்புகளுக்கும் உத்தியோகம் முதலிய பதவிகளும் பிரதிநிதித்துவங்களும் வகுப்புவாரியாய்ப் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்று விளக்கி போர்டின் 128வது கிரந்தர உத்திரவினால் அரசாங்கத்தாரால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது. இதே கொள்கையை விளக்கி அரசப் பிரதிநிதிகளும் பலவிடங்களிற் பேசும்போது தெளிவாக்கியிருக்கிறார்கள். ஆதலால் இவ்விஷயம் புதியதென்றோ நமது முன்னோர்களும் பெரியோர்களும் விரும்பாத விஷயமென்றோ நாட்டின் முன்னேற்றத்திற்கு விரோதமானதென்றோ யாரும் கருதவேண்டியதில்லை. ஆனால் உண்மையிலேயே அனுசரிக்க முடியாததும், கருதாததும் பயனற்றதுமான பல விஷயங்களைப் பாமர மக்களின் முன்பேசி சுலபத்தில் அவர்களை ஏமாறச் செய்துவிடலாம். ஐரோப்பிய சங்கத்தின் தலைவர் இந்தியாவிற்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டுமென்று கோரிய போது, "இந்தியாவைப்போலச் சமூக முன்னேற்றத்தில் பின்னடைந்தும், அரசியல் உணர்ச்சியில் கவலையிருந்தாலும் பெறப் பக்குவப்படாமலும் இருக்கும் நாட்டுக்கு, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்தான் பல்வேறு வகுப்புகளின் குறைகளையும் நிவர்த்திசெய்துகொள்ளத் தக்கதோர் முறையாகும். ஆதலால் சட்ட நிர்மாணம் செய்யப்போகிறவர்கள் எவரும் தற்காலிகமாகவாயினும் அதாவது வகுப்புக்குறைகள் நீங்கும்வரையிலாயினும் ஒப்புக்கொண்டாகவேண்டும்." எனப் பேசியிருக்கிறார். ஆதலால், நமது இயக்கத்தின் வேண்டுகோளானது எத்தகைய குறிப்பிட்ட வகுப்புக்காவது அளவுக்குமீறிய ஆதிக்கமேற்படாமல், ஒவ்வொரு வகுப்பிற்கும் சம உரிமை இருக்கவேண்டுமென்பதுதான். ஏனெனில் ஒரு வகுப்பார் அளவுக்கு மீறிய பிரதிநிதித்துவத்தையும் ஆதிக்கத்தையும் அடைந்துவிடுவதால் மற்றொரு வகுப்பின் முன்னேற்றத்திற்குக் கெடுதி ஏற்பட்டுவிடுகிறது. மற்ற மாகாணங்களின் நிலை எப்படியிருந்தபோதிலும், சிறு பான்மையான ஒரு வகுப்பாரே சர்வ அதிகாரங்களையும் கைப்பற்றி அடியிலிருந்து நுனி வரையில் உத்தியோகமடைந்து செல்வாக்குப்பெற்று தங்களது ஆதிக்கத்தை பலப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். மற்ற வகுப்பாரும் தங்களுக்கு சம உரிமை வேண்டுமென்று கேட்பது வகுப்புப் பொறாமை என்பதாகக் கருதக்கூடாது. ஏனெனில் பலவீனமடைந்தும், ஆதரவற்றும் கிடப்பதுமான பெரும்பான்மையான வகுப்பு மக்கள் தங்கள் தகுதிக்கேற்ற நேர்மையான பாகத்தைப் பெறவேண்டுமென்கிற கிரமமான முயற்சியேயாகும். இவ்வியக்கம நாட்டின் பெரும்பான்மையான மக்களின் சேர்க்கையைப் பெற்றிருக்கிறது. நமது இயக்கத்தில் மற்றெல்லா இயக்கங்களையும் விட பெரும்பான்மையான மக்கள் அதாவது நமது நாட்டு வர்த்தகர்களும், குடியானவர்களும் மிராஸ்தாரர்களும், தொழிலாளர்களுமான எல்லா கூட்டத்தினரும் பெருவாரியாயிருக்கிறார்கள்.

இவ்வியக்கத்தைப்பற்றி சுயேச்சை வாதியான ஒரு பார்ப்பனரே சொல்வதென்னவென்றால் "இவ்வியக்கம் [பார்ப்பனரல்லாதாரியக்கம்] நாளடைவில் மிக்க உறுதியான முன்னேற்றத்தையும் சமூக வாழ்வில் ஒப்பற்ற அபிவிருத்தியையும் உண்டாக்குவதற்கேற்றதாயிருப்பதால் நான் இதனை முழுமனதோடு வரவேற்கிறேன். இந்தியாவின் மக்களுக்கு சமுதாய சீர் திருத்தத்தில் அவர்களுடைய கடமையை அறியச்செய்யவேண்டுவதானால் மிஸ்டர் ஹியூம் என்னும் ஐரோப்பியர் கூறியிருப்பதுபோல் இந்திய மக்களின் சுயமரியாதையைக் குறித்த உணர்ச்சியைக் கிளப்பிவிடவேண்டும். இந்திய மக்களை தூக்கத்தினின்றும் தட்டி எழுப்பியவர்களுள் ஒருவரான காலஞ்சென்ற டாக்டர் நாயர் அவர்களை அந்தரங்க சுத்தியோடு பாராட்டுவதற்கு நான் இதனை தக்க சந்தர்ப்பமாகக்கொள்ளுகிறேன். அவர் இதுவரையில் ராஜீயத் துறையிலும் சமுதாயத் துறையிலும் மிகக் குறைந்தபாகமளிக்கப்பட்ட பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதையை விரைவில் கிளப்பிவிடத்தக்க கருத்துடனேயே இப்பார்ப்பனரல்லாதாரியக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்" என்பதேயாம். நமது இயக்கத்தின் நியாயமான தன்மையை அநேகர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் ஆனால் ஒரு சில பத்திரிகைகள் ஜஸ்டிஸ் கட்சி சீர்திருத்தத்தை நடத்திவைப்பதில் சர்க்காரோடு சேர்ந்து வேலை செய்திருக்கிறது என்று குற்றஞ்சாட்டுகின்றன. ஆனால் நமது இயக்கம் நிர்மாண முறையையும் கைக்கொண்டு நாட்டில் கல்வியைப் பரவச்செய்திருக்கிறது. மக்களுள் கைதூக்கிவிடப்படவேண்டியவர்கள் ஆகிய தாழ்த்தப்பட்ட வகுப்பாரை முன்னேற்றம் செய்வதும் கல்வியைப் பரவச்செய்வதும் விவசாயம், சுகாதாரம், பொருளாதாரம் முதலியவைகளில் முன்னேற்றமடைவதும் கைத்தொழிற் கல்வியைப் பரவச்செய்தல் பலவகுப்பாருக்கும் நெருங்கிய நேசம் ஏற்படுத்துதல் ஆகியவைகளோடு ஒரு வகுப்பும் மற்றொருவகுப்பும் ஒன்றுபட முடியாதபடியுள்ள தடைகளை உடைத்தெறிந்து மக்கள் ஒருவருக்கொருவர் சமத்துவமுடையவர் என்கிற எண்ணத்தோடு சகோதரத் தன்மையை அடையச்செய்வதான வேலைகள்தான் சுயராஜ்யம் பெறும் சுபதினத்தைக்காண முயற்சிக்கும் வேலைகளாகும்.

கிராம நிர்மாணம்.

இவைகளை நிறைவேற்றிவைப்பதற்கு கிராமத்திற் செய்யவேண்டிய வேலைகளே முக்கியமானவையாம். இவ்விஷயங்களைப்பற்றி நமது கட்சியார் உழைத்துவந்திருக்கிற அளவுக்கு சுயராஜ்யக் கட்சியார் ஒரு சிறிதாவது உழைத்திருப்பதாகச் சொல்லமுடியுமா? வங்காளத்தில் கிராமப் புனருத்தாரணத்திற்கென்று 1925 வருஷம் மார்ச்சு மாதம் கடைசிவரை 2,32,000 ரூ. பொது ஜனங்களிடமிருந்து வசூல்செய்து "பார்வார்டு" பத்திரிகையின் அச்சியந்திரசாலைக்கு உபயோகப்படுத்திக்கொள்ளவும் சுயராஜ்யக் கட்சியாருக்கேற்பட்டிருந்த கடன்களைத் தீர்த்துக்கொள்ளவுமே செலவழித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வித முறைகளை அக்கட்சிப் பத்திரிகைகள் கண்டிக்காமலுமிருக்கின்றன. ஆனால், அக்கட்சியாரின் வேலையெல்லாம் தங்களுக்கென சில ஸ்தானங்களைப் பெறவும்தங்களிற்சிலரைத் தலைவர்களாக்கவும்செய்ததும்தானேயன்றிவேறுநிர்மாணவேலைகளைச் செய்தனரல்லர்.

காங்கிரசின் பயனற்ற செயல்கள்.

காங்கிரஸ் கட்சியின் வேலைகள் பொது ஜனங்க

ளின் தின வாழ்க்கையுடன் ஒரு சிறிதும் சம்பந்தம் கிடையாது. அக்கட்சித் தலைவர்களின் கோரிக்கைகளும் பெரும்பாலும் சுயநலத்தால் சூழப்பட்டதா யிருக்கின்றன. காங்கிரஸ் கட்சியால் நகரப் பிரதேசத்தில் கைக் கொள்ளப்பட்டுள்ள வேலைகளின் பயனாய் எதாவது முன்னேற்ற மேற்படுவதாயிருந்தால் அதுவும் ஒரு சிறு வகுப்பினருக்குத் தான் சாதகமானதாக விருக்கக் கூடும். மேலும் காங்கிரஸும் தீய வழிகளிலிறங்கிவிட்டது. சுயராஜ்யம் பெற … வார்த்தைகளால் மக்கள் பிரமையடையச் செய்து தடுமாறச் செய்யப்பட்டனர். மேலும் … லைகளை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதே … கத்தின்தோல்விக்கு மற்றோர் உதாரணம். "… யக் கலாசாலைகள்" மறைந் தொழிந்ததும் தீண்டாமை விலக்கு சம்பந்தமான … கட்டிவைக்கப்பட்டிருப்பதும் அத்தலைவர்களுடையவும் அவர்களைப் பின் பற்றுபவர்களுடையவும் போலித்தேசாபிமானத்தின் அறிகுறிகளாக விருக்கின்றன. தைரியமும் … உடையவர்களும் பொறுப்புக்கு அஞ்சாதவர்களும் … களாயிருக்கத் தகுதியானவர்களும் கிடைப்பது அருமையாகத் தானிருக்கிறது. முட்டுக்கட்டை போடுவதான தடை முறைகளை … மணல் வெளியைப் பயிரிடுவதற்கு உழுவதற்கொப்பாக விருக்கிறது. போலி அஸ்திவாரத்தையுடைய இத்தகைய கொள்கை தேசமக்களின் கோரிக்கையின் பலத்தை எவ்வாறு தாங்கக் கூடும். உறுதியான ஒழுக்க நிலையற்றவர்களும் பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழனைப் போலிருப்பவர்களும், சுயமதிப்பையும், உண்மையையும் சிறிதளவும் கவனியாது எளிதில் பெயர் வாங்க வேண்டுமென்னும் பேராசை பிடித்தாட்டப் படுபவர்களுமானவர்கள் எங்கும் மலிந்திருக்கும்போது பொது வாழ்க்கையில் தூய்மை எங்கிருந்து வரப் போகிறது? பொது நம்பிக்கைக்காகச் சூழ்ச்சிகள் செய்து குட்டிக்கரணம் போடுவதைவிட, உண்மையாக வெற்றியையும் தோல்வியையும் ஒப்புக்கொண்டுவிடுவது பின்னும் கௌரவமும் பெருமையுமானதாகும். திவான் பகதூர் டி. ரங்காச்சாரியார் தாம் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காருடன் தேர்தலில் போட்டியாக நிற்காமல் தம்மைத் தூண்டிய ஒரு முக்கிய காரணம் ஸ்ரீமான் ஐயங்காரின் தேசியப் போக்கிலும், நிதானத்திலும் தமக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டிருந்ததுடன், அவர் தேசீய வாதிகளனைவரையும் ஒன்று சேர்ப்பதில் திறமையுடையவரென்னும் நம்பிக்கை தமக்கு இருந்ததினால்தான் அவரே இந்தியா சட்டசபைக்குத் தேர்ந்தெடுத் தனுப்பப்பட வேண்டுமெனத் தோன்றியதாயும் கூறியிருக்கின்றார். இவருக்கு இத்தகைய ஞானம் உதித்தது சிலவிடங்களில் மிகத் தாராளமாகப் பேசிக் கொள்ளப்படுவதுபோல தம்மை இந்திய சட்ட சபையின் அங்கத்தினருள் ஒருவராக நியமனம் செய்யப்படுவதைக் குறித்து கல்கத்தாவில் அரசப் பிரதிநிதியைப் பேட்டி கண்டு பேசி நிச்சயப்படுத்திக் கொண்ட பின்னரா? திரு ரங்காச்சாரிக்குஞ்சென்னையிலுள்ள சுயராஜ்யக் கட்சியின் தலைவருக்கும் முன்னமே ஏதாவது ஒப்பந்தமுண்டோ? பட்சபாதமற்ற நகரவாசிகள் இவருடைய கூற்றிலிருந்தே உண்மையை உணர்ந்துகொள்ளக்கூடும்.

பிறகு தங்களது ஆட்சியில் ஆரம்பக்கல்வி அபிவிருத்தி, பஞ்சாயத்து இவைகளைப்பற்றிப் பேசுகையில் 26 முனிசிபாலிட்டிகளில் இலவசக் கட்டாயக் கல்வி ஏற்பாடு செய்திருப்பதாகவும் தங்களுக்குக் கிடைத்த சொற்ப அதிகாரத்தையும் சொற்ப பணத்தையுங்கொண்டு இதுவரையில் யாரும் செய்யாததும் சுலபத்தில் செய்ய முடியாததுமான பல காரியங்கள் செய்திருப்பதை எடுத்துக்காட்டியும் ஆந்திர சர்வகலாசாலை ஏற்படுத்தியிருப்பதைப்பற்றியும் தமிழ்ச் சர்வ கலாசாலைக்கு கமிட்டி நியமிக்கப்பட்டிருப்பதைப்பற்றியும் இந்து மத பரிபாலன மசோதா ஏற்படுத்தினதைப்பற்றியும், கைத்தொழில்களுக்கு அரசாங்கத்தார் உதவி செய்ய சட்ட மியற்றப்பட்டதைப்பற்றியும் விரிவாக குறிப்பிட்டுவிட்டு சுயராஜ்யக் கட்சி என்கிற பெயர் தாங்கி நமது எதிரிகள் நம்மவரிலேயே சிலரை ஏமாற்றி வசப்படுத்திக்கொண்டு நமது முன்னேற்றத்திற்கு விரோதமாக தேர்தல்களில் வெற்றிபெற்று நமது நோக்கங்கள் ஈடேறாமல் செய்வதற்கு அவர்கள் முயற்சி செய்ததையும் சென்னையைத் தவிர மற்ற மாகாணங்களில் சுயராஜ்யக் கட்சியார் தோல்வியுற்றிருப்பதையும் குறிப்பிட்டதோடு நமது கடமைகள் என்னும் தலைப்பின்கீழ் கிராம பிரசாரம் செய்து கிராமங்களிலுள்ளவர்களின் குறைகளை நீக்கி அவர்கள் உண்மையைத் தெரிய பத்திரிகை முதலியவைகளைப் பரவச்செய்யவேண்டும் என்றும் இவைகளுக்குப் போதிய நிதி திரட்டவேண்டும் என்றும் மாகாண சுயஆட்சி அளிக்கப்படவேண்டும் என்றும் அதற்குத் தீவிரமாக வேலை செய்யவேண்டுமென்றும் பேசி முடித்தார்.

10வது பார்ப்பனரல்லாதார் மஹாநாட்டில்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

அநுதாபம்.

1. நிகரற்ற தேசாபிமானியும் தீண்டப்படாதாரின் பெரும் உதவியாளரும் வடநாட்டு … சந்நியாசியுமான சுவாமி சிரத்தானந்தா மிருகத்தனமாய் கொலையுண்டிறந்ததைப்பற்றி இந்த மகாநாடு தனது அனுதாபத்தை தெரிவிக்கிறது.

கதர்.

2 நாட்டின் ஜீவாதாரமான கைத்தொழிலை விருத்தி செய்யவும், நிரந்தரமான வறுமையைப் போக்கவும் ஏழை மக்களைக் காப்பாற்றவும் ராட்டினத்தால் நூல் நூற்று கைத்தறியினால் நெய்யப்பட்ட கதர் வஸ்திரத்தை ஒவ்வொருவரும் அணிவதே முக்கியமான மார்க்கமானதால் எல்லோரும் கதரையே உடுத்தவேண்டுமென்று இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

தீண்டாமை.

3(அ) மக்கள் பிறவியில் உயர்வு, தாழ்வு இல்லை என்றும், சமூகவாழ்வில் எல்லோரையும் சமமாய் பாவிக்கவேண்டுமென்றும் இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

b தீண்டாமை என்னும் கொடிய வழக்கமானது மனிதருக்கு மனிதரைப்பிரித்துவைக்கவும் நிரந்தரமாய் ஒற்றுமையில்லாமல் செய்யவும் மனிதனின் பிறப்புரிமையான சுயமரியாதையைக் கெடுப்பதுமாய் இருப்பதால் இதை அடியுடன் ஒழிக்கவேண்டுமென்று இந்த மகாநாடு வற்புறுத்துகிறது.

சடங்கு.

4 பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்போர்கள் தங்களது மதசம்பந்தமான சுபாசுப சடங்குகளுக்கு தங்களைவிட பிறவியில் உயர்ந்த வகுப்பார் என்கிற எண்ணத்தின்பேரில் வேறு வகுப்பாரைக்கொண்டு செய்துகொள்ளுவதில் நாமே நம்மைத் தாழ்ந்த வகுப்பார் என்று ஒப்புக்கொள்வதாயிருப்பதாலும், இவ்வித மனப்பான்மையே நமது சுயமரியாதையை அழிப்பதற்கு ஆதாரமாயிருப்பதாலும், இனி இவ்வழக்கத்தை அடியோடு ஒழிக்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

கோவில் பிரவேசம்.

5(a) இந்துக்கோவில்களில் இந்துக்கள் என்று சொல்லப்படும் எல்லா வகுப்பாருக்கும் பிரவேசத்திலும் பூஜையிலும் தொழுகையிலும் சம உரிமை உண்டென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

b சென்னை சட்ட சபையில் இரண்டு தடவை நிறைவேறிய இந்து மத தர்ம பரிபாலன மசோதாவை இந்த மகாநாடு முழு மனதுடன் ஆதரித்து வரவேற்கிறதோடு, வைசிராய் பிரபு இம்மசோதாவிற்கு சட்டப்படிக்குண்டான சம்மதம் கொடுக்க வேண்டியது அவசியமென்று வைசிராய் பிரபுவுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறது.

மது விலக்கு.

6 நாட்டின் ஒழுக்கத்திற்குக் கேடானதும் வறுமைக்கும் குற்றங்களுக்கும் காரணமானதுமான மதுபானத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பருத்தி எல்லைச் சட்டம்.

7 கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம், சேலம், ஆகியஜில்லாக்களை ஒன்று சேர்த்து முன்வழக்கம்போல் பருத்தி வியாபாரம் போக்குவரத்துக்கு அனுமதி கொடுக்க வேணுமாய் கவர்ன்மெண்டாரை கேட்டுக் கொள்வதாய் இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரசாரம்.

8 நமது சங்கத்தை பலப்படுத்தவும் அதின் நோக்கங்களையும் இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் அமுலில் கொண்டுவரத் தக்க பிரசாரம் செய்யவும், ஆங்காங்கு ஜில்லா தாலூகா கிராமம் முதலிய இடங்களில் தக்கபடி கிளை ஸ்தாபனங்கள் ஸ்தாபனம் செய்ய வேலை செய்ய வேண்டியது. அதற்குதக்க பண்டுகள் வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறது.

வங்காள அவசரச் சட்டம்.

(a) வங்காள (மாகாண) ஆள் தூக்கிச் சட்டம் அரசாங்கத்தார் இந்தியர்களிடம் கொண்டிருக்கும் அவநம்பிக்கையை வெளியிடுவதோடு நமக்கு மானக்கேட்டையும் உண்டுபண்ணுவதால் அரசாங்கத்தார் அச்சட்டப்படி அடைபட்டிருக்கும் வங்காளிகளை உடனே விடுதலை செய்து அச்சட்டத்தையும் ரத்து செய்யும்படியும் அல்லது அவர்களை விசாரிக்கும்படியாகவும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

மேட்டூர்த் தேக்கம்.

10 சேலம் ஜில்லாவுக்குள் கட்டப்படும் மேட்டூர் பிராஜக்டின் வாய்க்கால் ஜலம் சேலம் ஜில்லாவிற்குள்ளும் பாசனம் ஆகும்படியாக ஏற்பாடு செய்துக் கொடுக்க வேணுமாய் இந்த மஹாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

பெரியாற்றுப் பாசன வசதி.

11(a) மதுரை ஜில்லா பெரியாறு பாசன வாய்க்கால்களில்வரும் ஜலத்தை சென்றசிலவரு

(இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.)

கொங்குவேளாளர்களுக்கு ஒரு வார்த்தை.

(கைவல்யசாமியார் எழுதுவது.)

கோயமுத்தூர் ஜில்லா பூராவும், சேலம் ஜில்லாவின் ஒரு பாகமும் மதுரை ஜில்லாவில் ஒரு பகுதியும் கொண்டது உங்கள் இருபத்திநான்கு நாடு. இந்த நாட்டிலுள்ள கிராமங்களில் அநேகமாக எல்லாப் பெரிய தனக்காரர்களும் பெரிய குடிகளும் நீங்களே ஆவீர்கள். உங்களுக்குள்ள பிரிவில் இடத்தின் வித்தியாசத்தால் பேர் மட்டும் வித்திசாசமே ஒழிய, குலம், கோத்திரம், குலதெய்வம், நடைஉடை பாவனை, வழக்கம், உண்பது, தின்பது, பெரியதனக்காரர், பட்டக்காரர் எல்லாமொன்றே. பண்டைக்காலத்து உங்கள் விருதின் செம்புப்பட்டையங்களைப் பார்த்தால் உங்கள் நாட்டிலுள்ள எல்லா ஜாதிக் குடிகளும் உங்களாலேயே ஆதரிக்கப்பட்டு வந்ததாகத் தெரியும். சேரனுடைய இளைய மகன் கொங்கன் என்பவனால் இந்த நாடு ஆளப்பட்டு வந்ததால் உங்களுக்கும் கொங்கர் என்னும் பெயர் வந்ததாகச் சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள். அவை எப்படியோ இருக்கட்டும். நீங்கள் பழைய காலத்துத் தமிழ்க் குடிகள் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. நீங்கள் பேசும் தமிழில்தான் பழைய தமிழ் வார்த்தைகளைப் பார்க்கலாம். பழைய தமிழர்களின் வீரம் நூல்களில் படித்ததைப் போல் பார்க்காவிட்டாலும் கொஞ்சமாவது அவ்வீரம் உங்கள் முகத்தில் தான் தென்படுகிறது. உங்கள் பட்டக்காரர்கள் உங்களை மறந்தும், நீங்கள் அவர்களை மறந்தும், இப்பொழுது இருந்தாலும், அவர்களுடைய முன்னோர்கள் இருந்திராவிட்டால் இவ்விடம் வேளாளக் குடிகளான நீங்கள் இவ்வளவு சிறப்போடு இருக்க முடிந்திருக்காது. அநேக கஷ்டப்பட்டு, இரத்தம் சிந்தி, இந்த நாட்டில் உங்களைச் சிறப்புப் படுத்தினார்கள். அதற்காக அவர்கட்கு எவ்வளவு மரியாதை செய்தாலும் தகும். இப்பொழுதும் அந்த வீரம் அவர்கள் முகத்தில் பார்க்கலாம். பழைய கோட்டைப் பட்டக்காருடைய முன்னோர்கள் தமிழை ஆதரித்தும், அநேக வித்வான்களுக்கு பரிசு கொடுத்தும் ஏராளமான பொருளைத் தருமஞ் செய்த நிமித்தமே "சர்க்கரை" யென்கிற பட்டத்தைப் பெற்றார்கள். சேதுபதிராஜாகூட சர்க்கரை என்பதைப் பாராட்டி ஒரு கவி அனுப்பினார் என்று சொல்லப்படுகிறது. பவானியிலிருந்து ஈரோட்டு வழியாக கொடுமுடிவரையிலும் பாயும் வாய்க்காலின் பெருமையையும் சர்வேயையும் இஞ்சினீர் வேலைகளையும் கண்டு உங்கள் முன்னோர்களின் புத்திவன்மையை யார்புகழாதார்? அதுஎல்லா இடமும் வளைந்து வளைந்து போய் தண்ணீர் பாய்வதாலல்லவா அதற்கு பாம்பு அணை வாய்க்கால் என்றும் சொல்லுகிறார்கள். வெள்ளோடு சாத்தந்த குலத்தவரான ஊற்றுக்குழி ஜெமீன்தார் காளிங்கராயருடைய முன்னோர்கள் இதை வெட்டி ஈரோட்டுக் குடிகளுக்கே தானமாகக் கொடுத்துவிட்டார்கள். தானம் கொடுத்ததை திரும்ப அனுபவிக்கக் கூடாது என்னும் நியாயத்தால் அவர்கள் ஈரோடு வந்தால் அந்த வாய்க்காலின் தண்ணீரைக் குடிப்பதே இல்லை. இதனால் உங்களுடைய முன்னோர்களின் பெருங்குணத்திற்கு எல்லை உண்டா? இன்னும் அனேக காரியங்களைச் செய்து பெருமை யடைந்த குடும்பங்களைப்பற்றி எழுத இடமில்லை. எவ்வளவு சொன்னாலும் வேளாளன் பெருமைக்கு அளவுண்டா? உழவுகோலின் நுனியில் நிற்பது செங்கோல். "முட்டி புகும், பாப்பார் அகத்தை எட்டிப் பாரோமே என் நாளும், காப்பாரே வேளாளர் காண்" என்னும் பாட்டை ஆயிரம் வருடத்திற்கு முன்னணிகலமாய் வாங்கின காணியாளர்களே! நான் உங்களுக்குச் சொல்ல வந்ததும் கேட்டுக் கொள்ளுவதும் என்னவென்றால், ஆதிதிராவிடர்களான "பறையர்களின்" பேரில் கருணையும் தரும சிந்தையும் வைத்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே இதைக் கவனிப்பது சத்தியமும் நியாயமுமாயிருக்கிறது. அவர்கள் உங்களுக்கு இராப்பகலாய் ஊழியஞ் செய்கிறார்கள். உங்களுக்கு எந்த வேலைக்கும் "சுவாமி" என்று முன்னிற்கிறார்கள். உங்களுக்கு சத்துரு வந்தால் அவர்கள் பேரில் பாயவும் அவர்களே முன் நிற்பவர்கள். உங்கள் வண்டியின் முன்னும் பின்னும் எத்தனை மைல்களானாலும் ஓடவும் அவர்களால் தான் முடியும். உங்கள் அவசர காரியங்களுக்கு ஆள் அனுப்ப நாலு காதமானாலும் போய் வருகிறவர்களும் அவர்களே. உங்கள் கோபத்தினால் கிடைக்கும் கொரடா அடியைச் சகிக்கவும் அவர்களால்தான் முடியும். அவர்கள் எல்லா நல்லது கெட்டதுகளுக்கும் வேண்டும். அவர்கள் இல்லா விட்டால் கவுண்டத்தனம் நடத்துவதும் கஷ்டமே. அவர்கள் ஏன் இவ்வளவு தாழ்த்தப்பட்டார்கள் தாழ்த்தினோம் என்பதற்கு அநேக காரணங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. அவர்களைப் பற்றி நாம் கவனிக்காமலிருப்பதினால் வந்த பாவமோ நஷ்டமோ அநந்தம். எவ்வளவு தாழ்த்த வேண்டுமோ அவ்வளவும் தாழ்த்தியாகிவிட்டது. குடிக்கத் தண்ணீர்க் கொடுக்க மறுத்து விட்டோம். கவலை இறைக்கும் கிணற்று வாய்க்கால் பக்கம் ஒரு குடத்துத் தண்ணீருக்கு, உதை பட்டு ஓடுவதையும் பார்க்கிறோம். அவர்களுடைய வயிற்றையும் தேகத்தையும் நனைக்கவும் திண்டாடுவதற்குக்காரணம் நாம் நினைக்காத குற்றமே. நம் கிணறுகளும், பூமிகளும் ஈரமற்று கிடக்கின்றன என்பது சத்தியத்திலும் சத்தியம். அவர்களை அடிமைகொண்டு வேலை வாங்கும் பாத்தியதையை வேலைக்கு வரும் போதோ திரும்பிப் போகும் போதோ அவன் வயிற்றுக்குச் சோறு உண்டா என்று கவனியாதவர்களையும் பார்க்கிறோம். போகத்திற்கு ஒரு தரம் தவசம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னாலும் முன்போல் விளைவதுமில்லை கொடுப்பதும் குறைந்துவிட்டது. செத்த மாட்டுக் கறிகூட சில இடத்தில் "சக்கிலியன்" மூலமாக இவனிடம் போய்ச் சேர வேண்டும். இவனிடம்போய்ச்சேர்ந்த மாட்டின் தோல் சந்தையில் விற்ற பணம் அப்படியே வந்து சேர வேண்டும். கால் அரை திருடினால் உண்டு. வேலையாக பட்டணக் கரைக்கு அனுப்பப்படுகிறவனுக்கு வேண்டியது கொடுப்பதில் மனம் சுருங்குகிறது. வக்கீல்களோ சாக்ஷி சொல்லுகிறவர்களோ நூறோ ஐம்பதோ அதிகம் அனுவசியமாகக் கேட்டாலும் கொடுக்க மனம் கூசுவதில்லை.

இனி பொது ஸ்தாபனங்களைப் பற்றி கவனிப்போம் பிரஸிடெண்டு மெம்பர்களை கவனிக்கிறார். மெம்பர்கள்பெரியமிராஸ்தார்களை கவனிக்கிறார்கள். மிராஸ்தார்கள் போர்டினால் ஏதாவது தங்களுக்கு காரியமிருந்தால் அதை நிறைவேற்றிக் கொள்ளத் தவறாமல் பிரயத்தனப் படுகிறார்கள். நியாயமில்லாத காரியமா யிருந்தாலும் ஒருவர்க் கொருவர் அதை நியாயமாக மெய்ப்பித்துக்காண்பிக்க ஒரே மாதிரியாக உதவி செய்து கொள்ளுகிறார்கள். சுற்றி இருப்பவர்கட்கும் வேண்டியவர்கட்கும் போர்டில் எந்த வேலையுமாகிறது. "பறையர்" "சக்கிலியர்கட்கு"கிணறும் பள்ளிக்கூடமும் வேண்டுமென்று பட்ஜெட்டிலிருக்கிறது. ரிப்போர்ட்டுக் காகிதமிருக்கிறது. அது சரியாய் நடந்திருக்கிறதா? காலாகாலத்திற்கு உபயோகப்பட்டதா? என்று போர்டில் கேள்விகேட்பதை மறந்தே போய்விட்டார்கள். பறையரைச் சேர்ந்த மெம்பர்கள் போர்டில் இருக்க நாமிநேஷன் எடுப்பதுமில்லை. இந்த தடவை கோயமுத்தூர் ஜில்லா பொர்டுத் தலைவர் தாழ்ந்த ஜாதிக்காரருக்கு நாமிநேஷன் கொடுப்பார் என்று நம்புகிறோம். இந்த போர்டெல்லாம் உங்களுடையதல்லவா? போர்டால் அவர்களுக்கு எவ்வளவு நன்மை செய்யமுடியுமோ அவ்வளவையும் அவர்களுக்குச் செய்யுங்கள். உங்களுக்குமுன் இந்த நாட்டில் காணியாக இருந்தவர்களின் கொடுமையால் உங்களிடம் அடிமை புகுந்தார்கள். நீங்களும் அவர்களை கவனிக்காமலிருப்பதால் பூனச்சி, வயநாடு, நீலகிரி மலைகளுக்குப் போய் சாகிறார்கள். மிஞ்சினவர்கள் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். இப்பொழுதே அவர்கள் கிறிஸ்தவர்களானதில் தொந்திரவு சில கிராமங்களிலேற்பட்டிருக்கிறது. நீங்கள் சரியாய் அன்போடு அவர்கள் கஷ்டத்தை கவனியாமல் போனால் இனியும் கொஞ்ச நாளையில் அநேகமாக கிறிஸ்தவர்களாகி விடுவார்கள். உங்கள் பின் சந்ததிகளுக்கு சத்துருவுமாவார்கள். உங்கள் சத்துருக்களையெல்லாம் உங்கள் முன்னோர்களுடன் சேர்ந்து ஜெயித்து உங்களை கொங்கு நாட்டில் நிலைநிறுத்தினவர்கள் பறையர்கள் என்று சொன்னால் ஆச்சரியப் படுவீர்கள். இவை உண்மை என்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். பறையர் கூட்டத்தில் வீரம் வாய்ந்த கன்னப் பறையனென்று ஒரு கூட்டமிருக்கிறது. அவர்கள் பழையகோட்டைப் பட்டக்காரர்களுடைய முன்னோர்களுடன் சேர்ந்து தான் உங்கள் நாட்டை நிலை நிறுத்தினார்கள். கன்னப்பறையனின் தலைவனுக்கு பழையகோட்டை கிராமத்தில் அவன் பேரால் ஒரு கோவில் கட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் பட்டக்காரர்களை கும்பிட மாட்டார்கள். உங்கள் பட்டக்காரர்களால் அப்பொழுது அவர்களுக்குச் சமத்துவம்

ரோஜா முத்தையா

கௌரி ஆயுர்வேத சித்த வைத்ய மந்திரம்.

கௌரி பாலாம்ருத ஸஞ்சீவி குழந்தைகளுக்குச் சாதாரணமாய் உண்டாகும் பலவித நோய்களைக் கண்டிக்கத்தக்க ஔஷதங்கள் ஆறு அடங்கிய அழகிய பெட்டி.

சாதாரணமாகக் குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களைக் கண்டிக்கக்கூடிய பின்வரும் ஆறுவிதமான மருந்துகள் பிரத்தியேகமான சீசாக்களிற்போட்டு ஒரு பெட்டியில் வைக்கப்பட்டிருக்கின்றன. 1. குழந்தைகளின் ஜலிப்பு, சளிக்கட்டு இருமல் இவைகளுக்கு உபயோகிக்கும் கௌரி கோரோஜனை. 2. ஜுரம் இசிவு ஜன்னிகள் வந்த காலத்தில் கொடுக்கும் கௌரி கஸ்தூரி 3. ஸ்நானம் செய்வித்த பின் குழந்தைகளுக்கு உரைத்துப்போடும் உரைமாத்திரையாகிய கௌரி பால கற்பம் 4. குழந்தைகளின் வயிற்றில் கிருமிகள் கட்டுகள் சேராமல் பேதியாவதற்காகக் கொடுக்கும் கௌரி பால விரோசனி 5. குழந்தைகளுக்குண்டாகும் வயிற்றுப்போக்கை நிறுத்தவல்ல கௌரி குணைக்தம் 6. குழந்தைகளுக்கு மாந்தங்கள் வந்தால் கொடுக்கும் கௌரிபாலபோஷணி. இந்த ஆறு அரிய மாத்திரைகள் இப்பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. உபயோகிக்கும் வழிகளைப் பெட்டிக்குள்ளிருக்கும் பிரயோக விதியில் காண்க. பெட்டி ரூ. 3.

இப்பெட்டி ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது அவசியம். இருந்தால்குழந்தைகளைவியாதிகள் தொடரா வண்ணம் காப்பாற்றும். வைத்தியர்களைத் தேடவேண்டிய அவசியமில்லை. குழந்தைகட்கு வியாதிவந்தால் தக்க சிகிச்சை இல்லாமல் சிசு மரணம் அதிகம் ஆகின்றன. இதன்பொருட்டே மூன்று வருடங்களுக்குமுன் சென்னையில் வெளிவரும் நவசக்தி பேப்பரில் குழந்தைகள் வைத்தியம் அதாவது குழந்தைகளை வியாதி தொடாத வழிகளை வாரம் வாரம் எழுதி வந்திருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் குடும்ப வைத்யம் அதாவது வைத்யர்கள் தயவின்றி தாங்களே வைத்யம் செய்துகொள்ளும் புத்தகம் வெளிவரும். அதில் வியாதி வராமல் இருக்கும் மார்க்கங்கள், நோய் வந்துவிட்டால் அதனை நிவர்த்திக்கும் சுலபமான முறைகள் இன்னும் பல விஷயங்கள் அடங்கியிருக்கும் இது பொது ஜன நன்மையைக்கோரி அநேகர் வேண்டுகோளின்மேல் எழுதி முடிக்கப் பெற்றது. பல வைத்தியர்களும் டாக்டர்களும் பார்த்து தீராதென விடப்பெற்ற குஷ்டம், குன்மம், சுவாசகாசம், பாரிசவாய்வு, ஆரம்ப ஆணிக்கால், பீஜவீக்கம், நெரி கட்டி வரும் ஜுரம் பிளேக், காலரா, கண்டமாலை இன்னும்பல கடின வியாதிகட்கும் சிறந்த சஞ்சீவி ஔஷதங்கள் இருக்கின்றன. மேற்படி நோய்கள் ஸ்ரீ கௌரி தேவியின் அனுக்கிரகத்தால் அநேகம் குணப்பட்டு நற்சாட்சிப் பத்திரங்களும், தங்கமெடல்களும் பெற்றிருக்கிறேன். இதனை எம்மிடமுள்ள முழு விபரம் அடங்கிய கேட்லாக்கில் காணலாம். சில போலி வைத்தியர்கள் மலிந்துள்ள இக்காலத்தில் மேற்படி வியாதிகளைக் குணப்படுத்துகிறேன் என்றால் எம்மிடம் ஔஷதம் வாங்கி உபயோகிக்காத புதிய நண்பர்கட்கு நம்பிக்கை வருவது கஷ்டம்.

டாக்டர் V. R. சுந்தரம்,
ஸ்ரீகௌரி ஆயுர்வேத வைத்ய மந்திரம். 268, பைகிராப்ட்ஸ் ரோட், இராயப்பேட்டை, சென்னை.

விளம்பரம்.

சேலம் ஜில்லா, தர்மபுரி தாலூக்கா, பாப்பாரப்பட்டி, யூனியன் டவுனில் நடைபெறும் ஸ்ரீ முருகக்கடவுளுடைய ரத உற்சவ காலத்தில் தை மீ 1 தேதி (14-1-27) ரோகணி நக்ஷத்திர சுபதினமுதல் 10 தினம் வரையில் பிரபலமான மாட்டுச்சந்தை கூட்டப்படுகிறது.

இவ்வூர், மொரப்பூரிலிருந்து ஒசூருக்குப் போகும் S I.R. லயனில் தர்மபுரி ரயில்வே ஸ்டேஷனுக்கு 10 மைல் பாலக்கோடு, தளபள்ளி ஸ்டேஷனுக்கு 5 மைல், இருளப்பட்டி ரயில்வே ஸ்டேஷனுக்கு $3\frac{1}{2}$ மைல் தூரத்திலிருக்கிறது.

தங்கள் உண்மையுள்ள,
M. சின்னமுத்து முதலியார்,
பிரசிடெண்டு, யூனியன் போர்டு,
பாப்பாரப்பட்டி.

கொடுக்கப்பட்டது. இப்பொழுதும் அவர்களைச் சேர்ந்தவர்கள் பழையகோட்டைக்கு வருவார்கள்; வந்தால் கும்பிடமாட்டார்கள், அரிசிப்படி வாங்கிப்போவார்கள். எப்படி இருந்தாலும் உங்கள் நன்மையை நினைத்தேனும் அவர்களை முன்னுக்கு கொண்டு வாருங்கள். உங்களுடைய கலியாண காலத்தில் பறையனுக்கு பானைச்சோறு கொடுப்பதில் உங்களேஜண்டுகள் உங்களுக்கு மிச்சம் பிடிக்கிறார்கள். பந்தலில் மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் பார்ப்பனருக்கு தெக்ஷணை கொடுப்பதில் போட்டி போடுகிறீர்கள். போட்டிபோட்டதெக்ஷணையால் யாதொரு புண்ணியமோ புருஷார்த்தமோ வந்த குடும்பங்களைக் காணோம் அந்த பணத்தை ஏழைகளான இவர்களுக்கு உபயோகப்படுத்தினால் புண்ணியமும் பலனுமுண்டு. குடும்பம் க்ஷேமமடையும்.

பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்

உறையூர் கிளை.

தமிழ் மக்களது முன்னேற்றத்தைக் கருதியும், தமிழர் தங்கள் சுய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டும், இம்மாதம் 12உ ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 6 மணிக்கு உறையூரில் ஒரு பெருங்கூட்டம் குழுமியது. அன்று "பார்ப்பன ரல்லாத வாலிபர் சங்கம்" என்று ஒரு கழகம் நிறுவப்பட்டது. அக்கழகத்துக்கு கீழ்க்குறித்துள்ள வண்ணம் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

காப்பாளர்கள்.

திருவாளர். ப இரத்தினவேலு தேவாவர்கள், நகரபரிபாலன சபைத் தலைவர், திருச்சிராப்பள்ளி. திருவாளர். தி. பி. பிச்சை ரெத்தினம் பிள்ளையவர்கள். நிலக்கிழவர், உறுப்பினர், நகரபரிபாலன சபை, திருச்சிராப்பள்ளி. திருவாளர் தி. க. பெரியசாமி பிள்ளையவர்கள், ஜில்லா போர்டு உறுப்பினர், முத்துராஜமகாஜன சங்கத்தலைவர், உறையூர்

தலைவர்

திருவாளர் க. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், தலைவர் நாட்டாண்மை கழகம், உறையூர்.

உபத்தலைவர்.

திருவாளர். முத்துகிருஷ்ணஞ் செட்டியாரவர்கள் ஒப்பந்த வேலை, உறையூர்.

காரியதரிசி.

திருவாளர். தி. எஸ். நாகப்பபிள்ளையவர்கள் அமைச்சர், 'திருவுறந்தைத் தமிழ்ச் சங்கம்', உறையூர்.

உப காரியதரிசிகள்.

திருவாளர் W. D. இரத்தினம்பிள்ளையவர்கள், வியாபாரம், உறையூர். திருவாளர் K. V. M. இலக்குமணய்யா அவர்கள் அமைச்சர், தேவாங்க மகா ஜன சங்கம், உறையூர்.

போக்கிஷதார்.—திருவாளர் வே. நாராயணசாமி பிள்ளையவர்கள், உறையூர்.

இதர நிர்வாக சபை உறுப்பினர்கள்.

திருவாளர்கள் வி. தாண்டவராய பிள்ளையவர்கள், மாணிக்கம் பிள்ளையவர்கள், சதாநந்தம் பிள்ளையவர்கள், வேலாசாமி செட்டியாரவர்கள், ச. ம. சி.பரமசிவஞ் செட்டியாரவர்கள், சதாசிவ வேளாரவர்கள், சிவசங்கரம் பிள்ளையவர்கள், பி. ஷண்முகத் தேவரவர்கள், தி. என். இராமசாமி செட்டியாரவர்கள், ஏ. நாகரத்தின முதலியாரவர்கள், W. D தங்கவேல் பிள்ளையவர்கள், வி. இராமய்யா செட்டியாரவர்கள், W. D. சுப்பிரமணியத் தேவரவர்கள்.

12-12-26ல் நிறைவேற்றிய முக்கியத் தீர்மானங்கள்.

1 "இச்சங்கம் இந்து சமயத்தின் அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறது. இவ்விஷயத்தை அரசப் பிரதிநிதியாகிய மேன்மை தங்கிய லார்டு இர்வின் பிரபுக்குத் தெரிவிக்க வேண்டும்." (குறிப்பு—"Viceroy (camp) calcutta. Fray assent Madras Hindu Endowment Bill. Secretary Non-Brahmin Youth League" என்று தந்தி மூலம் அறிவித்திருக்கிறது.)

2 சென்னையில் குழுமிய தமிழ்நாடு காங்கிரஸ் மகா நாட்டில் திருவாளர் தண்டபாணி பிள்ளையவர்களை அவமரியாதையாக நடத்தியதற்கு காரணமாக இருந்த சில தலைவர்களையும் தொண்டர்களையும் இக்கழகம் கண்டிக்கிறது.

T. S. Nagappa Pillay,
Secretary, Non-Bramin Youth,
League, Woriur Branch.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

ராஜவைத்ய ஆஸ்ரமம்.

சரஸ்வதி விலாசம் பிரஸ்ஸுக்கு எதிரில் செவ்வாய்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்.

ஆயிரக்கணக்கான

ஆயிரக்கணக்கான வியாதியஸ்தர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-ஞு டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது)

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	...	ரூ. 5,00,000—0—0
வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு...		...	ரூ. 73,900—0—0
தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது	...	...	ரூ. 50,430—0—0
டிபாசிட்டுகள்	...	...	ரூ. 86,346—7—4
Reserve Fund காப்புத் திரவியம்		...	ரூ. 2706—0—0
நடை முதல் தொகை	...	...	ரூ. 1,50,275—9—5

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ்பிக்செட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடு:—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. இதற்கு பிரதி மாசமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிசிட்டு ஒரு வருஷ கெடு:—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20. 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் (அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்கு 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம், ரண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையிலாவதும் ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும் செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள் செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி நெம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஐவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிட்டரானால், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும், ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்குடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாசிட்டரானால், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வது பக்கம் (உ) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.

ஸ்ரீவில்லிபுத்தூர்

பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

அரரூட் பிஸ்கட்.

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

ரூஸ்பரி பிஸ்கட்.

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

பழம் கேக்.

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.

இனும் இனும்!!

ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள். இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்

மின்சார ரசம்.

எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண ஸம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெ ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது **"ஆநந்த குண போதினி."**

ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவரத் துவங்கிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு $1\frac{1}{2}$ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-சகு விலை ரூ. 2—0—0.
அந்நிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதறாஸ்.

---

200 தொழில் முறைகள்.

கூலிக்காரன்

சீமானயினன்

ஒவ்வொருவரும் தன் முயற்சியால் செய்து பணம் சம்பாதிக்கக் கூடிய முறைகளைக் கற்று

6 4 பாகங்கள், 34 அத்தியாயங்கள், சர்ப்பத்து, ஐஸ் கிரீம், இங்கி, கண்ணாடி ஒட்டும் சொலுஷன், செயற்கை தங்கம், தீப்பெட்டி, சிகரெட்டு, ரசம் பூசுதல், ரப்பர் ஸ்டாம்பு, சோப், செண்டு கூந்தல் தைலம், பற் பொடி, தேள் விஷசஞ்சீவி, வீரிய விருத்தி மாத்திரை, அஞ்சனம் முதலிய 200 அபூர்வ செய்முறைகள் புத்தகம் விலை ரூ. 4-0-0 வி.பி. வேறு. இதன் 14பக்கம் விபரப்புத்தகம் இனாம்.

ஆர்ட் புக்ஸ் கம்பெனி.
26 திருச்சினாப்பள்ளி.

அம்பட்டன் பீயர்ஸ்

சோப் செய்து கோடீஸ்வரனாகிய உண்மை 24பக்கம் அணா 2. "என் சரித்திரம்" நான் ரூ. 4000 சம்பாதித்த வரலாறு. அணா 2. எத்தே சத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.

ஆர்ட் புக்ஸ் கம்பெனி, திருச்சினாப்பள்ளி.

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.